புதிய சமுதாயம்

KDN 10657

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்

25-6-1977




7

PUTHIYA SAMUDHAYAM

50காசு

யுனைடெட் ஆசியன் பேங்க்

பேர்ஹாட்டின் தங்க நகைக் கடன் திட்டம்



உங்களுடைய தற்காலிகப் பொருளாதாரத் தேவைகளைச் சமாளிக்க—எங்களுடைய நிலையான நிவாரணம்

உங்களுக்குச் சில வேளைகளில் அவசரமாகப் பணம் தேவைப்படலாம். தற்காலிகமாக பண்டிகை நாட்களிலோ, மருத்துவச் செலவுகளுக்கோ, அல்லது எதிர்பாராத விதமாகவோ பணமுடை ஏற்பட வழியுண்டு. உங்களுடைய துன்பத்தை நீக்கி இன்பமளித்திட, எங்கள் யுனைடெட் ஆசியன் பேங்கில் கவர்ச்சி மிக்க தங்க நகைக் கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்தி இருக்கிறோம். இது உங்களுடைய பொருளாதாரத் தேவைகளுக்கேற்ப அவ்வப்போது சிறப்பாக உதவி புரியும்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் என்ன? உங்களுடைய தங்க நகைகளை, எங்களுடைய பாதுகாப்பில் ஈடுவைத்து, அதற்கு ஏற்ற விகிதாச் சாரத்தில் எங்களிடமிருந்து கடன் பெறலாம்.

உங்களுடைய நகையின் மதிப்பீட்டில் 80 சதவிகிதத் தொகையை நீங்கள் கடனாகப் பெறலாம். குறைந்த அளவில் நீங்கள் கடன் பெறும் தொகை 50 ரிங்கிட் முதல் அதிகபட்சம் 5,000 ரிங்கிட்வரை மிகக் குறைந்த வட்டிக்குக் கடன் பெறலாம்.

இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தக் கடன் தொகை முழுவதையும் சுலபமான மாதாந்திரத் தவணைகளிலும் திருப்பிச் செலுத்த முடியும்.

இன்னும் அதிக விளக்கங்கள் பெறவேண்டுமா? தயக்கம் வேண்டாம். அன்புடன் அணுகுங்கள்—அருகே உள்ள யுனைடெட் ஆசியன் பேங்க் கிளைக்கு. இன்பமுடன் பெறலாம்—இலவச யோசனைகளை.

யுனைடெட் ஆசியன் பேங்க் பேர்ஹாட்

முழுமையான சேவையை வழங்கும் பேங்க்

பந்திங், பத்தாங் பெர்ஜுந்தை, ஈப்போ, ஜோகூர்பாரு, கிள்ளான், கோலாலம்பூர்,

NA-8.

எங்கே போறது?



கரு. திருவரசு...

அப்பன் படிக்கலை, அம்மா படிக்கலை.
அதனால் நாங்களும் அறவே படிக்கலை!
எப்போப் பிறந்ததோ எழுதி வைக்கலை!
எந்த வழிபோக? எதுவும் தெரியலை!

பொறந்து வளர்ந்தது எல்லாம் தோட்டமே!
போங்க போங்கன்னா எங்கே போறது?
இருந்து சுகிக்கவா இடத்தைக் கேட்கிறோம்?
ஏதோ உழைக்கிறோம், உயிரு பிழைக்கிறோம்!

ஒண்ணு ரெண்டென ஏதோ திட்டமாம்!
ஒத்த வந்தது மூணாந் திட்டமாம்!
என்ன விளங்குது! எங்கள் நிலைமையோ
எப்போதும் பழைய குருடி குருடிதான்!

போன கதையெல்லாம் தொலைஞ்சு போகட்டும்!
பொழைக்கத் தெரியாம கெட்டு மெலிஞ்சுட்டோம்!
ஞானம் பொறந்தது போல்இனிமேலே
நம்ம தலைவர்கள் பாதை நடக்கிறோம்!

உழைச்சு வாழுற வழியைக் காட்டுங்க!
உடம்பைச் சாய்க்க ஓர் இடத்தைக் காட்டுங்க!
பிழைச்சாப் போதுமென் றிருந்தோம்; தவறுதான்!
பிழையும் புரிஞ்சது! பாதை தெரியுது!

இன்றோ நாளையோ நம்மவர் எல்லாம்
ஒன்றெனச் சேர்ந்தால் போதும் சாமியே!
நன்றோ தீமையோ நாங்க இருக்கிறோம்!
நடத்துங்க எல்லார்க்கும் நன்மையே நினைக்கிறோம்!

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

திருவள்ளுவர் ஆண்டு 2008 ஆனி 11
கம்பம் 1 ஃ (25-6-1977) ஃ குடும்பம் 7

வீட்டுமனை நிலங்கள்

சித்தியவான் வட்டாரத்தைச் சேர்ந்த தேசிய நில நிதிக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் 160 பேருக்குக் கூட்டுறவுத் தந்தையும் தேசிய ஒற்றுமை வாரியத்தின் தலைவருமான மாண்புமிகு துன் வீ. தி. சம்பந்தன் அண்மையில் வீட்டுமனை நிலப்பட்டாக்களை வழங்கியிருக்கிறார். மொத்தம் 62 ஏக்கர் நிலம் இவ்வாறு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மலிவு விலையில் பங்கீடு செய்து தரப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் உறுப்பினருக்கும் 2000 வெள்ளிக்கு விலை போகக் கூடிய கால் ஏக்கர் நிலம் 600 வெள்ளி விலைக்கு வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

வீட்டுமனை நிலப்பட்டாக்கள் வழங்கும் இத்திட்டம் சிரம்பான், போர்ட்டிக்சன், மலாக்கா வட்டாரங்களிலும் விரைவில் அமுல்படுத்தப்படுமென்றும் துன் சம்பந்தன் அறிவித்திருக்கிறார். தோட்டப் பாட்டாளிகளாகிய சங்க உறுப்பினர்கள் இந்தக் கால் ஏக்கர் நிலத்தினைப் பயிர் செய்வதற்கும், சொந்த வீடு கட்டிக் கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்ள முடியும். வீடு கட்டிக் கொள்வதற்குத் தேவைப்படுகிற உதவிகளையும் கூட்டுறவுச் சங்கம் செய்யுமென்று சங்கத்தின் தலைமை நிர்வாகி திரு. கே. ஆர். சோமசுந்தரம் உறுதியளித்திருப்பதும் வரவேற்கத்தக்கது.

நெடுகிலும் தோட்டப் பாட்டாளிகள் தோட்டங்களில் தங்களுக்குத் தரப்படும் லயங்களிலிருந்தே காலத்தைக் கழித்து வந்திருக்கின்றனர். சொந்த வீடு, சொந்த நிலம் என்னும் உணர்வு சுதந்திர நாட்டுச் சூழ்நிலையின் விளைவாக இப்பொழுதுதான் தலையெடுக்கத் தொடங்கியிருக்கிறது. அந்த உணர்வுக்கு உருவம் நல்குகிற முறையில் தேசிய நில நிதிக் கூட்டுறவுச் சங்கம் தன் உறுப்பினர்களுக்கு வீட்டுமனைகள் வழங்க முற்பட்டிருப்பது மற்ற தோட்ட நிர்வாகங்களுக்கு முன்மாதிரியான நடவடிக்கையாகும்.

அரசாங்கமும் மற்றும் அரசாங்கச் சார்பு நிறுவனங்களும் முழுமூச்சாக மக்களுக்கு மலிவு வீடுகளை வழங்க முற்பட்டிருக்கிற இத்தருணத்தில் தோட்ட நிர்வாகங்களும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைகளை வழங்குவதற்குத் தீவிரமாகச் செயலில் இறங்குமென்றும் எதிர்பார்க்கிறோம். இவ்வகையில் சிலாங்கூர் மாநில அரசு தோட்ட நிர்வாகங்களைத் தூண்டித் தொழிலாளர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருவதற்கு உருவான செயல்திட்டத்தை மேற்கொண்டிருப்ப

புதிய சமுதாயத்தின் முகவரி

131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், [2ஆவது மாடி] கோலாலம்பூர் 01–08. தொலைபேசி:80839

தும் நினைவுகூரத்தக்கது. மற்ற மாநில அரசுகளும் தோட்டப் பாட்டாளிகளுக்கு இவ்வாறு சொந்த வீடு கிடைப்பதற்குத் தோட்ட நிர்வாகங்களைத் தூண்டுவது அவசியமாகும்.

அண்மையில் தமது 58ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய கூட்டுறவுத் தந்தை துன் வீ. தி. சம்பந்தன் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வீட்டு மனைகளைத் தமது பிறந்த நாள் பரிசாக வழங்கியிருப்பதாகவே கருதுகிறோம். தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம் தன் உறுப்பினர்களில் மிகப்பெரும்பான்மையினராக விளங்கும் தோட்டப் பாட்டாளிகளுக்கு இத்தகைய அநுகூலங்களைத் தொடர்ந்து முனைப்பாக வழங்கி மற்ற தோட்ட நிர்வாகங்களும் அவற்றைப் பின்பற்றுவதற்கு வழிகாட்டி வருமென்றும் நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம்.

துணைத்தலைவர்

ம. இ. கா. தேசியப் பேராளர் மாநாடு ஜூலை 2, 3 தேதிகளில் நடைபெறவிருக்கிறது. அந்த மாநாட்டில் முக்கிய அம்சமாகத் தேசியத் துணைத்தலைவர் தேர்தலும் மற்றும் மூன்று உதவித் தலைவர்கள்; மூன்று மத்திய செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும் அமையுமென்று சொல்லலாம். அதிலும் தேசியத்துணைத்தலைவர் தேர்தலே எல்லோருடைய கவனத்தையும் கவரப்போகிற அம்சமாக அமைவது திண்ணம்.

தேசியத் துணைத்தலைவர் பதவிக்குத் துணையமைச்சரும் ம. இ. கா. வின் தேசிய பொதுச் செயலாளருமான மாண்புமிகு சுப்பிரமணியமும், சுங்கை சிப்புட் நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய உதவித் தலைவரும், சிலாங்கூர் மாநில ம. இ. கா. தலைவருமான மாண்புமிகு சாமிவேலுவும் போட்டியிடுகின்றனர். இருவரும் புதிய சமுதாயத்தைப் பூரணமாகப் பிரதிநிதிக்கும் இளரத்தங்கள். சமுதாய மேம்பாட்டில் உண்மையான பிடிப்பும் துடிப்பும் கொண்டவர்கள்.

ம. இ. கா. வில் தேசியத் துணைத் தலைவர் பதவி பொறுப்புமிக்க மிக முக்கியமான பதவியாகும். துன் சம்பந்தன் தேசியத் தலைவராக இருந்த சமயத்தில் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம்தேசிய துணைத் தலைவராக நீண்டகாலம் பொறுப்பு வகித்துவந்தார். அதன் பிறகு தேசியத் தலைவராக டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அப்பொறுப்பினை அமரர் டத்தோ ஆதிநாகப்பன் ஏற்றுக்கொண்டார். இந்தப் பொறுப்புமிக்க இடத்திற்குப் போட்டியிடுகிற திருவாளர்கள் சுப்பிரமணியம், சாமிவேலு இருவருக்கும் நம் மனமுவந்த வாழ்த்துக்களை முன்கூட்டியே தெரிவித்துக்கொள்கிறோம்.

இருவரும் வெற்றிபெற இயலாது. எனினும் இத்தேர்தலில் வெற்றி பெற்றுத் துணைத்தலைவராக யார் வந்தாலும் அவர்கள் ம. இ. கா. வின் கட்டுக்கோப்பையும் ஐக்கியத்தையும் பேணிக்காப்பதற்குத் தேசியத்தலைவர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்திற்கு உறுதுணையாக—நல்ல தளபதியாக விளங்க வேண்டியது இன்றியமையாதது. இந்தப் போட்டியினாலும் அதன் பலனாக நேரிடுகிற வெற்றி–தோல்விகளினாலும் கட்சியின் கட்டுக்கோப்பு குலைந்துவிடாதபடி பொறுப்புடன் கட்சியின் எல்லாத் தரப்பினரையும் அரவணைத்துச் செயல்பட வேண்டிய பொறுப்பு, புதிய துணைத்தலைவருக்கு இருக்குமென்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம்.

அதுபோலவே இப்போட்டியில் தோல்வியைத் தழுவ நேரிடுகிற வேட்பாளரும் தேசிய தலைமைத்துவத்திற்கும் கட்சிக்கும் தாம் ஆற்றவேண்டிய பொறுப்புக்களை ஆற்றுவதோடு கட்சியின் கட்டுக்கோப்பைத் தொடர்ந்து பேணுவதற்கு மனமுவந்து பாடுபடுவதும் அவசியமாகும்.

ம. இ. கா.வின் கட்டுக்கோப்பும் ஐக்கியமும் இந்திய சமூகத்தின் அரசியல் பலமாக அமைந்திருக்கிற காரணத்தினால் ம. இ. கா. வில் பிளவு எந்தக் காரணத்தினாலும் ஏற்படுவது தவிர்க்கப்படவேண்டும். சிறுபான்மை சமூகமாகவுள்ள இந்திய சமூகம் ம. இ. கா.வில் பிளவு ஏற்படுமானால் மேலும் உருக்குலைந்து போகும். ஆகவே, துணைத் தலைவர் தேர்தலும் மற்ற பதவிப் போட்டிகளும் ம. இ. கா.வின் கட்டுக்கோப்பைச் சிதைத்துவிடாதபடி எல்லா மட்டங்களிலும் தலைவர்கள் பொறுப்புடன் நடந்துகொள்வர் என்று சமூகம் எதிர்பார்ப்பது நியாயமே!

மூத்த தலைவர்கள்

ம. இ. கா.வின் மூத்த தலைவர்களான துன் வீ. தி. சம்பந்தன், பெருநிலக்கிழார் என். டி. எஸ். ஆறுமுகம்பிள்ளை முதலியவர்களை மறுபடியும் கட்சியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று பேரா மாநில ம. இ. கா. மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. பகாங் மாநில ம. இ. கா.தலைவர் செனட்டர் அபுவும் இந்தக் கருத்தை ஆதரித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். இந்திய சமூகம் ஒரே அணியில் எந்தவிதமான பிளவுமின்றி இயங்கவேண்டிய அவசியம் நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. சமூகத்தின் சக்தி சாதனங்கள் அனைத்தையும்ஒருமுகமாகத்திரட்டப்பட்டு சமூகத்தின் மேம்பாட்டுக்குப் பயன்படுத்தவேண்டிய கட்டாயம் இருப்பதால், சமூகத் தலைவர்கள் அனைவரும் இணைந்து செயல்படுவது முக்கியமாகும். இவ்வகையில் ஏதோ காரணங்களினால் ம. இ. கா.விலிருந்து ஒதுங்கி இருக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்து வருகிற மூத்த தலைவர்களுக்கும் ம. இ. கா. தமது கதவுகளைத் திறந்துவிடுவது சமூகத்திற்கு பெரிதும் நன்மை பயக்கும். பழைய ம.இ.கா.தலைவர்திரு.கே.எல். தேவாசர், ம. இ. கா.பொதுச் செயலாளர் திரு. க. குருபாதம் முதலிய பழைய முகங்களை எல்லாம் தேடிப்பிடித்துத்தக்கவாறு ம. இ. கா. பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே நம் விண்ணப்பமாகும்.

சீரழிந்து பேரழிந்து சிந்தனையி லேபுரட்சிக்
கூரழிந்து தோள்போர்த்த கூடழிந்து கூலிக்கே
மாடா யுழைந்து மதியழிந்தார் தம்மையெண்ணி
ஏடா மகனே! இளநகையும் செய்தனையோ!

அட்டையில்:
முகமது காசிம்—கதிஜா தம்பதிகளின் செல்வன் ஜாகிர் ஹுசேன்

வண்ணப்படம்: மாயன்



சி. சுப்பிரமணியம்

"தேசிய துணைத்தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் ம. இ. கா. வினால் தயாரிக்கப்பட்டுள்ள நீலப் புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பல திட்டங்களை முழுமையாக அமுலாக்கம் செய்ய முயலுவதே என்னுடைய முக்கிய பணியாக இருக்கும். கூட்டுத் தலைமைத்துவ அடிப்படையில் எல்லாத் திட்டங்களும் டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்தின் பெயரிலும் கட்சியின் பெயரிலும் உருவாக்கப்பட்டு, அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

எனவே தனிப்பட்ட முறையில் நான் இதைச் செய்தேன் அதைச் செய்தேன் என்று நான்கூற முன்வரவில்லை.

கட்சியில் தேசிய ரீதியில் தலைவராக யார் இருந்தாலும் கூட்டுத் தலைமைத்துவ அடிப்படையில் நிறை, குறைகளுக்குச் சமமாகப் பொறுப்பு ஏற்க வேண்டும். அவ்வாறு ஏற்கவில்லையானால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அழகல்ல.

தேர்தல் காலங்களிலே வேட்பாளர்கள் பக்கம் பக்கமாக பத்திரிகையில் விளம்பரம் போடுகின்றார்கள். பிறகு அவர்களே தங்களை ஏழை என்றும் குறிப்பிட்டுக் கொள்கின்றனர். இதில் யார் ஏழை யார் பணக்காரர் என்பது புரியாமலேயே உள்ளது.

என்னைப் பொறுததவரை நான பணக்காரனா என ஆய்வதற்கு ஒரு குழு வைத்து ஆராயச் செய்யலாம். அந்தக் குழு என்ன கூறுகிறதோ அதற்கு நான் கட்டுப்படுகிறேன்.

நல்ல தலைமைத்துவம் சமுதாயத்திற்கு வேண்டும் என்பது நல்ல கருத்து. அதை வரவேற்க வேண்டும். படித்தவர், படிக்காதவர் என்ற பாகுபாட்டினைக் காட்டி சமுதாயத்தில் பிளவு செய்ய வேண்டாம். ம. இ. கா. வில் பட்டதாரிகளை ஒதுக்க வேண்டும் என எல்லா உறுப்பினர்களும் ஒருமித்த கருத்துக்களை கூறினால் அதற்கு மதிப்பளித்து நான் ம இ கா விலிருந்து ஒதுங்கிக் கொள்கிறேன்.

இந்த நாட்டில் பத்துச் சதவீதத்தினர் மட்டுமே வாழ்ந்து வருகின்றனர். இதில் பல குழுக்கள், அணிகள் என பிரச்சினை எழுப்பினால் மற்ற சமூகம் எந்த அளவு நமக்கு மதிப்புத் தரமுடியும்- எந்தப் பிரச்சினைக்கு எப்படி மற்ற சமூகத்துடன் சேர்ந்து தீர்வு காண முடியும்."



ஜூலை 2
இடம்:
தேவான் பகாசா

'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்" என்பது வள்ளுவன் வாக்கு.

இந்தக் குறளின் கருத்துப்படி ம. இ. கா. தேசியத் துணைத் தலைவர் பதவியை ம. இ. கா. பேராளர்கள், நடைபெறவிருக்கும் தேசிய மாநாட்டில் தகுந்தவரிடம் ஒப்படைக்கப் போகிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் ம. இ. கா. தேசியத் துணைத் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் ம. இ. கா. வின் தற்போதைய உதவித் தலைவர்களுள் ஒருவரான திரு ச. சாமிவேலுவும், தேசியப் பொதுச் செயலாளர் திரு சுப்பிரமணியமும், தாங்கள் அப்பதவிக்குப் போட்டியிடும் நோக்கத்தையும், வெற்றி பெற்றால் செய்ய நினைக்கும் சாதனைகளையும், தத்தம் அறிக்கைகளிலும், பேச்சுக்களிலும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

அவற்றிலிருந்து பிழிய முடிந்த- அல்லது பிழியக் கிடைத்த- கருத்துச் சாற்றினை இங்கே தந்துள்ளோம்.



ச. சாமிவேலு

"எண்ணித்துணிக கஎன்று வள்ளுவன் கூறினான். அதேபோல் நாங்களும்எங்களுக்கு ஆதரவாக எத்தனை பேராளர்கள் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்த பின்னரே தேசிய துணைத்தலைவர் பதவிக்குப் போட்டியிடத் துணிந்தேன். என்னுடைய லட்சியம் அனைத்தும் சமூக நலனே தவிர மேல் மட்டத்தை எட்டியவுடன் தனிப்பட்ட சிலரை திருப்திபடுத்த வேண்டும் என்பதல்ல.

"இன்றைய ம. இ. கா. வுக்குத் தேவைப்படுவது, மக்களின் உணர்வை அறிந்த, அவர்களின் நிலையைப் புரிந்துகொண்டு, அவர்களின் துன்பங்களில் பங்குகொண்டு, அதனை மாற்றியமைக்க வல்லமைபெற்ற, துடிப்புமிக்க, அடிமட்ட அங்கத்தினர்களின் அங்கிகாரம் பெற்ற ஒருவரே தேவைப்படுகிறார்.

சமீபகாலமாக, எல்லா இனத்தவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவரே கட்சியின் துணைத்தலைவராக இருக்கவேண்டும், அதுதான் நல்லது என்று கூட்டங்களில் பேசி வருகிறார்கள். இந்தச் சித்தாந்தம் எப்போது தொடங்கியது எனத் தெரியவில்லை.

ம.இ.கா. வில் இந்தியர்களுக்குத் தேவைப்படும் தலைமைத்துவம் எலலா இனத்தவர்களாலும் அங்கிகரிக்கப்பட்ட தலைமைத்துவமாக இருக்கவேண்டுமெனக் கருதினால் சகல இனத்தவரையும் வைத்தல்லவா தேர்தல் நடத்தவேண்டும்.

என்னைப் பொறுத்தவரை நான் சகல இனத்தவரையும் பிரதிநிதிக்கிற ஒரு நாடாளுமன்ற உறுப்பினன். இதுவரை நாடாளுமன்றத்திலே வீற்றிருந்த ம. இ. கா. உறுப்பினர்கள் பேணிக்காத்து வந்த சகல இனமக்களின் பிரச்சினைகளையும் உரிமைகளையும் எடுத்துக்கூறும் பண்பை நூறு மடங்கு நான் பேணி வந்துள்ளேன்.

எனவே, நாடாளுமன்றத்தில் இதுவரை எனக்கு அளிக்கப்பட்டு வந்துள்ள கௌரவம் என் கொள்கையின் காரணமாகவே என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, சகல இனத்தவராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒரு துணைத் தலைவராக இருப்பதற்குரிய எல்லா லட்சணங்களும் என்னிடமிருக்கிறது என்ற காரணத்தாலேயே நான் இத்தேர்தலில் போட்டியிடுகிறேன்."

வழிகாட்டுகிறார் வள்ளுவர்.

சிறந்து வாழ்வோம் வாரீர்!

முருகு சுப்பிரமணியன்

வேண்டுகோள்

இக்கட்டுரைத் தொடரைப் படிக்கின்ற "புதிய சமுதாயம்" வாசகர்கள் அனைவருக்கும் என் பணிவான வேண்டுகோள் இது தான்:

திருக்குறள் ஒன்று உங்களிடம் கையேடுபோல எப்பொழுதும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்பொழுதே டாக்டர் மு. வரதராசனாரின் தெளிவுரையுடன் கூடிய திருக்குறள் பதிப்பொன்றைப் புத்தகக் கடையிலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் புதிய சமுதாயத்திற்கு $2.50க்கு போஸ்டல் ஆர்டர் அனுப்புங்கள். பதிவு அஞ்சலில் அனுப்புகிறோம்.

"புதிய சமுதாயம்" படிக்கின்ற குடும்பங்கள் அனைத்திலும் திருக்குறள் அன்றாடப் பயிற்சி நூலாகத் திகழ வேண்டும் என்னும் விருப்பத்திலேயே இந்த வேண்டுகோளை உங்கள் முன்பு வைக்கிறேன். திருக்குறளை நாம் அனைவரும் இன்றே படிக்கத் தொடங்குவோம். திருக்குறள் பயிற்சி வகுப்புக்கள் நாடெங்கும் தொடங்கட்டும். திருக்குறள் மனனப் போட்டிகளை, திருக்குறள் கட்டுரைப் போட்டிகளை, திருக்குறள் பேச்சுப் போட்டிகளை நம் சிறுவர்களுக்கு நடத்த முற்படுவோம்.

திருக்குறளை ஓதுகிற போட்டிகள் மாவட்ட ரீதியிலும், மாநில ரீதியிலும், தேசிய ரீதியிலும் விரிவான அளவில் நடத்துவதற்குத் திட்டங்களை வகுத்துச் செயல்படுவோம்.

திருக்குறளை நமது அன்றாட வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்ற கையேடாக– நமது சிக்கல்களைத் தீர்க்கின்ற நற்றுணைவனாகப் பயன்படுத்துவோம். திருக்குறளைக் கசடறக் கற்கின்ற- கற்று அதன் வழி நிற்கின்ற - சமுதாயமாக நமது சமுதாயத்தை மாற்றியமைப்பதற்குச் சமுதாயத்தின்பால் அக்கறையும், தமிழ்ப்பற்றும் கொண்ட தொண்டர்கள் ஆங்காங்கு முனைய வேண்டும் என்பது எனது விருப்பமாகும். ஊருக்கு ஓரிருவர் திருக்குறளைப் பரப்புகின்ற இந்தப் பணியில் தலைப்பட்டால் போதும்! இந்தப் பணியில் வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரம் அவர்கள் செலவிட்டால் போதும். வீடு தோறும் திருக்குறளை வழங்குவது. ஒவ்வொரு குடும்பத்திலும் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் குறளைப் பயிலும் ஆர்வத்தைத் தூண்டுவது., திருக்குறள் பயிற்சி வகுப்புக்களை வாரந்தோறும் நடத்துவது. அப்பயிற்சி வகுப்புக்களுக்கு மாணவர்கள் முறையாக வருவதற்கு வகை காண்பது முதலான வேலைத் திட்டங்களை அத்தொண்டர்கள் படிப்படியாக நிறைவேற்றி வர வேண்டும். நாளடைவில் திருக்குறளை முழுமையாகப் பயின்று வாழ்க்கையிலும் அதனை நன்கு கடைப்பிடிக்கின்ற தெளிவு பெற்ற ஒரு சமுதாயத்தை இத்தொண்டர்கள் உருவாக்கி விட இயலும்.

இப்பணி சிறப்பதற்கு இக்கட்டுரைத்தொடர் துணை புரியுமென்று நம்புகிறேன். இதில் ஈடுபடுகிற திருக்குறள் தொண்டர் கூட்டம் தங்களின் வேலைத்திட்டம் பற்றி எங்களுக்கு எழுதலாம். வேண்டிய ஆலோசனைகளை உங்களுக்குக் கூறுகிறோம். தேவைப்படுகிற உதவிகளை இயன்றவரை செய்கின்றோம். இத்திருப்பணியைப் புதிய சமுதாயமும், அதன் வாசகர்களும் கூட்டுத் திருப்பணியாகச் செய்ய முனைவோம்.

அதுமட்டுமன்றி இக்கட்டுரைத் தொடரைப் படிக்கின்ற வாசகர்கள் தங்களுக்கு வாழ்க்கையில் நேருகின்ற சிக்கல்களையும், சோதனைகளையும் கூடப் "புதிய சமுதாயத்"திற்கு எழுதுவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். வள்ளுவரின் துணை கொண்டு அப்பெருந்தகை காட்டுகிற தீர்க்கமான மார்க்கத்தில் நமது சிக்கல்களைத்' தீர்ப்பதற்கும் முயல்வோம். வாசகர்கள் எழுதுகிற கடிதங்கள் இக்கட்டுரைத் தொடரில் விவாதிக்கப்படும். ஆனால் ஊரும் பெயரும் ரகசியமாக இருக்கும். ஆகவே, வாசகர்கள் மனந்திறந்து கடிதங்களை அனுப்புவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திருக்குறள், வாழ்க்கைக்கு உண்மையிலேயே பயன்படுகிறதா என்று சோதித்துப் பார்க்கின்ற முயற்சியே இக்கட்டுரைத் தொடராகும். ஆகவே, இதன் வெற்றிக்கு வாசகர்களின் நேர்முகத் தொடர்புமடல்கள் ஏராளம் தேவை. இந்த ஒத்துழைப்பைப் புதிய சமுதாயம் வாசகர்கள் தாராளமாக வழங்க முன்வருவார்களென்றுநம்புகிறேன்.

நமக்கு வழிகாட்டியாக நாம் எடுத்துக்கொள்கிற முதற்குறள் இதுதான்:

"நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்"

திருக்குறளின் பொருட்பாலில் "பண்புடைமை" என்னும் 100—வது அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கும் 999—வது குறள்மணி இது.

999 என்பது தொலைபேசியில் அவசர உதவிக்குப் போலீசார், ஆம்புலன்ஸ், தீயணைப்புப்படை போன்றவர்களை அழைக்கின்ற எண் என்பது குறிப்பிடத்தக்கது. நமக்கு உதவும்படி வள்ளுவருக்கு விடுக்கின்ற அழைப்பு வரிசையில் முதற்குறளின் எண்ணும் 999 ஆக அமைந்திருப்பது எதிர்பாராத இயல்பான பொருத்தமாகும்.

இந்தக் குறளுக்கு டாக்டர் மு. வ. எழுதியிருக்கும் தெளிவுரை வருமாறு:

"பிறரோடு கலந்து பழகி மகிழ முடியாதவர்க்கு மிகப் பெரிய இந்த உலகம் ஒளியுள்ள பகற்காலத்திலும் இருளில் கிடப்பதாம்"

குறளையும் இந்தத் தெளிவுரையையும் பலமுறை படியுங்கள்; பொருள் நன்கு விளங்குவதோடு மனப்பாடமே ஆகிவிடும்.

ஒரு குறிப்புப் புத்தகம் போட்டு இந்தக் குறளையும், தெளிவுரையையும் பத்து அல்லது இருபது முறை எழுதுங்கள்; மனதில் பசுமரத்தாணி போல் அழுத்தமாகப் பதிவதற்கு இது சிறந்த வழி.

இரவில்தான் மனிதர்களின் நடமாட்டத்திற்கு வீதி விளக்குகள், மாட விளக்குகள், வீட்டு விளக்குகள் தேவை. பகலில் சூரிய வெளிச்சம் பூவுலகம் முழுவதற்கும் ஒளியை நல்கிவருகிறது. பூமியின் சுழற்சியினால் சூரிய வெளிச்சம் சரிபாதி உலகிற்கு 12 மணி நேரமும் மறுபாதிக்கு 12 மணி நேரமும் மாறி மாறிக் கிடைக்கிறது. பூவுலகின் பகல் நேரத்தைச் சூரியன் என்னும் ஒரே விளக்கு வெளிச்சமாக - பிரகாசமாக வைத்துக் கொள்வதற்குத் துணிபுரிகிறது. அதனால்தான் சூரியனுக்குப் பகலவன் என்னும் பெயரிட்டு அழைக்கிறோம். கோடி சூரியப் பிரகாசம் என்று போற்றிப் புகழ்கிறோம். "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைத் தொடங்கியதிலும் பொருளுண்டு. கதிரவனுக்கு நன்றிக்கடனாக விளையும் புது நெல்லை ஆக்கிப் படைக்கின்ற பொங்கல் திருநாளும் இதனால்தான் எழுந்தது போலும்! "சூரிய நமஸ்காரம்" போன்ற வழிபாட்டு நடைமுறைகளும், சூரியன் நாள் தவறாமல் ஆற்றுகின்ற ஒளி கூட்டும் இப்பெரும் பணிக்கு மனிதன் காட்டுகின்ற பணிவுமிக்க அஞ்சலியேயாகும்.

தடுமாறும் மண்டுகங்கள்

மனிதனுக்குச் சூரியன் தன் கோடானுகோடி கதிர்களைப் பரப்பிப் பிரகாசமிக்க வெளிச்சம் நிறைந்த பகல் நேரத்தை வழங்கியிருக்கின்றான். ஆனால் இந்தப் பிரகாசம் நிறைந்த பகல் நேரத்தையும் இருளாக இருண்ட உலகமாக மாற்றிக் கொண்டு விடுகிற மண்டுகங்கள் மனிதரிடையே ஏராளம் உண்டு. வெளிச்சமில்லாத இரவில் - இருளில் தடுமாறுகிறவர்களைப் புரிந்து கொள்ளமுடியும். ஆனால்ஒளிவெள்ளம் பாய்ந்துகொண்டிருக்கிற பகலில்-ஒவ்வோர் உயிருக்கும்இயங்கும் ஆற்றலை ஊட்டிக் கொண்டிருக்கிற சூரிய ஒளியில் தடம் தெரியாமல், இடம் புரியாமல் வாழத் தெரியாமல் தடுமாறுகிறவர்கள் கண்ணிருந்தும் குருடர்களுக்கு ஒப்பானவர்கள்!

வெளிச்சத்தின் துணையின்றிக் கண்களால் பார்க்க இயலாது. பகல் நேரத்தில் இந்த உதவியைச் சூரிய வெளிச்சம் கண்களுக்குத் தாராளமாக வழங்குகிறது. பார்வை மங்கலாக உள்ளவர்கள் கூடச் சூரிய வெளிச்சத்தினால் நன்கு நடமாட முடியும். படிக்க முடியும், எழுத முடியும்.

இப்படிச் சூரிய வெளிச்சம் பரவிப் படர்ந்து உலகம் முழுவதையும் பிரகாசிக்க வைத்துக் கொண்டிருக்கும் பகல் நேரத்திலும் கண்ணிருந்தும் குருடர்களாக, ஒளியிருந்தும் இருளில் தடுமாறுகிறவர்களாக அவலத்தில் மூழ்கிக் கிடக்கும் பரிதாபத்திற்குரிய ஜீவன்களை வள்ளுவர் இந்தக் குறளில் அடையாளம் காட்டுகிறார்.

சிரித்து வாழத் தெரியாதவர்கள் - பிறரோடு கலகலப்பாகக் கூடிப்பேசி மகிழத்தெரியாதவர்கள், ஆனந்தமாக, கொண்டாட்டமாக வாழ்க்கையை அமைத்துக் கொள்ள அறியாத அவர்களே - வள்ளுவர் காட்டுகிற அந்தப் பரிதாப ஜீவன்கள்!



தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்க அக்கிராசனரும், பிரபல சமூக சேவையாளருமான திரு கே. கே. சாமி அவர்களின் புதல்வி லோகேஸ்வரிக்குக் கடந்த 1.6.77 புதன்கிழமையன்று ஈப்போவில் திருமணம் நடைபெற்றது. மணமகன் சுபாஷ் சந்திரா, ஈப்போ திரு. கு. ம. கோவிந்தசாமி பிள்ளை அவர்களின் புதல்வராவார்.

அவர்களுக்குப் பகல் நேரம்கூட இருட்டுத்தான்; இருண்ட உலகம் தான்! சூரிய வெளிச்சத்திலும் அவர்களால் உலகத்தைப் பார்க்க இயலவில்லை. வாழுகின்ற வழி அவர்களுக்குப் புலப்படவில்லை.

பரந்து விரிந்து கிடக்கின்ற இந்த உலகத்தில் சகோதர மக்களோடு சிரித்துப்பேசிக் கூடிக் குலாவிக் கலகலப்பாக வாழ்கிறவர்கள் உலகத்தைப் புரிந்துகொண்டவர்கள்; வாழத் தெரிந்தவர்கள்! அவர்களுக்குப் பகல் நேரமும், சூரிய வெளிச்சமும் நூற்றுக்கு நூறு பங்கு துணை புரிகின்றன.

இருளைக்கூட-சூரியன் பவனிவராத இரவு நேரங்களைக்கூட-அந்தச் சாமர்த்தியசாலிகள் பகலாக மாற்றிக்கொண்டு பயனடைவார்கள்.

தத்தளிக்கும் பேதைகள்

ஆனால் வாழத்தெரியாதவர்கள், முகமலர்ச்சி இல்லாதவர்கள், சிரித்துப்பேசி மகிழாதவர்கள், சகோதரர்களோடு கூடிக்குலாவிப் பழகத்தெரியாதவர்கள், கோடி சூரிய பிரகாசம் நிறைந்து பகல் நேரத்தையும் இருளாக மாற்றிக்கொண்டு பேதைகளாகத் தத்தளிப்பார்கள். அவர்களுக்குப் பகல் நேரம்கூட இருண்டு கிடக்கும்! கண்ணிருந்தும், சூரிய வெளிச்சத்தின் துணை இருந்தும் அவர்களுக்குத் துளிகூடப் பயனில்லை.

இந்தக் குறள் நமது வாழ்க்கையில் ஒளி கூட்டுகிற சிறந்த அறிவுரையை உள்ளடக்கியிருக்கிறது. உலகத்தில் வாழ்வாங்கு நிறைவாக வாழவேண்டுமானால் சிரிப்பு, முகமலர்ச்சி, கலகலப்பு இவை மிகத்தேவை. இவற்றுக்கு விலையேதும் இல்லை. சிரிப்பதால் கலகலப்பாகப் பழகுவதால், நீங்கள் எதையும் இழக்கப் போவதில்லை.

"சிரிக்கத் தெரியாதவர்கள் கடை திறக்கக்கூடாது" என்று சீனப்பழமொழி ஒன்று இருக்கிறது. வாழ்க்கை வெற்றிக்கு முகமலர்ச்சியும், சிரிப்பும் கலகலப்பும், கூடிப்பழகுதலும் மிக இன்றியமையாத கூறுகள்.

அழுமூஞ்சியாக, உம்மணா மூஞ்சியாகக் காட்சி அளித்து உங்கள் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளாதீர்கள். எப்பொழுதும் கலகலப்பாக இருங்கள். காணுகிற எவருடனும் நன்கு மனம் கலந்து பழகுங்கள் வாழும் முறை இதுதான்.

சிரித்த முகம் சிலருக்கு இயல்பாக அமைந்திருக்கும். அவர்கள் எத்துறையில் ஈடுபட்டாலும் பெயர் போட்டு வெற்றியை ஈட்டுவார்கள். எந்தக் காரியத்தையும் சுமையாகக் கருதாமல் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் அவர்கள் சாதித்து விடுவார்கள்.

நமது பழைய பிரதமர் தேசத் தந்தை துங்கு அப்துல் ரஹ்மான் இவ்வகையில் நமக்கு நல்ல எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்.

அவருடைய வாழ்க்கையின் மகோன்னதம்-மற்றவர்களோடு சிரித்துப் பேசிக் கலந்து பழகி வாழ்கின்ற இனிய பண்புதான். துங்குவின் வாழ்க்கை வெற்றியின் ரகசியம் இதில்தான் அடங்கியிருக்கிறது..

வாழ்க்கையை அப்பெருமகன் ஆனந்தக் கடலாக நோக்குகிறார். தாங்கமுடியாத வேதனைச் சுமையாகவோ, தீர்க்கமுடியாத பெரும் கடனாகவோ அவர் அதனைக் கருதுவதில்லை.

இந்தப் பரிபக்குவத்தை-வாழ்க்கையை முக மலர்ச்சியோடு சுவைத்து மகிழும் சிந்தனையோடு நோக்குவதற்குப் பழகிவிட்டால், இந்த உலகம், நம்முடையதாகிவிடும்! சூரியன் பிரகாசிக்கும் பகல் நேரத்தில் மட்டுமன்றி, இரவில்கூட நாம் வெளிச்சத்தில் வாழ முடியும்.

வள்ளுவர் தமது குறள்மூலம் இதற்கு வழிகாட்டுகிறார். மீண்டும் அந்தக் குறளைப் படியுங்கள்.

''நகல்வல்லர் அல்லார்க்குமாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்'' (999)

மலேசிய இந்தியர்களின் கல்விப் பிரச்சினைகள்



ம. மதியழகன்



மலைகள் நிறைந்த மலேசிய நாட்டினைப் பொன்னுடாய் வளம் பெறச் செய்வதில் பெரும்பங்கு கொண்ட நம் இந்திய சமூகம் வளமற்று, வாழ்வில் ஒளியற்று இருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். வேலையில்லாமை, சொத்து இல்லாமை, பள்ளி விலகல், போதைப் பொருள் உட்கொள்ளுதல் போன்றவற்றில் இன்று நம் சமூகம் உயர்ந்து நிற்கிறது. இந்த உண்மைகள் கசப்பாக இருந்தாலும் இவை வேதனை தரும் உண்மைகள்தாம் என்பதை மறுப்பதிற்கில்லை. இந்தச் சமூகப் பிரச்சினைகளுக்கு விடையாகவும், சமூக மாற்றத்திற்கும், ஏற்றத்திற்கும் அடிப்படையாகவும் அமைவது கல்வியாகும். எந்த ஒரு நாகரிகமும் கல்வியின் தன்மையை ஒட்டியே ஒரு சமூகத்தில் வேரூன்றுகிறது.

இன்று பெரும்பாலும் தமிழ்ப் பள்ளிகளில் கட்டட வசதியோ, வகுப்பறை வசதியோ, உபகரணப் பொருட்கள் வசதியோ, திடல், நாற்காலி, மேசை வசதிகளோ மனநிறைவளிக்கும் முறையில் இல்லை. கக்கூஸ் வசதிகள்கூட இல்லாத பள்ளிகளும் இருந்து வருகின்றன. இன்னும் சில பள்ளிகள் திறந்தவெளிப் பள்ளிகளாகவும் இருந்து வருகின்றன.

இப்பிரச்சினை குறித்துப் பல முறை ம. இ. கா. கல்விக்குழுவும், ம. இ. கா. தலைவர்களும் அரசாங்கத்திடம் எடுத்துக் கூறியுள்ளார்கள். அரசாங்கமும் இப்பிரச்சினைகளுக்கு நிவர்த்திகாணும் பொருட்டுக் கூட்டுப் பள்ளி அமைக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள். இதன் தொடர்பாக ம. இ. கா. கல்விக்குழு மாநிலக் கல்வி இயக்குநர்களைச் சந்தித்து ஒவ்வொரு தமிழ்ப்பள்ளியின் நிலையினை விவரித்து விளக்கங்களைப் பெற்று வருகிறது. அண்மையில் தமிழ்ப்பள்ளிகளின் நிலையினை ஆராய ஆய்வுக்கோத்து ஒன்றினை தமிழ்ப்பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மாணவர் கல்வித்திறமை

கல்வி நிலையங்களில் இந்திய மாணவர்களுக்கு நியாயமான அளவு இடங்கிடைக்காமல் இருப்பது குறித்துக் காரணம் காட்டும் அதிகாரிகள் இந்திய மாணவர்கள் தங்கள் கல்வித் திறமையில் மிகவும் பின்தங்கியவர்களாக உள்ளனர் என்று கூறுகின்றனர். இவ்வுண்மையும் கசப்பான உண்மைதான்.

கல்வி நிலையங்களில் இந்திய மாணவர் நுழைவு

பல பிரச்சினைகளால் அல்லலுற்றுக் கல்வித் திறமையில் சாதாரண அளவில் தேர்ச்சிபெறும் இந்திய மாணவர்கள், மலேசியக் கல்வி முறையின் காரணமாகப் பல கட்டங்களில் இன்னலுறுகின்றனர். எல். சி. இ. முடிந்தவுடன் நான்காம் படிவம் அறிவியல் துறையில் சேர்வதற்கு 24க்கும் குறைவான கூட்டுப் புள்ளிகளையும், கணிதம், அறிவியல் பாடங்களில் சிறப்புப் புள்ளிகளையும் பெற்றிருந்தால்தான் முடியும். இதே பிரச்சினையால் தொழிற்கல்வி பெறுவதற்கும், தொழில் நுட்பப் பள்ளிகளுக்குச் செல்வதற்கும் நமது இந்திய மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுகிறது.

இதே நிலைதான் எம். சி. இ. தேர்வு எழுதும் இந்திய மாணவர்களையும் எதிர்நோக்குகிறது. கலைப் பிரிவில் சேர்வதற்கு மூன்று பாடங்களில் ஒன்பது புள்ளிகளும், அறிவியல் பிரிவில் சேர்வதற்கு எட்டுப் புள்ளிகளும் பெற்றிருக்கவேண்டும். [அதாவது ஒரு டிஸ்டிங்சனும் இரண்டு வலுவான கிரெடிட்டுகளும் பெற்றிருக்க வேண்டும்). 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட இந்திய மாணவர்கள் எச். எஸ். சி. வகுப்புகளில், இந்தப் பிரச்னையால் படிக்க இயலாமல் போய்விடுகிறது.

இந்த ஆரம்பப் பிரச்னை பல்கலைக்கழக அளவிலும் தொடர்கிறது. கலைத்துறையில் பயில விரும்பும் மாணவர்கள் எச். எஸ். சி. தேர்வில் குறைந்தது 46 புள்ளிகளுக்கு மேலாகப் பெற்றிருக்க வேண்டும். அறிவியல் பிரிவிற்கோ குறைந்தது ஐம்பது புள்ளிகளுக்கும் மேலாகப் பெற்றிருக்க வேண்டும். பெரும்பாலான மாணவர்கள் 40 புள்ளிகளுக்குக் குறைவாகவே பெறுகிறார்கள். இதனால் தகுதி பெற்ற மாணவர்கள் பற்றாக்குறையாக உள்ளனர் என்று காரணங்கள் கூறப்படுகின்றன.

ம. இ. கா. தலைவர்கள் கல்வி அமைச்சரைச் சந்தித்து, இந்திய சமுதாயத்தின் பின்னணி, சமூக நிலை, பொருளாதார நிலை, அவர்களின் பின்தங்கிய நிலை ஆகியவற்றை முறையாக விளக்கி, குறைந்த புள்ளிகள் கொண்ட, குறிப்பாகத் தோட்டப்புற மாணவர்களுக்குச் சிறப்புச் சலுகை கொடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி நியாயமான பிரதிநிதித்துவம் பெறுவதில் பலன் கண்டு வருகிறார்கள். அதனுடன் இப்பிரச்சினை வருடாந்திரப் பிரச்சினையாக இல்லாமல், கொள்கை ரீதியாக, அமைச்சரவை ரீதியாகக் கொணரப்பட்டு, தீர்வு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

வெளிநாட்டில் கல்வி வாய்ப்புகள்:

வசதியும், வாய்ப்பும் உள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளை மேற்படிப்புப் படிக்க இந்தியாவிற்கு அனுப்புகின்றனர். ஆனால் துரதிருஷ்டவசமாக நம் நாட்டு அரசாங்கம் இந்திய நாட்டின் பல பட்டங்களை அங்கீகரிக்கவில்லை. டாக்டர் படிப்பில்கூட ஒரு சில பல்கலைக்கழகங்களையே அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இந்தியாவில் பி. ஏ., எம். ஏ. பட்டங்களைப் பெற்றுவிட்டு இங்கு 200 வெள்ளிக்கும், 300 வெள்ளிக்கும் வேலைதேடும் நிலையைக் காணும்போது பெரும் வேதனையாகவே உள்ளது.

இதன்பொருட்டு ம. இ. கா. கல்விக்குழு, இந்தியப் பட்டப் படிப்புகளை நம் அரசாங்கம் அங்கீகரிக்கவேண்டும் என்ற முறையான மனுவையும் சமர்ப்பித்துள்ளது. ம. இ. கா., கல்வி வாய்ப்புகள், உபகாரச் சம்பளங்கள், அங்கீகரிக்கப்பட்ட பட்டங்கள் போன்றவை பற்றி ஆலோசனை நல்க, ஓர் ஆலோசனை மன்றத்தை உருவாக்கிச் செயல்பட்டு வருகிறது. இது பெருமளவிற்கு நம் மாணவர்களுக்கு உதவியாக உள்ளது.

கல்வி என்பது கரையில்லாதது; அதனுடைய பிரச்சினைகளும் கரை இல்லாமலே இருக்கின்றன. ஒரு சமூக அமைப்பினாலோ அல்லது ஓர் அரசியல் அமைப்பினாலோ மட்டும் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. சமுதாயத்தின் பல அமைப்புகளின் ஆதரவு, அரசியல் கட்சியின் ஆதரவு, பெற்றோர்களின் விழிப்புணர்ச்சி முதலியவற்றாலேயே நம் இளைய தலைமுறையினரின் கல்விப் பிரச்னைகளைத் தீர்த்து வைத்து அவர்கள் வாழ்வு வளமும் நலமும் பெற வழிகாண முடியும். ●

புதிய சமுதாயத்தில் இடம்பெறும் கதை, கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

கலையுலக

பரிதாமணாளன் வினா-விடை

வி. ராமசாமி, கோலாலம்பூர்

கே: தங்கச்சிலை நடிகைக்கு ஆண் குழந்தை பிறந்திருப்பதாகத் தமிழகத்திலிருந்து வெளிவரும் ஒரு வார இதழில் படித்தேன். இது உண்மைதானா?

ப: தந்தை யார் என்று கிசுகிசுத்துக்கொள்வதையும் போட்டிருந்தார்களே, அதைப்படிக்கவில்லையா?

செல்வராஜு குமரன், கிள்ளான்

கே: காலஞ்சென்ற திரைப்படத் தயாரிப்பாளர் ஏ. பி. நாகராஜன் இயக்கிய முதல் படம் எது, கடைசிப் படம் எது?

ப: முதல் படம் நால்வர், கடைசிப்படம் நவரத்தினம்.

தாரா எழிலழகன், சுங்கைவே, கோலாலம்பூர்

கே: "துன்பங்கள் உறங்குவதில்லை" படம் உறங்கிப் போனதுபோல் "எண்ணங்கள்" படமும் எண்ணத்தோடு போய்விடுமா?

ப: உங்களுக்கு ஏன் இவ்வளவு அவநம்பிக்கை? "இரத்தப்பேய்" படம் எடுத்து வந்தார்களே அதை மறந்துவிடமுடியுமா? அதேபோல் இதுவும் வெற்றி பெறலாம்.

என். சக்கரவர்த்தி, கங்கார் பூலாய்

கே: நடிகை சுஜாதா திருமணம் செய்துகொண்டது உண்மையா?

ப: உண்மைதான்! அவர் காதல் திருமணம் செய்துகொண்டார். இத்திருமணத்தை சுஜாதா பிறந்த வீட்டார் விரும்பவில்லை. எனவே திருமணத்தில் அவர்கள் கலந்துகொள்ளவுமில்லை. பணமிருந்தும் நிம்மதியில்லாத வாழ்க்கை!

கே: தமிழ்ப்படத்தைப் பார்ப்பதைவிட இந்திப்படத்தைப் பார்ப்பது மேல் என்று தோன்றுகிறது. உங்களுக்கு...?

ப: பல இந்திப்படங்கள் நன்றாக இருந்தாலும் பேசுவது என்ன என்று புரியாததால், நன்றாக இல்லாவிட்டாலும் தமிழ்ப்படம் பார்ப்பதே மேல் என்று தோன்றுகிறது. பேசுவது புரிந்தால்தானே படத்தை ரசிக்கமுடியும்!

அகமட் ஷா, பாரிட்புந்தார்

கே: "புதிய சமுதாய"த்தில் இப்போதுள்ளதைவிட இன்னும் அதிகம் சினிமாப் பகுதி இடம்பெறச் செய்தால் என்ன?

ப: "புதிய சமுதாயத்"தில் சினிமாப் பகுதி அவசியம் தானா? என்று கேட்கக்கூடியவர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களுடைய கோபத்திற்கு நீங்கள் ஆளாகாதீர்கள்!



"வாழ நினைத்தால் வாழலாம்" ஜெய்சங்கர், ஜெயதேவி.

எம். குணசேகரன், பாரிட்புந்தார்

கே: மக்கள் திலகத்துடன் இணைந்து நிறையப் படங்களில் நடித்த கதாநாயகி யார்?

ப: இணைந்து நடித்த கதாநாயகிகளில் அதிகப் படங்களில் நடித்தவர்க்ள் சரோஜாதேவியும் ஜெயலலிதாவுமே.

இரா. இராமராவ், தலைநகர்

கே: எம். ஜி. ஆர். நடிக்கும் பெரும்பாலான படங்கள் நூறு நாட்களை எட்டிவிடுகின்றனவா?

ப: அப்படிச் சொல்வதற்கில்லை. ஆனால் மற்ற நடிகர்களைக் காட்டிலும் இவருடைய படங்கள் அதிகம் நூறு நாட்களை எட்டி ஓடுகின்றன.

எம். ஜி. ராஜு, கேமரன்மலை

கே: மறைந்த நடிகைகளில் தங்களைக் கவர்ந்தவர் யார்?

ப: எந்த நடிகையும் என்னைக் கவரவில்லைங்க!

எம். பன்னீர்,
நைகல் கார்டனர் தோட்டம், பத்தாங் பெர்ஜுந்தை

கே: ஆங்கிலப்பட வளர்ச்சிக்குக் காரணம் என்ன?

ப: அது உலக முழுதும் பார்க்கப்படுவதால் அதற்கு வருவாய் அதிகம். எனவே வருவாய்க்கு ஏற்றவாறு ஆங்கிலப் படங்கள் பெரும் பணச் செலவில் எடுக்கப்படுகின்றன. பட வளர்ச்சிக்கு அவர்களின் அறிவு வளர்ச்சியும் ஒரு காரணமாகும்.

எஸ். தேவி, பூலோக கசாப், சிகாமட்

கே: "மூன்று முடிச்சு" படத்தில் நடித்த ஸ்ரீதேவி இப்போது எந்தப் படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார்?

ப: "பதினாறு வயதினிலே", "கவிக் குயில்" முதலிய படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார்!

என். சுலோசனா, பினாங்கு

கே: டி. எம். சௌந்தரராஜன் எந்தப் படத்திற்காவது இசையமைப்புச் செய்திருக்கிறாரா?

ப: வெளிவரவிருக்கும் "பலப் பரீட்சை" படத்திற்கு இசையமைப்புச் செய்துள்ளார்.

"ஆர்வி" ஜெயா, சுங்கை

கே: தரக்குறைவான திரைக்காட்சிகளை "சென்சார் போர்ட்" தடைசெய்வதுபோல் தரக்குறைவான பாடல்களையும் தடை செய்தால் என்ன?

ப: அவர்களுக்குத் தெரியாமலா பாடல்கள் வந்துவிடுகின்றன? "பரந்த" நோக்கத்தில் போனால் போகட்டும் என்று விடுகின்றனர். இதனால் நாம் 'சுவை சொட்டும்' பல பாடல்களைக் கேட்கமுடிகிறது.

கதீஜா மஜீட், சுங்கை

கே: ஜேசுதாஸ் பாடிய பாடல்களில் உங்களுக்குப் பிடித்த பாடல் எது?

ப: "ஊருக்கு உழைப்பவன்" படத்தில் ஒலிக்கும் "இரவுப் பாடகன் ஒருவன் வந்தான்" என்ற பாடலைத் திரும்பத் திரும்பக் கேட்கவேண்டும்போல் இருக்கிறது.

பால்மரக் காட்டினிலே

அகிலன்


7. மூத்த பிள்ளை முருகன்

அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று விக்டரி எஸ்டேட்டிலிருந்து சிரம்பான் நகரத்துக்கு வந்து, அங்கிருந்து கோலாலம்பூருக்குப் பஸ் ஏறினான் பாலன். கோலாலம்பூருக்குச் சென்று அவனுடைய அண்ணன் முருகனைப் பார்த்துப் பேசி, முடிந்தால் அவனை எஸ்டேட்டுக்கு அழைத்துவர வேண்டுமென்பது பாலனின் பெற்றோரது விருப்பம். வீரப்பன் வேலம்மாள் இருவருமே மூத்த பிள்ளை முருகனிடம் அதிகமான நம்பிக்கை வைத்திருந்தார்கள். மூத்தவன் இருக்கும்போது அடுத்த பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்யவேண்டிய ஒரு நெருக்கடி வந்துவிட்டது. கல்யாணம் செய்வதென்றால் அதற்குக் காசு பணம் வேண்டும். எல்லா விவரங்களையும் முருகனிடம் மனம் விட்டுப் பேசத் துடித்தார்கள் அவன் அம்மாவும் அப்பாவும்.

சிரம்பானிலிருந்து கோலாலம்பூருக்குச் சென்ற பஸ்ஸில் பாலன் இருந்தான். காலை நேரத்துக் குளிர் காற்று சில்லென்று பஸ்ஸுக்குள் வீசிக்கொண்டிருந்தது. மலாய்க்காரர், சீனர், தமிழர் ஆகிய மூன்று இனத்தவரும் பஸ்ஸில் நிறைந்திருந்தனர். ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்த பாலன் எதிரே சாலையைப் பார்த்தான். விசாலமான நெடுஞ்சாலை. இருபுறங்களிலும் உயர்ந்தோங்கி வளர்ந்த ரப்பர்மரத் தோட்டங்கள்; இடையிடையே காட்டுமரக் கூட்டங்கள். பாலனின் நினைவு எங்கெல்லாமோ அலைந்து திரிந்தது.

ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்பு வரையில் பெரும்பாலும் காடுகளும் மலைகளும் மண்டிக் கிடந்த பிரதேசம் அது. கடலோரப் பகுதிகளின் சமவெளியில் உழவுத் தொழில் செய்துகொண்டும், மீன் பிடித்துக்கொண்டும் மலாய் மக்கள் கூட்டம் வாழ்ந்திருக்கிறது. வெள்ளைக்காரன் அந்த நாட்டைக் கைப்பற்றியவுடன் தனக்கு அங்கே பெரும் புதையல் காத்திருப்பதைக்கண்டுகொண்டான். தரைக்கடியிலே மண்ணில் ஈயம் இருந்தது; தரைக்கு மேலே கரும்பு விளைந்தது; தென்னை செழித்தது; ரப்பர் மரங்களும் செம்பனை மரங்களும் காடாய் மண்டின.

கரும்பிலிருந்து சர்க்கரை, தென்னையிலிருந்து கொப்பரை, லித்தாமரத்திலிருந்துரப்பர், செம்பனை விதையிலிருந்து எண்ணெய் எடுத்துக் கோடி கோடியாகச் சம்பாதிக்க வாய்ப்பிருப்பதை அவன் கண்டுகொண்டான். ஆனால் அங்கே எறும்பு போல உழைத்துச் [illegible] மக்கள் கூட்டம் வேண்டுமே? உழவுத் தொழிலிலும் மீன் பிடிப்பதிலும் ஈடுபட்டிருந்த மலாய் மக்களை அவனால் கட்டாயப் படுத்தி வேலைவாங்க முடியவில்லை. சீனர்களோ சுரங்கங்களில் மட்டும் உழைக்க முன்வந்தார்கள்; ஆனால் உழைப்புக்கேற்ற ஊதியத்தையும் உரிமையையும் அவர்கள் எதிர்பார்த்தார்கள். வெள்ளைக்காரனுக்கோ எவ்வளவு குறைவாகக் கூலிகொடுக்க முடியுமோ அவ்வளவு குறைவாகக் கூலிகொடுத்து, எவ்வளவு அதிகமான வேலைவாங்க முடியுமோ அவ்வளவு அதிகமாக வேலைவாங்க வேண்டியிருந்தது. அகப்பட்டார்கள் தமிழர்கள்.



பஸ்ஸில் கோலாலம்பூரை நோக்கிப் பயணம் செய்துகொண்டிருந்த பாலனின் மனம் அந்த மண்ணில் கப்பல் கப்பலாக வந்திறங்கி, காடுகளைத் திருத்திக் கழனிகளாக்கி, சாலைகள் அமைத்து, ரயில் பாதைகள் போட்டு, அந்த நாட்டை உருவாக்கத் தம் உதிரத்தைக் கொட்டி உழைத்துத் தன்னுடைய முன்னோர்களின் காலத்தை நோக்கிப் பயணம் செய்தது. ஒருபுறம் மனித விலங்குகளான தம் எஜமானர்களோடு அவர்களுக்குப் போராட்டம்; மறுபுறம் காடுகளில் பதுங்கித் திரிந்த வனவிலங்குகளோடும் பாம்புகளோடும் போராட்டம்; காலரா, அம்மை, மலேரியா போன்ற நோய் நொடிகளாலும் கடின உழைப்பாலும் பற்றாக்குறை உணவாலும் புற்றீசல்கள் போல் அங்கே செத்து மடிந்தவர்கள் எத்தனை எத்தனையோ பேர்!

"பாட்டன் முப்பாட்டன் காலத்திலேருந்து இந்த மண்ணுக்காகப் பாடுபட்டு உயிரைக் கொடுத்தவங்க கூட, இப்ப ஒரே ஒரு மாச நோட்டீஸிலே வெளியே போகணுமாமே! எங்கே போவாங்க அவுங்க?" தன்னைத் தானே கேட்டுக்கொண்டு பெருமூச்சு விட்டான் பாலன்.

பஸ் போய்க்கொண்டிருந்த நெடுஞ்சாலையில் தலைநகரத்திலிருந்தும் தலைநகரத்தை நோக்கியும் நூற்றுக்கணக்கான புதுக் கார்கள் பறந்துகொண்டிருந்தன. ஸ்கூட்டர்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் போவோர் வருவோர் கூட்டத்துக்கும் குறைவில்லை. நாட்டின் வளம் தோட்டத்துக்குள்ளிருந்த போது தெரியவில்லையே தவிர வெளி உலகம் வெள்ளிக்குப் பஞ்சமில்லாத உலகமாகத்தான் மினுமினுத்தது.

கோலாலம்பூர் நகரத்தின் "பஸ் ஸ்டாண்ட்" வந்தது. பஸ்ஸிலிருந்து இறங்கித் தெருவுக்கு வந்தான் பாலன். நகரத்தின் சாலைகளில் சாரி சாரியாகக் கார்கள் இழைந்துகொண்டிருந்தன. அன்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்துங்கூடப்போக்குவரத்து நெரிசல் குறையவில்லை. சட்டைப் பையிலிருந்த காகிதத்தை எடுத்து அண்ணன் முருகனின் முகவரியை ஒரு முறை படித்துக்கொண்டான். ஆறு மாதங்களுக்கு முன்பு வரையில் புறநகர்ப் பகுதியில் ஒரு மலிவான அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு முருகன் வசித்து வந்தான். இப்போது முகவரி மாறி இருந்தது.

டவுன் பஸ்ஸுக்கு காத்திருந்தால் நேரம் வீணாகும்; டாக்ஸியில் போனாலோ காசு வீணாகும்; யோசித்தான் பாலன். கூட்டுறவுச் சங்க முயற்சியில் அவன் இழந்துவிட்ட நானூறு வெள்ளி இப்படி அவனை யோசிக்க வைத்தது. கடைசியில் டாக்ஸியில் போகத் துணிந்து, ஒரு வாடகைக் காரை கைகாட்டி நிறுத்தினான்; ஏறிக்கொண்டான். காரை ஓட்டிவந்த சீனரிடம் மலாய் மொழியில் பேசி விலாசத்தைச் சொன்னான்.

புதிதாக உருவாகிவந்த நகர்ப்புறப் பகுதி ஒன்றில், மத்தியதர மக்கள் வாழும் தெருவில் டாக்ஸி வந்து நின்றது. ஒரு வீட்டின் மாடி அறையில் குடியிருப்பதாக முருகன் குறிப்பிட்டிருந்தான். டாக்ஸியிலிருந்து இறங்கி, தயக்கத்தோடு வீட்டின் எண்ணைத் தேடலானான் பாலன். மிகுந்த சிரமம் அவனுக்கு ஏற்படவில்லை. வீட்டின் கீழ்ப்பகுதியில் விட்டிருந்த மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு எங்கேயோ முருகன் புறப்பட்டுக்கொண்டிருந்ததால், எளிதில் நேரடியாக அவனையே பாலனால் சந்திக்க முடிந்தது. இந்த நிமிஷம் தாமதமாக வந்திருந்தாலும் அவனைக் கண்டுபிடித்திருக்க முடியாது.

"முருகா!"

"அடடே. சொல்லாமல் கொள்ளாமல் வந்திட்டியா? வா, வா வீட்டிலே எல்லாரும் சுகமா?" அன்போடு வரவேற்றான் முருகன். அவன் கண்களில் உண்மையான மகிழ்ச்சி ஒளிவிட்டது.

"எங்கேயோ புறப்பட்டே போலிருக்கே?"



"எங்கேயுமில்லே; ஓட்டலுக்குப் போய்ச் சாப்பிடலாம்னு நினைச்சேன். மெதுவாப் போகலாம் வா!"

மோட்டார் சைக்கிளை அதன் இடத்தில் வைத்துவிட்டு, பாலனை அழைத்துக்கொண்டு மாடிக்குச் சென்றான் முருகன். மாடிப்படியை ஒட்டிய வராந்தாவும் அடுத்து அறையும் இருந்தன. அறைக்கதவைத் திறந்துவிட்டு உள்ளே நுழைந்தான். மேசை, நாற்காலிகள், கண்ணாடி அலமாரி, மெத்தையுடன் கூடிய படுக்கை இவ்வளவும் அந்த அறைக்குள் காணப்பட்டன. ஒரு கணம் பாலன் திணறிப் போய்விட்டான். அவன் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. ஆறு மாதங்களுக்கு முன்பு வரையில் அவன் வசித்த இடத்துக்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்! அந்த அறைக்குள் தென்பட்ட துணிமணிகளிலிருந்து நகரத்தின் நவநாகரிகப் பெண்மணிகள் வழக்கமாகப் பயன்படுத்தும் 'இன்டிவேட்' ஸென்டின் நறுமணம் மெல்லக் கமழ்ந்துகொண்டிருந்தது.

"திடீர்னு வந்திருக்கியே, என்ன விஷயம்?" என்று கேட்டான் முருகன்.

"எல்லாம் உனக்குக் கடுதாசியிலே எழுதின விஷயந்தான்" என்று தொடங்கினான் பாலன்; "அடுத்த தோட்டத்துக்கு நோட்டீஸ் குடுத்தாலே குழந்தை குட்டிகள் எல்லாமாச் சேர்ந்து, ஆயிரம் பேருக்கு மேலே பாதிக்கப்பட்டிருக்காங்க. அவுங்களைக் காப்பாத்துறதுக்கு நாங்க செய்த முயற்சி தோற்றுப் போச்சு. இப்போ நம்ப சொந்த அக்கா குடும்பத்தையும் நம்ப மாமன் குடும்பத்தையுமாவது நாம காப்பாத்தணும். அக்கா குடும்பத்துக்குக் கூட அவ்வளவு கஷ்டம் ஏற்படாது போலே தெரியுது; அத்தானுக்கு அதே தோட்டத்திலே வேலை போட்டுத் தர்ரதாச் சொல்லிருக்காங்களாம். மாமா குடும்பந்தான் மற்றவங்களோட சேர்ந்து நடுத்தெருவிலே நிற்கப் போகுது."

"அதுக்கு நாம இப்போ என்ன செய்ய முடியும்னு நீ நினைக்கிறே?" என்று எவ்வித உணர்ச்சியுமின்றிக் கேட்டான் முருகன். அவன் குரலிலோ சொல்லிலோ பற்றுதல், பாசம், இரக்கம் ஏதும் இருப்பதாய்ப் பாலனுக்குத் தெரியவில்லை.

"நம்மையெல்லாம் மார்மேலேயும் தோள்மேலேயும் போட்டு வளர்த்தவர் மாமா. நம்மோட துணிமணிக்கு, படிப்புக்கு, ஏன் சமயங்களிலே சாப்பாட்டுக்குக்கூட, அவர் எவ்வளவோ செய்திருக்கார். நமக்கு அவர் வேறே இல்லே; நம்ப அப்பா வேறே இல்லே. வயசுக்கு வந்த பெண்கள் காமாட்சியையும் தங்கத்தையும் கூட்டிக்கிட்டு அவுங்க இப்போ எங்கே போவாங்க? எப்படிப் பிழைப்பாங்க? அந்தப் பெண்களோட மானத்தைக் காப்பாத்தற பொறுப்பாவது நமக்கு வேண்டாமா?"

"பாலா, நீ இப்படி உணர்ச்சிவசப்பட்டுப் பேசறதாலே ஒண்ணும் நடக்காது" என்று குறுக்கிட்டான் முருகன்; "நம்மோட சக்திக்கு மீறின காரியங்கள் இப்போ நடக்குது; இதையெல்லாம் தடுக்கறதுக்கு நம்மோட பெரிய தலைவர்கள் நடவடிக்கை எடுக்கணுமே தவிர, நீயும் நானும் நம்ப தலையைப் பாறையிலே மோதி உடைச்சுக்கப்படாது. வெள்ளத்திலே அடிச்சிட்டுப் போறவங்களைக் காப்பாத்தறேன்னு சொல்லி, நம்மையும் அந்த வெள்ளத்துக்குப் பலி கொடுத்திடப்படாது."

பாலன் திடுக்கிட்டான். முருகன் பேசுகிற பேச்சா இது? முருகனைச் சொல்லிக் குற்றமில்லே; அவன் மாறிவிட்டான். படித்து முடித்துவிட்டு, தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காகவே தன் வாழ்க்கையைச் செலவிடப் போவதாய் மார்தட்டிய பழைய முருகன் இல்லை அவன். அவனுடைய உடை, உடல், பேச்சு, செயல் ஒவ்வொன்றிலுமே இப்போது வெள்ளியின் மினுமினுப்புத் தெரிந்தது. நாகரிகத்தில் மிதக்கும் நகரவாசியாக மாறிவிட்டான்.

அவனிடம் பேசிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்து மௌனம் சாதித்தான் பாலன். விக்டரி எஸ்டேட்டின் தொழுவம் போன்ற லயனில் பிறந்து, ஆயாக் கொட்டகையில் வளர்ந்து கிடைத்ததைக் கிடைத்த வேளையில் சாப்பிட்டு, நாளைக்கு ஆறு மைல் நடந்து, இருபது மைல் பஸ்ஸில் பயணம் செய்து, தன் குடும்பத்தாரின் தியாகத்தாலும் தன் மாமா குடும்பத்தின் தியாகத்தாலும், தான் இந்த நிலைக்கு உயர்ந்திருப்பதை முருகன் அறவே மறந்துவிட்டான். அந்த உண்மை பாலனின் கண் முன்னால் பளிச்சிட்ட போது அதை அவனால் அவ்வளவு எளிதாகச் சீரணிக்க முடியவில்லை.

"நீ நினைக்கிறதை வாய்விட்டுச் சொல்லேன்; ஏன் பேசாமல் உட்கார்ந்திருக்கே?" என்றான் முருகன்.

"இதோ பார் முருகா, முதல்லே இதை நீ தெரிஞ்சுக்கணும்; காமாட்சியைக் கல்யாணம் செய்துக்கச் சொல்லி உன்னைக் கட்டாயப் படுத்தறதுக்காக நான் இங்கே வரலே. நம்ப முத்தண்ணனுக்குக் காமாட்சியைக் கட்டி வைக்கிறதா முடிவு பண்ணியிருக்கோம்."

"என்ன! என்ன! உண்மையாவா?" இதைக் கேட்டவுடன் முருகனுக்கு ஏற்பட்ட விடுதலை உணர்ச்சியை அவனால் மறைக்க முடியவில்லை. அருகில் வந்து தன் தம்பியின் கரத்தை இறுகப்பற்றிக் கொண்டான். "அப்புறம்?"

"அதே தேதியிலே எனக்கும் கண்ணம்மாவுக்கும் கல்யாணம் நடக்கப் போகுது."

இந்த இரண்டாவது செய்தி முருகனுக்கு அவ்வளவாக மகிழ்ச்சி தரவில்லை. "நீ செய்திருக்கிற முடிவு முட்டாள்தனமான முடிவு" என்று சொல்வதுபோல் தன் தம்பியை விழித்துப் பார்த்தான் முருகன். ஆனால் வாய்விட்டு அதை உடனடியாகச் சொல்லி விடவில்லை.

"நீ ஒருத்தன் கல்யாணம் செய்துகொள்ளாமல் இருக்கிறப்போ, உன்னோட தம்பிகளுக்கு முன்னாலே கல்யாணம் நடக்கிறது தப்புத்தான். ஆனால் தோட்டக் காட்டிலே வாழ வேண்டிய நிலைக்கு வந்த பிறகு, அதுக்கு ஒத்துப்போறப்பிலேதான் எதையும் செய்ய வேண்டியிருக்கு. தோட்டத்துக்காரங்க சட்டப்படி, அடுத்த தோட்டத்திலேருந்து வெளியேற்றப்படுகிற குடும்பங்களை நம்மோட லயத்திலே நம்மாலே வச்சுக்க முடியாது. ஒரு நாளைக்குக் கூட மாமா குடும்பம் வந்து நம்ம குடும்பத்தோட தங்கறதுக்கு வழியில்லே. கல்யாணம்னு செய்துக்கிட்டா, அந்த ரெண்டு பெண்களை யாவது நம்மோட தங்க வச்சுக்கலாம். பின்னாலே முத்துவுக்கும் எனக்கும் லயத்திலே தனியா வீடு கிடைச்சா நாங்க தனிக் குடித்தனம் போயிடுவோம்."

"இப்பவே அந்தச் சின்ன அறைக்குள்ளே எட்டுப்பேர்" என்றான்.

"வேறே என்ன செய்யறது? வேறே என்ன வழி?"

முருகன் ஒருவன் மட்டும்வாழ்ந்து வந்த அந்த நகரத்து அறையில் பாதி அளவு கூட இருக்காது, விக்டரி எஸ்டேட்டில்அவர்கள் வசித்துவந்த லயன்வீடு.அதற்குள்ளே எட்டுப்பேர் வசிக்க வேண்டும்; வசித்து வந்தார்கள். இன்னும் இரு பெண்களும் வந்துவிட்டால் – அவர்களுக்குத் தனி வீடு கொடுக்கப்படும்வரை - பத்துப் பேரும் அங்கேதான் வாழ்ந்து தீரவேண்டும். ஒரு கணம் நினைவை எங்கோ அலையவிட்டு விட்டு, "என்னோட கல்யாணத்தைப் பத்தி நீங்க கவலைப்படவேண்டாம்" என்றான் முருகன்.

"நீ யாரோ ஒரு பெண்ணோட பழகுகிறதா நான் கேள்விப்பட்டேன்; அந்தப் பெண்ணை நீ இப்பவே கல்யாணம் செய்துக்கறதா இருந்தாலும் செய்துக்கலாம். இதைப்பத்தியும் நான் வீட்டிலே பேசிட்டு வந்திட்டேன்."

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த முருகன், தான் அடைந்த அதிர்ச்சியைத் தன் தம்பியிடம் மறைக்க முயன்றான். அதே சமயம் தன் தம்பி எதிர்பாராத வகையில்- தனக்கு முக்கியமான வகையில் - உதவி செய்திருப்பதாகவும் தோன்றியது. காமாட்சியிடமிருந்து விடுதலை வாங்கித் தந்ததும் அல்லாமல், ராதாவை மணந்துகொள்ளவதற்கு வழிவகையும் செய்துவிட்டு அவன் வந்திருக்கிறான். ராதாவுக்கும் தனக்கும் இடையில் இருந்த ரகசியம் இப்படி விக்டரி எஸ்டேட் வரையில் பரவியிருக்குமென்று முருகன் இது வரை நினைக்கவில்லை. அந்த விஷயம் பாலனுக்குத் தெரிந்ததும் நல்லதாய்ப்போயிற்று. தன் வழியில் தொல்லை ஏதும் குறுக்கிடாமல் அவனே பாதையைச் செப்பனிட்டு விட்டு இங்கு வந்திருக்கிறான்.

திடீரெனத் தன் தம்பியின்மீது அன்பு பொங்கியது பாலனுக்கு.மதிப்பும் ஏற்பட்டது. வயதில் இளையவனாக இருந்தும், தோட்ட வாழ்க்கையில் உழன்றவனாக இருந்தும், தன் விஷயத்தில் இங்கிதம் தெரிந்து நடந்துகொண்டிருக்கிறான். தன்னைப் பொறுத்தவரையில் அவனுடைய வருகை வரவேற்க வேண்டிய, கொண்டாடவேண்டிய வருகைதான்.

"சரி, சரி, புறப்படு; வந்தவனைச் சாப்பிடச் சொல்லாமல் நானும் பேசிக்கிட்டிருக்கேன். ஒரு நல்ல ஒட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டு வரலாம்."

முகம் கைகால் கழுவிக் கொண்டு உடை மாற்றிக் கொண்டான் பாலன். உடன் இருந்து முருகன் அவனுக்குச் சோப்பு, சீப்பு, தைலம் பௌடர் எல்லாவற்றையும் தானே எடுத்துக் கொடுத்தான். முதல்தரமான ஓட்டலுக்கு அவனை அழைத்துச் சென்று விலை உயர்ந்த விருந்துடன் அவனை உபசரிக்க விரும்பினான்.

அவர்கள் புறப்பட்டுக் கொண்டிருந்த போது கீழே வாசல் புறத்தில் ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. ஹார்ன் ஒலி விட்டுவிட்டு எழும்பியது. "அட, ராதா வந்திட்டா போலேருக்கே!" என்று சொல்லிக்கொண்டே மாடிச் சன்னலருகில் சென்று எட்டிப் பார்த்தான் முருகன். பாலனும் அவனோடு சென்று கவனித்தான்.

கார்க் கதவைச் சாத்திவிட்டு, காரின்மீது ஒயிலாகச் சாய்ந்தவாறே மாடிச் சன்னலை ஏறிட்டுப் பார்த்தாள் ஓரிளம் பெண். மலாய்ப்பெண்கள் உடுத்துவதுபோல் மேலே சட்டை போட்டுக்கொண்டிருந்தாள்; இடுப்பில் கைலி போன்ற ஒருவகைப் பாவாடை. காரில் வேறு யாரும் இல்லை. அவள்தான் காரை ஓட்டிக்கொண்டு வந்திருக்க வேண்டும்.

முருகனுடன் மற்றொருவனைக் கண்டுவிட்டதால் அவளுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் அவள் முகத்தில் உடனே தெரிந்தது. அதைப் புரிந்துகொண்டு படிகளில் இறங்கி வேகமாக அவளிடம் ஓடினான் முருகன். அவளிடம் ஏதோ பேசினான். பிறகு இருவரும் கலகலப்போடு சிரித்துக்கொண்டே மாடி அறைக்கு வந்தனர். பிறகு பாலனுக்கு அவளை அறிமுகப் படுத்தி வைத்தான். தன் தம்பியைப்பற்றிப் பெருமையாகவே அவளிடம் இரண்டு வார்த்தைகள் பேசி வைத்தான்.

"உங்க மேலே இவருக்கு ரொம்பப் பிரியம்; என்கிட்டே கூட உங்களைப் பத்திச் சொல்லியிருக்கார்" என்றாள் ராதா.

"சாப்பிடறதுக்காகக் கிளம்பிக்கிட்டிருந்தோம். நல்ல வேளை; நீயும் வந்திட்டே! வா. இன்னிக்கு நம்ம ரெண்டு பேரும் சேர்ந்து பாலனுக்கு ஓட்டல்லே விருந்து வைப்போம்."

"அடுத்த விருந்தை எங்க அண்ணியே சமைச்சுப் போடும்னு நினைக்கிறேன்."

"ரொம்பப் பொல்லாதவரா இருக்காரே, உங்க தம்பி!" என்று சொல்லிவிட்டு, "வாங்க. சாப்பிட்டு வந்து பேசலாம்" என்று துள்ளல் நடையுடன் ராதா படிகளில் இறங்கினாள்.

காரில் ராதாவின் அருகில் முருகன் அமர்ந்து கொண்டான். பின் ஸீட்டில் பாலன். உற்சாகமாகக் காரை ஓட்டிக்கொண்டு சென்று பல தெருக்களைக் கடந்து ஒரு பிரம்மாண்டமான ஓட்டலின் முன்பு காரை நிறுத்தினாள் ராதா.

[தொடரும்]

தகுதியற்றோர்

பணத்தை இறைவழியில் செலவழிக்காமல் தானே உண்டு (வயிறு) பெருத்தவனும் தீய பண்புகளையுடையவனும் தீய மொழி பேசுபவனும் சுவனபதி செல்ல மாட்டார்கள் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

—அல்ஹதீஸ்

சபதம்

பாதாசன்

பொன்னன் ஒரு மாதத்திற்கு முன்பு எடுத்துக் கொண்ட சபதம் நிறைவேறிக் கொண்டிருந்தது.

நள்ளிரவு மணி பன்னிரண்டிருக்கும். விடிந்தால் ஞாயிற்றுக் கிழமை. மழை சோவென்று பெய்து கொண்டிருந்தது. இரவு பகல் என்று பாராமலும் மழை வெய்யிலைப் பொருட்படுத்தாமலும் தன் சபதத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தான் பொன்னன்.

அந்த மழையில், கும்மிருட்டில் கூரைத் தகரத்திற்கு அவன் ஆணி அடித்துக் கொண்டிருந்தான். அவன் மனைவி மாரி, ஏணியில் ஏறி நின்று கொண்டு ஆணி அடிப்பதற்கு வசதியாக டார்ச் லைட்டைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

பஞ்சத்திற்கு ஆண்டி என்பார்களே, அதைப் போல பஞ்சத்திற்காகத் "தக்கான்" ஆனவன் பொன்னன். சாதாரணமாகப் பகல் வேளையில்கூட பலகையில் ஒழுங்காக ஆணி அடிக்கத் தெரியாத அவனால் இருட்டில் தகரத்திற்கு ஆணி அடிக்க முடியுமா? எத்தனையோ முறை சுத்தியல் வழுக்கிக் கொண்டு இடக்கையின் கட்டை விரலை ருசி பார்த்தது. என்றாலும் "அழுதாலும் பிள்ளை அவளே பெறவேண்டும்" என்பது போல அவன்தான் ஆணி அடித்தாக வேண்டும். அதுவும் விடிவதற்குள் இந்த ஆணி அடிக்கும் வேலை என்ன, அவன் கட்டிக் கொண்டிருக்கும் "மாட்டுக் கொட்டகை"யின் அத்தனை வேலைகளையும் செய்து முடித்தாக வேண்டும்.

பொன்னன் மாடுகளுக்காக இந்தக் கொட்டகையைக் கட்டவில்லை. ஆசைக்கு அடித்துத் தின்ன ஒரு கோழிகூட இல்லாதபோது மாடாவது; மண்ணாங்கட்டியாவது! அந்தக் கொட்டகைதான் அவனும் அவன் மனைவியும், ஐந்து பிள்ளைகளும் இனி வாழப்போகும் "தொழுவம்".

மாடு மாதிரி உழைப்பவன் மாட்டுக் கொட்டகையில் தானே குடியிருக்க வேண்டும். இது யார் வகுத்த சட்டம் என்று ஆராய்வது வெட்டி வேலை. ஏதோ இந்த அளவுக்காகவாவது சொந்த வீடு என்ற பேரில் சபம் எடுக்கப்பட்ட அந்த மணல் மேட்டில் ஒரு மாட்டுத் தொழுவமாவது அவனால் கட்ட முடிந்ததே. அதுதான் பொன்னனுக்கு "அவனால்" ஆக்கப்பட்ட படி.

ஒரு வழியாகக் கூரைத் தகரத்தைக் கன்றுபின்றுவென்று ஒழுகாத வரைக்கும் சரி என்றும் முடிவோடு அடித்துவிட்டு இறங்கினான் பொன்னன். செப்பமாக மழையில் நனைந்து விட்டதால் அவனுடைய உடல் குளிரில் நடுங்கிக்கொண்டிருந்தது.

ஒரு பிடியைப் பற்றவைத்து இரண்டு இழுப்பு இழுத்துக் குளிரைப் போக்க முயன்றான். மாரிக்கும் குளிர்தான். பிடி பிடிக்கும் பழக்கம் அவளுக்கில்லை. என்ன செய்வது? சொதசொதவென்றிருந்த கைலியைப் பிழிந்து விட்டுக் கொண்டதோடு சரி.

பிடியைக் கொஞ்சம் இழுத்த பிறகு பொன்னன் மனத்தில் ஏதோ ஓர் இனம் புரியாத மகிழ்ச்சி பிறந்தது. சாப்பிட்ட வயிற்றோடு நல்லவரை நினைத்து மகிழ்வதுபோல அப்போது இந்த வீட்டைக் கட்டுவதற்கு முழு முதல் காரணகர்த்தாவான கரம்சிங்கை நினைத்துக்கொண்டான். அதே சமயத்தில் அவன் நினைவில் நண்பன் சங்கரனும் தோன்றினான்.

கரம்சிங், பொன்னன் இதுநாள் வரை குடியிருந்து வரும் வீட்டுக்குச் சொந்தக்காரர். சங்கரன் பொன்னனோடு பள்ளியில் ஒன்றாகப் படித்தவன். கொஞ்சம் வசதியோடு இருப்பவன். உலக விவரங்கள் சங்கரனுக்கு ஓரளவு தெரியும்.

பொன்னனுக்கு விவரம் தெரிந்த நாள் முதல் அவன் அப்பா, "கரம் சிங்" வீட்டில்தான் குடியிருந்தார். சாகும் வரைக்கும் வாடகை செலுத்திக் கொண்டிருந்தார். அவர் போன பிறகு, பொன்னன் அந்த வீட்டுக்கு வாடகை தந்து கொண்டிருந்தான். இவ்வளவு காலத்திற்கும் போன மாதம் வரை ஒரு சொந்த வீடு கட்ட வேண்டும் என்ற சிந்தனை பொன்னனுக்கு வந்ததில்லை. அவனுடைய நண்பன் கூட அதைப்பற்றிச் சொன்னபோது பொன்னன் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை.

அவன் வேலை செய்வது ஓடுகள் செய்யும் ஒரு சீனர் நிறுவனத்தில். அங்குப் பல ஆண்டுகள் வேலை செய்தும்கூட பொன்னனுக்குச் சம்பளம் என்னவோ, என்றும் பதினாறு வயது மார்க்கண்டேயன் போலவே இருந்தது. இந்த லட்சணத்தில் ஐந்து பிள்ளைகள். சம்பாத்தியம் சாப்பாட்டுக்கே போதாதபோது வீடு கட்ட முடியுமா? அதுவும் இப்போது சட்டம், ஆணி விற்கும் விலையில்!

"வீடுகட்ட முயற்சி செய்; நான் கொஞ்சம் பணம் தருகிறேன்" என்று சங்கரன் சொன்னபோதுகூட, நண்பனிடம் பட்ட கடனைப் பிறகு எப்படி அடைப்பது என்றும் பயத்தில் பொன்னன் மறுத்துவிட்டான்.

இதெல்லாம் போனமாதம் ஒரு நாள் கரம்சிங்கோடு ஏற்பட்ட வாக்குவாதம் வரைக்கும்தான் நிலைத்தது. அதற்குப்பிறகு தலையை அடகுவைத்தாவது ஒரு மாட்டுக் கொட்டகை போன்ற வீட்டைக் கட்டியே ஆகவேண்டும் என்று பொன்னன் சபதம் எடுத்துக்கொண்டான்.

போனமாதம் சம்பளம் வாங்கிய மறுநாள் வீட்டுவாசலில் கரம்சிங் நின்றார். எதற்கு வந்திருக்கிறார் என்பது பொன்னனுக்குப் புரிந்தது. ஆனால் என்ன செய்ய; அந்த மாதம் வீட்டில் குழந்தைகளுக்கும், மனைவிக்கும் தொடர்ந்து நோய் ஏற்பட்டிருந்ததால் உண்டான அதிகப்படியான மருத்துவச் செலவில் வீட்டு வாடகைப் பணமும் கரைந்து விட்டது!

சம்பளம் எடுத்த அன்றே வீடு தேடிவரும் வாடகைப் பணம் வராததால் கரம்சிங் மறுநாள் வீடு தேடி வந்துவிட்டார்.

பொன்னன் நிலைமையை விளக்கினான். இந்த விளக்கத்தை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தால் தனக்கு வரவேண்டியது வராது என்பது கரம்சிங் மனத்தில் கல்மேல் எழுத்துப்போல் பதிந்துள்ள பாடம்.

"நீ அடுக்கடுக்காகப் புள்ளைங்களப் பெத்துகிட்டா அதுக்கு நான் என்ன பண்றது? ஒன்னு ரெண்டா இருந்தா சிக்கும் வராது" என்று வாடகை கேட்க வந்தவர் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரமும் செய்ய ஆரம்பித்துவிட்டார்.

வந்துவிட்டது கோபம் பொன்னனுக்கு. "நீயாய்யா என் புள்ளைங்களுக்குச் சோறு போடுற, சிக்குப் பாக்குற? இப்ப என்ன வாடகை கொடுக்க மாட்டேனுன்னு சொன்னேன்! மாதம் ரெண்டோ மூனோ, சேர்த்துச் சேர்த்துத் தந்திடுறேனே. இதுக்குப் போய் புள்ளை பெத்துக்கிட்டத இழுத்துப் பேசறியே?... என்று கத்தியதோடு பொன்னன் நின்றிருந்தால் பரவாயில்லை. சங்கரன்மூலம் தெரிந்து வைத்திருந்த சட்டப் பிரச்சினையையும் அள்ளிவிட்டான்.

"என்ன பாயி, சும்மாக் கிடக்கும் நிலத்துல நீ பாட்டுக்கு வரிசையாக வீட்டைக் கட்டிக்கிட்டு வீட்டுக்கு இருபது முப்பதுன்னு வாடகை வாங்கிக்கிறே! கவர்மெண்டுக்கு "நிலத்துச் சுக்கை" கட்டுறியா? வாங்குற வாடகைப் பணத்துக்கு வரி கட்டுறியா? இது "கவர்மெண்ட் நிலம். உன்னோட சொந்த நிலமில்லை தெரியுமா! நான் போயி போலீஸ்ல ரிப்போட் பண்ணினா அப்புறம் தெரியும் உன் சேதி!" என்று சங்கரன் சொல்லியிருந்ததை அப்படியே ஒப்புவித்தான் பொன்னன். கரம்சிங்கிற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

"இந்த வீடுங்களக் கட்டி பதினஞ்சு இருபது வருஷமாச்சு. எத்தனையோ பேர் இருந்திருக்காங்க. அவங்கள்ல யாருமே கேட்காத கேள்வியை நீ கேக்கிறே, ரிப்போர்ட் பண்ணப் போறியா? போ, பண்ணு!

எனக்கு என்ன. அந்தப் போலீஸ் காரங்களைத் தெரியாதுன்னு பார்த்தியா, என் ஊட்டுலே இருந்துகிட்டு என்னையே மிரட்டுறியா? அவ்வளவு சட்டம் தெரிஞ்ச ரோஷக்காரனு இருந்தா நீயும் ஒரு வீட்டைக் கட்டிப் பாரேன், பார்ப்போம். இப்பவே என் வீட்டை விட்டு வெளியேறு" என்று எகிறிக் குதித்தார் அவர்.

பொன்னனுக்கு அப்போது தான் புரிந்தது தனது "மடத்தனம்"— சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்து விட்டோமே என்று கவலைப்பட்டான்.

இனிக் கவலைப்பட்டு ஆவப் போவதென்ன? கையில், மடியில் இல்லாதவர்கள், நீதி, நியாயம், சட்டம் ஆகியவற்றை வாய்தவறியும் கூடப் பேசக்கூடாது என்பது இப்போதுதான் புரிந்தது பொன்னனுக்கு.

"வீட்டை விட்டு வெளியேறு" என்று கரம்சிங் சொன்னது கூடப் பரவாயில்லை. "ஒரு வீட்டைக் கட்டேன் பார்க்கலாம்" என்று சவால் விட்டது பொன்னனின் தன்மானத்தைக் கிண்டிவிட்டது. எப்பாடுபட்டாகிலும் வீட்டைக் கட்டியே தீருவது என்ற முடிவுக்கு வந்த அவன் நேரே போய்ச் சங்கரன் வீட்டில்தான் நின்றான். அவனை விட்டால் பொன்னனுக்கு வேறு வழியேது? முன்பு வாங்குவதற்குத் தயங்கிய பண உதவியை இப்போது வாங்குவதென்னும் முடிவுடன்தான் அவன் அங்குச் சென்றான்.

பொன்னன் அங்குப் போயிருந்த சமயத்தில் சங்கரன், அவனுடைய வேறொரு நண்பருடன் பேசிக்கொண்டிருந்தான். அவர்களின் பேச்சும் வீட்டைப் பற்றியதாகவே இருந்தது.

"எங்கெங்கே வீடமைப்புத் திட்டம் துவங்குகிறார்களோ, அங்கங்கெல்லாம் ஆளுங்கள வச்சி ஒன்னு, ரெண்டு வீடுங்களைப் "புக்" பண்ணுறீங்க நீங்க. விடு கட்டின பிறகு அஞ்சாயிரமோ, பத்தாயிரமோ அதிகமாவச்சி வித்திடுறீங்க! உங்களுக்கென்ன, பணத்துக்குப் பஞ்சமா, பணம் இருக்கிறதனலை அது அதுக்கு ஆளுங்களைப் பிடிச்சு வீடுங்களைப் "புக்" பண்ணிக்கிறதுக்தான் பஞ்சமா சொல்லுங்க!" என்று சங்கரன் அந்த நண்பரிடம் கூறினான்.

"இதுதாங்க பிசினஸ்! மலிவு வீடுன்னு சொன்னாலும் அதிகமா பணம் கொடுத்து வாங்கிறவங்க உள்ள வரைக்கும், ஒருவரே சொந்தக்காரங்க, ஜாதிக்காரங்க பேராலே பல வீடுகளை வாங்கறதைக் கட்டுப்படுத்தற வரைக்கும் இம்மாதிரி பிசினஸ் நடந்துக்கிட்டுத்தான் இருக்கும்" என்றார் அந்த நண்பர்.

ஒருபுறம் கரம்சிங்கைப் போன்றவர்கள் சும்மா கிடந்த நிலத்தில் வீடுகளைக் கட்டிக்கொண்டு அரசாங்கத்தை ஏமாற்றுகிறார்கள். மறுபுறம் சங்கரனின் நண்பரைப் போன்றவர்கள் மலிவு வீடுகள் உள்ளபடியே சாதாரணமானவர்களுக்குக் கிடைக்க வழியில்லாதபடி அரசாங்கத்தின் கொள்கையையே சிதைத்து விடுகின்றார்கள்.

இந்தச் சிந்தனை பொன்னனுக்கு ஒன்றும் பாதியுமாகப் புரிந்தது. இதுபற்றிச் சங்கரனிடம் விளக்கம் கேட்க நினைத்தான் பொன்னன். "அதற்கு ஏற்ற சமயமா இது? என்று தலையில் அடித்துக்கொண்டு வந்த விஷயத்தை சங்கரனிடம் சொன்னான்.

விஷயத்தைக்கேட்டதும் சங்கரன் "உன் மாதிரி ஆளுங்க, எப்பவுமே தும்பை விட்டுட்டு வாலைத்தான் பிடிப்பீங்க" என்று கிண்டல் செய்து விட்டு நாளைக்கு வா பணம் தரேன் என்றுசொல்லிப்பொன்னனை அனுப்பி வைத்தான்.

மகிழ்ச்சியோடு வீடு திரும்பிய பொன்னனை வீடு கட்ட நிலம் வேண்டுமே. என்ற கவலை பிடித்துக் கொண்டது.

"கம்போங் ஜெயாவிலே" இருக்காளே என் தோழி ராமாயி. அவ புருஷன் அங்கே ஒரு . துண்டு நிலத்தை வேலி அடிச்சு வெச்சிருக்காருன்னு ராமாயி ஒரு தடவை சொன்னாள், அங்கே போயி விசாரிப்போம்." என்று பொன்னனின் கவலைக்கு மருந்து சொன்னாள் மாரி.

அங்குப் போய் விசாரித்தான்; சிறிய இடத்துக்கு ராமாயி புருஷன் நூறு வெள்ளி கேட்டார். அரசாங்க நிலத்தைச் சும்மா வேலி பிடித்த உரிமைக்காக நூறு வெள்ளி சொல்வது பொன்னனுக்கு அநியாயமாகப் பட்டது. இந்த இடத்தில் அநியாயத்தைக் கூறித் தனது வீடு கட்டும்



சபதத்தைக் கெடுத்துக்கொள்ள பொன்னன் விரும்பவில்லை. சரி என்றும் சம்மதத்தோடு வந்துவிட்டான்.

சங்கரனிடம் பணத்தைப்பெற்று வீடு கட்டத் துவங்கியபோது அந்தக் கம்பத்துத் தலைவர் சுப்புராமன் வந்து, "பண்டார் ராயா" காரங்க வந்து வீட்டை இழுத்திடுவாங்க. கொஞ்சம் பணம் கொடு நான் அவங்களை தண்ணை கட்டிடுறேன்" என்று சொல்லி கொஞ்சம் பணம் வாங்கிக் கொண்டார்.

வீடு நிச்சயம் நிலைத்துவிடும் என்ற நம்பிக்கையில் பொன்னனும் திமர்த் துக்காளுக மாறி மனைவியைக் கைக்கு உதவியாக வைத்துக் கொண்டு சனிக்கிழமை காலையில் வேலையைத் துவக்கினன். மறுநாள் காலையில் வீட்டில் குடியிருந்தாக வேண்டும் என்பது சுப்புராமனின் யோசனை.

சுப்புராமனின் யோசனைப் படியே பொன்னன் விறு விறு வென்று ஏதோ ஓர் அடைப்பு இருந்தால் சரி என்று அந்த நள்ளிரவிலும் வீடு கட்டிக் கொண்டிருந்தான்.

பொழுது விடிந்தது; ஞாயிற்றுக் கிழமையும் வந்தது; வீட்டு வேலையும் கிட்டத்தட்ட முடிந்தது.

காலை மணி பத்திருக்கும். பொன்னன், கரம்சிங் வீட்டிலிருந்து எடுத்துவந்த சாமான்களை லோரியிலிருந்து இறக்கிக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் பண்டார் ராயாவைச் சேர்ந்த ஒரு லேண்ட் ரோவர் அங்கு வந்து நின்றது.

பொன்னன் பீதியடையவில்லை. ஏனென்றால் சுப்புராமனிடம் ஒழுங்கு பண்ணிவிட்டானே! லேண்ட் ரோவரிலிருந்து இறங்கியவர்களில் ஒருவர் "வீடு யாருடையது" என்று கேட்டார். பொன்னன் "தன்னுடையதுதான்" என்றான்.

"இது மாதிரி சட்டவிரோதமா அரசாங்க நிலத்தில் வீடு கட்டக் கூடாதுன்னு உனக்குத் தெரியாதா?" என்று சத்தம்போட்டார் அவர்.

"எனக்குக் குடியிருக்க வீடு இல்லிங்க அதனாலதான்..." என்று இழுத்த பொன்னன் சுப்புராமனின் வீட்டுக்கு ஆள் அனுப்பினான்.

அவர் வீட்டில் இல்லை. காலையிலேயே எங்கோ கிளம்பிவிட்டிருந்தார். விஷயம் தெரிந்தவர் அல்லவா?

பொன்னனின் தைரியம் பறந்து விட்டது. அந்த அதிகாரிகளிடம் கெஞ்சினான். ஒன்றும் பலிக்கவில்லை.

கருமமேகண்ணென்று வந்திருப்பவர்களுக்குப் பொன்னனின்வீட்டுப் பிரச்சினையைப் பற்றிக் கவலை என்ன?

லேண்ட் ரோவரில் கட்டப்பட்ட ஒயர் பொன்னனின் மாட்டுக் கொட்டகையையும் அதனோடு சேர்த்து அவன் சபதத்தையும் தரை மட்டமாக்கிவிட்டுச் சென்று விட்டது. ■



கள்வன் எனும் பழிசுமத்தப் பட்டுக் கோவலன் கொலையுண்டதும், கண்ணகி பொங்கியெழுந்து மதுரை மாநகரைத் தீக்கிரையாக்கியதும் காவிய நிகழ்ச்சிகள். ஆனால் இந்த நிகழ்ச்சிகள் இன்று நடந்திருந்தால் இப்படியெல்லாம் அறிக்கைகளை எதிர்பார்க்கலாமோ?



மறுபடியும் கண்ணகி மதுரையை எரித்தால்..!

'ஆவன்னா'

நையாண்டிமேளம்

அணிகள் வேண்டாம் என்று பலமுறை சொன்னேனே, கேட்டார்களா? கோவலன், கண்ணகி, மாதவி, நெடுஞ்செழியன், பொற்கொல்லன் எல்லாரும் ஒரே அணியாக இருந்து ஒன்றித்துச் செயல்பட்டிருப்பார்களேயானால் இப்படி ஆகி இருக்குமா? போனது போகட்டும்! நடந்தவற்றை மறந்துவிட்டு இனியாவது ஒற்றுமையாக இருக்க எல்லாரும் முயலவேண்டும். ஒன்றாக இருந்து பாடுபட்டால்தான் முன்னேற்றம் காணமுடியும்.

—டான்ஸ்ரீ வெ. மாணிக்கவாசகம்

தேசியத் தலைவரிடமும், மாநிலத் தலைவர்களிடமும், கிளைத் தலைவர்களிடம், உறுப்பினர்கள் அனைவரிடமும் கேட்டேன்; நெடுஞ்செழியன் செய்தது தவறு என்று எல்லாருமே கூறுகிறார்கள். எனவே அவன் செய்தது தவறுதான்! அமைச்சர், சேனாதிபதியர் முதலிய ஐம்பெருங் குழுவினரிடமும், கரணத்தியலவர், கருமகாரர் முதலிய எண்பேர் ஆயத்தாரிடமும், பாண்டியநாட்டு மக்கள் ஒவ்வொருவரிடமும் கேட்டபிறகு நெடுஞ்செழியன் ஒரு முடிவெடுத்திருந்தான் என்றால் இப்படியொரு தவறு நடந்திருக்காது!

—சி. சுப்பிரமணியம்

கண்ணகி மதுரையை எரித்த இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை மலேசிய வானொலியும், தொலைக்காட்சியும் உணராதது மிகவும் வருந்தத்தக்கது, செய்தியில் ஒரு நிமிடம் இதற்காக ஒதுக்கிவிட்டால் மட்டும் போதுமா? தமிழில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி தயாரித்திருக்கக்கூடாதா? கண்ணகியைப் பேட்டி கண்டு ஒளிபரப்பியிருக்கக்கூடாதா? அடுத்த மாதம் ஐந்தாம் தேதி பெடரல் ஓட்டலில் ஒரு கருத்தரங்கு நடத்தி இதுபற்றி ஓர் அறிக்கை தயாரிக்கப்படும்.

—வி. டேவிட்

செய்தியறிந்து நான் மிகவும் வேதனைப்படுகிறேன். என் வேதனையில் உழைப்பாளிகளும் பங்குகொள்வார்கள் என்று நம்புகிறேன். இளரத்தம் வேண்டும், புதுரத்தம் பாயவேண்டும் என்று நான் சொல்வதன் அவசியத்தை மக்கள் இப்போது உணர்ந்து கொண்டிருப்பார்கள். நெடுஞ்செழியனின் உடலில் இளரத்தமும் புதுரத்தமும் ஓடியிருக்குமானால் பொற்கொல்லன் சூழ்ச்சி செய்திருப்பானா, கோவலன் மாண்டிருப்பானா, கண்ணகிதான் மதுரையை எரித்திருப்பாளா?

—ச. சாமிவேலு

இப்படியெல்லாம் நடந்தாலும்நடந்துவிடுமோஎன்று பலஆண்டுகளுக்கு முன்பே நான் சிந்தித்தேன். அதனால்தான் தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கத்தைத் துவக்கினேன். மாதவியிடம் செல்வம்முழுவதையும் இழந்த கோவலன், ஏற்கனவே பத்துப்பத்து வெள்ளியாகச் செலுத்திப் பங்கு வாங்கியிருந்தால் மதுரைக்குச் சென்றிருக்கவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. சொந்தத் தோட்டத்தில் கண்ணகியோடு நிம்மதியாக வாழ்ந்திருக்கலாம்!

—துன் வீ. தி. சம்பந்தன்


கண்ணகியின் நிலைகுறித்து நான் உண்மையிலேயே வருந்துகிறேன். ஆனாலும் கோவலன் — கண்ணகி பிறந்து வளர்ந்த பூம்புகார், மதுரைக்கு அவர்கள் சென்ற வழி, மதுரையில் தங்கியிருந்த ஆயர்பாடி, கொலைக்களம், நெடுஞ்செழியன் அரண்மனை போன்ற பல இடங்களையும் முழுமையாகச் சுற்றிப் பார்த்து ஆய்வு நடத்தாமல் கருத்துச் சொல்வது சரியல்ல. மிக விரைவில் அந்த இடங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்து, தகுந்த புள்ளி விவரங்களோடு முழுமையான அறிக்கை சமர்ப்பிக்க எண்ணியுள்ளேன்.

—கு. பத்மநாபன்

பூம்புகாரிலும், மதுரையிலும் இளைஞர் பகுதி இருந்திருந்து, கோவலன், கண்ணகி, நெடுஞ்செழியன் போன்றவர்கள் தலைமைத்துவ வகுப்பில் கலந்துகொண்டிருப்பார்களேயானால் இப்படியொரு நிகழ்ச்சி நடந்தே இருக்காது. எனவே அவ்விரு நகர்களிலும் உடனடியாக இளைஞர் பகுதி அமைக்கவேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்.

—வி. எல். காந்தன்

மயிலே! மயிலே!



அண்மையில் வானொலியில் ஒரு சனிக்கிழமையன்று "கலப்பட" நிகழ்ச்சி ஒலிபரப்பாகியது. அதில் இரண்டாவது அங்கமாக இடம் பெற்ற நகைச்சுவை நிகழ்ச்சியில் இரண்டு திறன்மிக்க கலைஞர்கள் பங்கேற்றனர். கலைஞர்கள் இருவரும் தங்களின் நகைச்சுவை வெடியில் ரசிகர்களைச்சிரிப்பில் ஆழ்த்திக் கொண்டிருந்தனர்.

நகைச்சுவை உரையாடலின் இடையில் கலைஞர் ஒருவர் மற்றவரிடம், "மயிலே மயிலே இறகு போடு என்றால் போடுமா?" என்று கேட்டார். அதற்கு மற்றவர் "அது எப்படிப் போடும், மயிலுக்குத்தான் தமிழ் தெரியாதே!" என்றாரே பார்க்கலாம். நிகழ்ச்சியை செவிமடுத்துக் கொண்டிருந்த என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

—ஆர். பாலசுப்ரமணியம்,
லாபுவான் பாடாங் தோட்டம்,
பத்துதிகா

போதும் உங்க உபகாரம்

டாக்டர் இரா. தண்டாயுதம்

சிறுகதை ஒரு தனி இலக்கிய வகையாக உருவாகி வளரத் துணை நின்றது பத்திரிகை. எனினும், படித்தவுடன் ஒரு நூலைப் பாதுகாப்பதுபோல், படிக்கும் பத்திரிகைகள் அனைத்தையும் பாதுகாத்து வைப்போர் ஒரு சிலராகவே இருப்பர். எனவே எவ்வளவு நல்ல ஒரு சிறுகதையும் ஒரு பத்திரிகையில் வெளிவந்து நூல் வடிவம் பெறவிட்டால் அதன் வாழ்வு கேள்விக்குறியானதாகவே நின்றுவிடும். தமிழ்ச் சிறுகதையின் தந்தை என்று பாராட்டப்படும் புதுமைப்பித்தன், தமிழ்ச் சிறுகதை பற்றிய தம் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ள சிறுகதையாசிரியர்களுள் ஓரிருவர் யாரென்றே இன்று தெரியவில்லை. புதுமைப்பித்தனாலேயே பாராட்டப் பெற்ற அவர்கள் இன்று தெரியாமல் போனதற்குக் காரணம், அவர்கள் படைப்புக்கள் நூல் வடிவம் பெறாததே. அதே நேரத்தில், பல நோக்கங்களோடு வெளிவரும் வார, மாத, மாதமிருமுறை, இன்னும் பல பத்திரிகைகளில் வெளிவரும் கதைகள் அனைத்தும் நூலுருவம் பெறுவதும் சாத்தியமான ஒன்றல்ல. தமிழகத்தில் மட்டும் ஆண்டிற்குச் சுமார் இரண்டாயிரம் சிறுகதைகள் வெளிவருகின்றன. இவை அனைத்தும் நூலுருவம் பெறவேண்டும் என்று கூறுவது நடைமுறைக்கு ஒவ்வாதது. இந்நிலையில் தேர்ந்த சில சிறுகதைகளையாவது தொகுத்து வெளியிடலாம் அல்லவா? அவை, அந்தக் குறிப்பிட்ட ஆண்டின் இலக்கியப் போக்கை ஓரளவாவது உணர்த்துமே! இந்தத் தேவையை நிறைவேற்ற 1970-ஆம் ஆண்டில் தனிப்பட்ட மூவருடைய முயற்சியால் தோற்றுவிக்கப்பட்ட "இலக்கியச் சிந்தனை" என்னும் அமைப்பின் ஏழாவது சிறுகதைத் தொகுப்புதான் "போதும் உங்க உபகாரம்?"

1976-ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் வெளிவந்த சிறுகதைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றை இந்நூலாகத் தொகுத்துத் தந்துள்ளனர். இக்கதைகளில் ஒன்றை அவ்வாண்டின் சிறந்த சிறுகதையாகத் தேர்ந்தெடுத்து நூலின் பெயராகச் சூட்டியுள்ளனர். இப்பணியைச் செய்திருப்பவர் திறனாய்வாளர் ரகுநாதன். நறுக்குத் தெறித்தாற் போன்ற சொற்களால் நேர்மையான துணிவான திறனாய்வு செய்து இக்கதையைத் தேர்ந்தெடுத்துள்ளார் ரகுநாதன். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு, டிசம்பர் 1976 கதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள "சிரிப்பு மருந்து" சிறுகதையைப் பற்றி அவர் கூறியுள்ள கருத்தாகும். குடியின் கொடுமையைக்கூறும் கதை இது. கதை முழுவதும் ஒரு சிறுவனின் சொற்கள் மூலம் கூறப்படுகிறது. சொல்லும் முறையிலோ, நடையிலோ, சம்பவக் கோவையிலோ ஒரு புதுமையையும் காண முடியாத ஒரு சாதாரண கதை இது. இக்கதை எப்படித் தேர்வு பெற்றது என்ற வியப்பு யாருக்கும் எழாமல் போகாது. வேறு ஒரு திறனாய்வாளர் தேர்வு செய்த இக்கதை பற்றி எவ்விதச் சப்புக்கட்டும் கட்டாமல், தம் கருத்தை உள்ளபடி தெரிவித்துள்ளார் ரகுநாதன். "சென்ற ஆண்டின் இறுதியில் வெளிவந்த சிறந்த சிறுகதை இதுதான் என்றால், பல ஆண்டுகளாக வளர்ந்து ஒளிபரப்பி வந்த தமிழ்ச் சிறுகதை உலகம், சென்ற ஆண்டின் இறுதியோடு அஸ்தமித்து இருண்டு போய்விட்டது என்றே சொல்லவேண்டும்!" என்பது அவர் இக்கதையைப் பற்றிக் கூறும் கருத்து. சரியான, துணிவாக கருத்து.

இக்கதை தவிர்த்து மு. மேத்தாவின் "சத்திய சோதனை" கடல்மணியின் "மாடசாமியின் ஊர்வலம்", கி. ராஜநாராயணனின் "புவனம்", ஆர்வியின் "ஒரு காம்ப்ளெக்ஸ்", சு. சமுத்திரத்தின் "போதும் உங்க உபகாரம்". பாசுவின் "நல்லவர்", ஏ. ஏ. ஹெச். கே. கோரியின் "காய்தல்", வனமாலியின் "விடியுமா?", பொள்ளாச்சி அம்பலத்தின் "கால் வயிறு", லிங்கனின் "தோப்பில் சில மரங்கள்", மன்னர் மன்னனின் "பசிகள்" ஆகிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கலைமகள், கல்கி, ஆனந்த விகடன், குமுதம், கணையாழி, தாமரை, செம்மலர், சிகரம் ஆகிய பல பத்திரிகைகளில் வெளிவந்தவை இவை.

இல்லாமையும் ஏழ்மையும் வறுமையும் மனித வாழ்வில் கருவாகி உருவாக்கும் பிரச்னைகளும் சிக்கல்களும் போராட்டங்களும் எண்ணற்றவை. இத்தொகுப்பின் பல கதைகள் இவற்றையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. வயிறு நிறைந்தவர்களின் பிற வசதிகளைக் கதைப் பொருள்களாகத் தொண்டு மேற்போக்காக எழுதிய காலம் மறைந்து, வறுமையிலும் ஏழ்மையிலும் அன்றாடம் செத்துப் பிழைப்பவர்களின் பிழைப்பைக் கூர்ந்து பார்த்துத் துணிந்து எழுதவந்துள்ள ஒரு புதிய எழுத்தாள அணியினரை இத்தொகுப்பின் மூலம் இனம்கண்டு கொள்ளலாம். பசியும் பஞ்சமும் மனிதனுடைய தன்மானத்தையும் அழித்துவிடக்கூடிய ஆற்றல் பெற்றவை என்பதை உணர்த்தும் கதைகள் "காய்தல்", "பசிகள்" என்னும் கதைகள், பசி தாங்காமல் பனம்பழத்தைப் பொறுக்கித் தின்னும் மகனைக் கண்டிக்கும் தந்தை, தானே பனம் பழம் பொறுக்கப் போவதைப் "பசிகள்" உருக்கமாகக் காட்டுகிறது. பசியின் காரணமாக முதலில் மகனும், பின் மகளும் தாயும், இறுதியில் தந்தையுமாக ஒரு கல்யாண வீட்டிற்கு ஏதோ ஒரு நொண்டிக் காரணம் காட்டிச் சாப்பிடப் போவதை இரண்டாம் கதையான "காய்தல்" கதையாக்கிக் காட்டுகிறது. வயிற்றுப் பிழைப்பிற்காகச் சாணி பொறுக்கப் போய், முரட்டு எருமை மாட்டிடம் உதைபட்டு மரணத்தைத் தழுவும் ஒரு சிறுமியின் கதையைக் "கால்வயிறு" கலைஓவியமாக்கிக் காட்டுகிறது. முறைவாசல் செய்யும் பெரியம்மாவின் கொடுமைக்கு அஞ்சித் தப்பிக்க எண்ணும் சிறுமி, தான் தப்பிக்க உதவி செய்யும் பெரியப்பன் கலக்கல் சாராயம் அருந்திப் பலியாவதைக் கண்டு பொருமி நிற்பதை "விடியுமா?" காட்டுகிறது. தப்பிப்பதில் சிறுமியின் ஆசையும், அவ்வாசையை அவள் வெளிப்படுத்தும் முறையும் இக்கதையில் சிறப்பாக வந்துள்ளன. நடமாட முடியாமல் ஓரிடத்திலே முடங்கிவிட்ட ஒரு கிழவியின் பார்வையில் ஏழ்மையின் சில காட்சிகளைத் "தோப்பிற்குள் சில மரங்கள்" காட்டுகிறது. இத்தொகுதியின் சிறந்த கதையான "போதும் உங்க உபகாரம்", சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களிடமும் ஏழைகளிடமும் இருக்கும் மென்மையான அன்பினைப் புலப்படுத்துகிறது. இதனை மனித பலமாக ரகுநாதன் கருதுகிறார்.

இத்தொகுதியின் பிற கதைகளில் "மாடசாமியின் ஊர்வலம்" மக்கள் பத்திரிகை எனப் பட்டம் கட்டிக் கொள்ளும் சில பத்திரிகைகள் மக்களை எப்படித் திசை திருப்பி அலைக்கழிக்கின்றன எனக் காட்டுகிறது. பிற கதைகள் மனித இயல்பின் விசித்திரங்களைக் காட்டுவன. வாழ்க்கையில் சாத்வீகத்திற்கும் பலாத்காரத்திற்கும் நடைபெறும் போட்டியைச் "சத்திய சோதனை" கதையாக்குகிறது. இளமையில் இனம் புரியாது ஏற்படும் ஆண்-பெண் கவர்ச்சிக்கு மென்மையான உருவம் கொடுக்கிறது "புவனம்". நல்லவராகவே நடந்து ஏற்படும் இழப்புக்களைத் தாங்கும் ஒரு நல்லவரை "நல்லவர்" கதையில் காணலாம். தாழ்வுணர்ச்சியால் ஏற்படும் போராட்டம் "ஒரு காம்ப்ளெக்ஸ்" கதையாகியுள்ளது.

மொத்தத்தில், ஒரு சிறிய அனுபவமும் எப்படிச் சிறுகதை வடிவம் பெற முடியும் என்பதை இக்கதைகள் தெளிவாக உணர்த்துகின்றன. எனினும், முன்னைய ஆறு தொகுதிகளில், மனத்தில் மறையாது நின்று போன "தனிமை", "எரிமலை", "சக்கரங்கள் நிற்பதில்லை", "பின்னணி" போன்ற கதைகளைப்போல் இதில் ஒரு கதையும் இல்லை. ரகுநாதனும் இந்த உண்மையைக் கூறியுள்ளார். சிறுகதை, பொருளால் (Content) மட்டும் சிறப்பதில்லை, சொல்லும் முறையும் சிறப்பாக அமைய வேண்டும் என்பதையே இந்நிலை உணர்த்துவதாகக் கொள்ளலாம். தமிழ்ச் சிறுகதை இந்தக் கதியில்தான் போய்க்கொண்டுள்ளதா அல்லது தேர்வில் நேர்ந்த குழப்பமா என்பதை ஆராய வேண்டும். எனினும் வாழ்வின் எல்லாப் பக்கங்களையும் கூர்ந்து பார்க்கத் துடிக்கும் ஒரு புதிய அணி உருவாவதை இத்தொகுதி தெள்ளத்தெளிவாகக் காட்டி நிற்கிறது. ●

முருகுவைக் கேளுங்கள்

பூபாலன் இராகு, தைப்பிங்

கே: ஒருவன் எந்த அளவில் தன்னலம் கொள்ள வேண்டும்?
ப: மற்றவர்களின் நலனில் குறுக்கிடாத அளவுக்கு.

எம். பி. சகுசிபு, சுங்கைப்பாசிர், சுங்கைப்பட்டாணி

கே: வாழ்க்கையில் நெறிதவறிய பெண்களுக்கு வாழ்வு அளிக்க வரும் ஆண்களின் இதயம் எப்படிப்பட்டதாக இருக்கும்?
ப: இரக்கமும் மனிதத்தன்மையும் நிறைந்த இதயமாக இருக்கும்.

எம். ஜி. ராஜூ, கோல தெர்லா, கேமரன்மலை

கே: அண்ணு! மனைவி குழந்தைகள் இருக்கும் ஒருவர், திருமணம் ஆகி ஒருமாதத்தில் கணவன் இறந்துவிட்ட ஒரு விதவையைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறார். இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?
ப: பண்பற்ற ஆசை.

இரா. வேலாயுதம், பெல்டா கெம்லா, சிகாமட்

கே: மலேசியாவில் எந்த மாகாணத்தில் அதிகமான தமிழர்கள் வசிக்கிறார்கள்?
ப: சிலாங்கூரில்—

கே: தங்களது தலைமையில் இதுவரை எத்தனைத் திருமணங்கள் நடைபெற்றுள்ளன?



ப: 500க்கும் அதிகமாக இருக்கும்.

கே: புதிய சமுதாயம் துணை ஆசிரியர் யார்?
ப: "புதிய சமுதாயம்" ஆசிரியர் பகுதியில் பாதாசன், நகைச்சுவைப்பித்தன் ஆகியோர் துணைபுரிந்து வருகின்றனர்.

சு. அ. நாராயணன், தெமர்லோ

கே: சார், அரசியலில் ஈடுபட எனக்கு மிகவும் ஆர்வமாக உள்ளது. தங்களின் ஆலோசனை என்ன?
ப: அரசியல் வாழ்க்கைக்குப் பணமும் அதனைச் செலவழிப்பதற்குத் தாராளமான மனமும் இப்போது அதிகம் தேவை. பார்த்துக்கொள்ளுங்கள்.

தி. முனியாண்டி, ஈப்போ

கே: மானிடராகப் பிறந்ததைப் பற்றி உங்கள் கருத்து என்ன?
ப: நான் வருந்தவில்லை.

கே: இந்தியாவில் நிலைமை எப்படி இருக்கிறது?
ப: ஜனநாயகமும் மக்களின் பொறுப்புணர்ச்சியும் அங்கு ஜனதா தலைவர்களால் சோதிக்கப்பட்டு வருகின்றன.

பி. கே. செல்வதுரை, காப்பார்

கே: என் அண்ணனுக்கு வீட்டில் திருமணம் நடந்து இரண்டு மாதங்கள் முடிந்தன. திருமணப் பதிவு அலுவலகத்தில் அவர்கள் பதிவு செய்ய வேண்டுமா?
ப: திருமணப் பதிவு செய்வது நன்மை; அவசியம்.

எஸ். ஆர். செல்வராஜன், கெமுனிங் தோட்டம், மலாக்கா

கே: இவ்வருடத்தில் மலேசியப் பல்கலைக் கழகங்களில் இந்திய மாணவர்களுக்கு எத்தனை சதவிதம் இடம் கிடைத்துள்ளது என்பதைத் தெரிவிப்பீர்களா?
ப: 6.5 சதவிதம் என்று சொல்லப்படுகிறது.

"ஆர்வி" ஜெபா, சுங்கை

கே: இரவும் பகலும் சிந்திக்கத்தக்கது...?
ப: இறைவனின் திருநாமம்.

கே: கருணை, கடவுளாகி விட்டால் நீதியை எதிர்பார்க்க முடியுமா...?
ப: கருணைக்குள் நீதியும் அடங்கிக் கிடக்கிறது.

எம். பி. குணாளன், மிட்லண்ட்ஸ் தோட்டம், கிள்ளான்


கே: இந்தியக் கலாச்சாரத்தை வெறுக்கும் ஒரு நபரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
ப: அந்த நபர் இந்தியராக இருந்தால் அது தாழ்வு மனப்பான்மை.

அஞ்சு ராமச்சந்திரன், பத்தாங்காலி தோட்டம், சிலாங்கூர்

கே: என் நண்பன் ஓர் ஏழை. அவன் மூன்று மாடி வீட்டில் வாழும் பணக்காரப் பெண்ணை விரும்புகிறான், அதன் முடிவு?
ப: காதலுக்குப் பலமான "இறக்கை" இருந்தால் மாடிப்புறாவையும் மண்குடிசைக்கு இழுக்கமுடியும்.

வி. எல். மோகன், ரெங்கம் தோட்டம்

கே: பொதுத்தொண்டு செய்பவன் மேலதிகாரியிடம் வணங்கி ஏதாவது கேட்டால், சில வாலிபர்கள் கேலி செய்கிறார்கள். இவர்கள் திருந்த நீங்கள்தான் ஒரு வழி சொல்லவேண்டும்.



ப: பணிவது உயரிய பண்பு என்பதை அந்த வாலிபர்கள் காலப்போக்கில் உணர்வார்கள்.

தாரா எழிலழகன், சுங்கைவே

கே: திருந்திய உள்ளங்களுக்கும் திருந்தாத உள்ளங்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன?
ப: திருந்திய உள்ளம் பட்டை தீட்டிய வைரம்.

கே: காலத்தின் அருமையை மனிதன் எப்பொழுது நன்கு உணரத் தொடங்குகிறான்?
ப: காலங் கடந்த பிறகு.

வசந்த ராஜா, சிரம்பான்

கே: "ஆசியன் டெவலப்மெண்ட் பேங்க் கார்ப்பரேசன்" எனும் ஆசிய மேம்பாட்டு வங்கியில் நம் நாட்டின் சார்பாக யாரேனும் பிரதிநிதிக்கிறார்களா? இதன் தலைமையகம் எந்நாட்டில் இருக்கிறது?

ப: ஆசிய வளர்ச்சிப் பொருளகத்தின் ஆளுநர் குழுவில் மலேசியாவின் பிரதிநிதியாகவும் அக்குழுவின் தலைவராகவும் நமது நிதி மந்திரி துங்கு ரசாலி அங்கம் வகிக்கிறார். இந்தப் பொருளகத்தின் தலைமையகம் மணிலாவில் இருந்து வருகிறது.

ஆர். முத்துசாமி,
சங்கட் மிராண்டி கிராமம், சித்திபவான்

கே: தொட்டதற்கெல்லாம் சத்தியம் செய்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: தன்னம்பிக்கை இல்லாதவர்கள்.

கு. அர்ச்சுனன், சிகாமட்

கே: ஏன் நம் இந்தியர்களுக்குப் பெல்டா நிலத்திட்டத்தில் மிகவும் குறைவான இடங்களே தரப்படுகின்றன?

ப: பெல்டா அதிகாரிகளோ இதற்குக் காரணம் கூறவேண்டும்; நம்மிடமும் குறை உண்டு.

கே: பதவிக்குப் போட்டியிடும்போது நாம் ஏன் ஒருவரையொருவர் அவதூறு பேசிக்கொள்கிறோம்?



ப: இது நமது பிறவிக்குணம்.

எஸ். எஸ். வேலன் கோபால், ஆயர் கூனிங், கிள்ளான்

கே: அண்ணா, பகிரங்கம், பயங்கரம் இவ்விரண்டுக்கும் வேறுபாடு யாது?

ப: பகிரங்கம் என்றால் எலலாருக்கும் தெரிந்தது என்று பொருள்; பயங்கரம் என்றால் அச்சமூட்டக்கூடியது.

ஆர். பாலசுப்பிரமணியம்,
லாபுவான் பாடாங் தோட்டம், பத்து தீகா

கே: நான் உப்பு விற்கப் போனால் மழை பெய்யுது; மாவு விற்கப்போனால் காற்றடிக்குது, ஏன்?

ப: இனி மழை பெய்யும்போது மாவும், காற்றடிக்கும் போது உப்பும் விற்கச் செல்லுங்களேன்!

ப. கிருஷ்ணன், பெக்கோ தோட்டம், மலாக்கா

கே: புதிய சமுதாயத்தின் முக்கிய நோக்கம் என்ன?

ப: உரமும் திறமும் குறிக்கோளும் கொண்ட மலேசிய இந்திய சமுதாயத்தை உருவாக்குவது!

எம். குணசேகரன், பாரிட் புந்தார்

கே: எம். சி. இ. தேர்வுக்கு இவ்வருடம் பயன்படுத்தும் நூல்கள் யாவை? அடுத்த ஆண்டிலும் பயன்படுத்தக் கூடியவை?

ப: சிநேகிதி (அகிலன்), காதல் எங்கே? (டாக்டர் மு வ.), கவிமணியின் மலரும் மாலையும் நூலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பதினைந்து பாடல்கள். அடுத்த ஆண்டுக்கும் இவையே.

கே: "புதிய சமுதாயத்தில்" மாணவர்களுக்கான ஒரு பகுதியைத் துவக்கினால் என்ன?

ப: எம். சி. இ. மலேசிய மொழித் தேர்வில் வெற்றிபெறுவதற்கு வழிவகைகளைக் கூறும் கட்டுரைத்தொடர் மாணவர் பகுதிதானே!

அ. முருகேசு, ஜோகூர் லாபீஸ் தோட்டம், ச்சா"ஆ

கே: சைவ சமய விளக்கம் பகுதி அமைந்தால் இன்னும் சிறப்பாக இருக்குமே!

ப: சித்தாந்த வித்தகர் மனம் வைத்தால் தங்களின் ஆவல் நிறைவேறும்.

கே: மனைவி வாய்ப்பது முற்பிறவியின் பலன் என்பதைத் தாங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

ப: முற்பிறவியின் பலனோ என்னவோ, நற்பேறும் தெய்வத்துணையும் இருந்தால்தான் நல்ல மனைவி வாய்ப்பாள்.

ஏ. எஸ். அலெக்சாண்டர், டொமினியன் தோட்டம், செமினி

கே: ஒருவனைப் புகழ்வதினால் அவன் உயர்த்தப்படுகிறானா?

ப: புகழ்ச்சி கிறுகிறுப்பையும் "உயர்வு" மயக்கத்தையும் உண்டாக்குவது உண்மை. ஆனால் உண்மையான உயர்வு, புகழுக்குரிய தகுதி இருந்தால்தான் கிட்டும்.

பெ. இராஜகுமாரன், கெரிலா தோட்டம், கிளந்தான்

கே: சொல்வாக்கை மீறுபவர்களை என்னவென்று நினைப்பது?

ப: அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

எம். சுப்ரா, கோலக்கிள்ளான்

கே: எல்லையற்ற அன்பு மற்றவருக்குப் பாவத்தை உண்டாக்கிறதே?

ப: அன்புக்கும் எல்லை தேவை போலும்!

கே: கற்றது கரையாமல் இருக்க என்ன வழி?

ப: தொடர்ந்து கற்பதும் பிறருக்குக் கற்பிப்பதுமே வழி.

அப்பு நாகம், ஈப்போ

கே: எங்கள் நகரான ஈப்போவிற்குப் "புதிய சமுதாயம்" தாமதமாகக் கிடைப்பதன் காரணம் யாது?


ப: இந்த இதழ் உங்களுக்கு உரிய காலத்தில் கிடைத்திருக்கும். தாமதத்தைத் தவிர்க்க எல்லா முயற்சியும் செய்கிறோம். அதே சமயத்தில் "புதிய சமுதாயம்" செய்திப் பத்திரிகை அல்ல. எப்பொழுதும் படித்துப் பாதுகாக்க வேண்டிய ஏடு இது. ஆகவே வெளியாகும் தேதியை வாசகர்கள் பொருட்படுத்தக் காரணமில்லை.

கே: இனம் வேறு ஜாதி வேறு என்று என் நண்பர் ஒருவர் கூறுகிறார். ஆனால் நான் இரண்டும் ஒன்றே என்று சாதிக்கிறேன். தங்கள் பதிலில் ஐந்து வெள்ளி ஊசலாடுகிறது.

ப: இனம் என்பது இந்தியர், சீனர், மலாய்க்காரர் போன்ற சமூகங்களைக் குறிக்கும். ஜாதி என்பது இந்தியர்களிடையேயுள்ள பிள்ளை, முதலியார், தேவர் போன்ற பிரிவுகளைக் குறிக்கும்.

குமாரி கலைஅரசி, தைப்பிங்

கே: உண்மைக்குத் திரை போட்டு மூடுபவர்களை என்ன செய்வது?




ப: கைக்குடையினால் சூரியனை மறைக்கப் பார்க்கும் கோமாளிகள்.

தமிழறிவுப் போட்டி-3

விதிகள்

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக் கொண்டு கட்டங்களை நிரப்ப வேண்டும்.
2. ஒரு கட்டத்தில் ஒரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.
3. அழித்தல், அடித்தல் திருத்தல், கூடாது. "பால் பாயிண்ட்" பேனுவால்எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.
4. சரியான விடை எழுதியவர் வெ. 50 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ.10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ.10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சியவெ.40 அடுத்த போட்டிக்கானபரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.
6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானுலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
7. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.
8. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
9. இறுதிநாள் 15-7-1977
10. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

"புதிய சமுதாயம்"
131, Jalan Tuanku Abdul Rahman,
2nd Floor,
Kuala Lumpur.



தமிழறிவுப்

போட்டி-3 இறுதிநாள் 15-7-1977

பெயர்: ____________________

அடையாள அட்டை எண்: ____________________

முகவரி: ____________________

____

____

கையொப்பம்

இடமிருந்து வலம்:

1. வலிமை.
2. இது அதிகமானுல் ஆபத்திற்கு அறிகுறி.
3. வெண்மையாக இருப்பது இதன் இயல்பு.
4. நாரதருக்கு இது கைவந்த கலை.
6. இவன் சென்ற இடமெல்லாம் சிறப்படைவான்.
8. காலு இடங்களுக்குப் போக வர இருக்கும் பெண்களில் பெரும்பாலோர் இதன் துணை இல்லாமல் செல்ல மாட்டார்கள்.

மேலிருந்து கீழ்:

1. கணவன் மனைவியருள் ஒருவர் ஊடலால் திரும்பி இருக்கிருர்.
2. இவனுடைய பேச்சுக்கு யாரும் செவி சாய்க்கவே செய்வர்.
4. நக்கீரன் சுட்டிக் காட்டியது; ஒழுங்காக இல்லை.
5. இனிக்கும்.
6. இது விற்கும் இடத்தை "வெள்ளை மாளிகை" என்றும் சொல்வார்கள்.
7. சாப்பாடு எவ்வளவு இருந்தாலும் இது இருந்தால் தானே சாப்பிட முடியும்.

வீண்வம்பு



பழனிமாமா

இராமுவும் சோமுவும் நெருங்கிய நண்பர்கள். ஒழுங்காக உண்பதும், உறங்குவதும், படிப்பதும், விளையாடுவதுமாக இருந்து வந்தார்கள். அவர்கள் வகுப்பில் படிக்கும் காடன், மாடன் என்ற பொல்லாத பையன்கள் இருவரும் ஒருநாள் ராமு, சோமு இருவரையும் நெருங்கி வந்து, "நாங்கள் இருவரும் ஊருக்குக் கடைசியில் ஓரிடத்தில் தோட்டம் போட்டிருக்கிறோம்; நீங்களும் சேர்ந்து எங்களுடன் தோட்ட வேலை பார்த்தால் அதில் கிடைக்கும் லாபத்தில் பாதியை உங்கள் இருவருக்கும் தருகிறோம். பள்ளிக்கூடம் விட்ட பிறகும் விடுமுறை நாட்களிலும் தோட்டவேலை செய்தால் போதும்" என்று சொன்னார்கள். இதைக் கேட்ட ராமுவும் சோமுவும் தங்களுடைய பெற்றோர்களிடம் கேட்டுச் சம்மதம் பெற்ற பிறகு வருவதாகச் சொன்னார்கள்.

அதன்படி உத்தரவு கேட்டபோது, ராமுவின் பெற்றோர்களும் சோமுவின் பெற்றோர்களும் "தோட்ட வேலை செய்வது நல்லதுதான். ஆனாலும் ஒவ்வொரு நாளும் இருட்டுவதற்குள் வீட்டிற்கு வந்துவிடுங்கள்" என்று சொல்லி அனுமதி கொடுத்துவிட்டார்கள்.

காடனும் மாடனும் ஒவ்வொரு நாளும் மாலை வேளைகளிலும், விடுமுறை நாட்களிலும் ராமு சோமுவை அழைத்துக்கொண்டு ஊர்க்கடைசியில் ஒதுக்குப்புறமான ஒரு காட்டுப்பகுதியில் செடி, கொடிகளை அழித்து நிலத்தைக் கிளறிவிட்டு ஏதோ முன்பின் பார்த்திராத ஒருவிதச் செடியைப் பயிரிட்டார்கள். செடிகளும் நன்றாக வளர்ந்து செழிப்பாக இருந்தன.

இந்தச்சமயத்தில் ஒருநாள் ராமு சோமுவின் பள்ளிக்கூடத்திற்கு ஏராளமான போலீஸ் அதிகாரிகள் வந்து ஏதேதோ விசாரித்துக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரங் கழித்த பிறகு தலைமை ஆசிரியர் எல்லா மாணவர்களையும் விளையாட்டுத் திடலுக்கு அழைத்துத் திடீரெனக் கூட்டம் ஒன்று நடத்தினார். அவருக்கு அருகில் ஒரு பெரிய போலீஸ் அதிகாரியும் இருந்தார்.

தலைமை ஆசிரியர் சொன்னார் :- "குழந்தைகளே! இந்த ஊரில் யாரோ கஞ்சாச் செடி பயிரிட்டு, பெரும் பணத்திற்கு விற்பதாகப் போலீசிற்குத் தகவல் வந்திருக்கிறதாம். "கஞ்சா" என்னும் பொருள் மிகவும் ஆபத்தை விளைவிக்கக்கூடியதாகும். அந்தச் செடியைப் பயிர் செய்வதும், வைத்திருப்பதும், பயன்படுத்துவதும் மிகக் கொடிய குற்றமாகும். அதற்கு மிகப்பெரும் தண்டனை உண்டு. எனவே, இது பற்றி உங்களில் யாருக்காவது தகவல் ஏதும் தெரியுமானால் உடனே தெரியப்படுத்துமாறு இந்தப் போலீஸ் அதிகாரி கேட்டுக்கொள்ளுகிறார்!"


இதைக்கேட்ட ராமுவும் சோமுவும் காடனையும் மாடனையும் தேடிப் பார்த்தார்கள். ஓரிடத்திலும் அவர்களைக் காணவில்லை. உடனே இருவரும் கைகளைக் கோத்துக்கொண்டு தலைமை ஆசிரியரும் போலீஸ் அதிகாரியும் இருந்த இடத்திற்குச் சென்று, "சார்! நாங்கள் இருவரும் காடன், மாடன் இருவருடனும் சேர்ந்து ஊர்க்கடைசியில்தோட்டம் போட்டு ஏதோ ஒரு செடியைப் பயிரிட்டு வருகிறோம். ஒருவேளை நீங்கள் சொல்லும் கஞ்சாச் செடியாக அவை இருந்தாலும் இருக்கலாம். எங்களுடன் வந்தால் அவற்றைக் காட்டுகிறோம்" என்றார்கள்.

இதைக்கேட்ட போலீஸ் அதிகாரி உடனே ராமு, சோமுவை ஜீப்பில் ஏற்றிக்கொண்டு அவர்கள் சொன்ன இடத்திற்கு விரைந்து சென்றார். ராமு-சோமு இருவருக்கும் அதிர்ச்சி ஏற்படும் வகையில் முதல்நாள் வரை அங்கு செழிப்பாக வளர்ந்திருந்த செடிகளில் ஒன்றுகூட மிச்சம் இல்லாத யாவும் அறுவடை செய்யப்பட்டிருந்தன. இருந்தாலும் அந்த இடத்தையும், அங்குக் கிடந்த சருகுகளையும் சோதனை செய்த போலீஸ் அதிகாரி "இது கஞ்சாச் செடிதான்" என்று உறுதிப்படுத்தினார். மறுகணம் காடன், மாடன் இருவரையும் பிடித்து வருமாறு மற்றப் போலீஸ்காரர்களுக்கு ஆணையிட்டார்.

அன்று மாலையே காடன், மாடன், அவர்கள் தொடர்புகொண்டிருந்த கடத்தல்காரர்கள் இருவர், ஒரு போதைப் பித்தர் கூட்டம் யாவரையும் சுற்றி வளைத்துப் பிடித்துவிட்டார்கள் போலீஸ்காரர்கள்.

ராமு - சோமு இருவரும் மிகவும் நல்ல நடத்தையுடைய பிள்ளைகள் என்று தலைமை ஆசிரியர் நற்சான்றிதழ் கொடுத்தமையாலும், தவறு என்று சந்தேகப்பட்ட மாத்திரத்தில் போலீசிற்கு உண்மையைச் சொல்லியதோடு கெட்டவர்களைப் பிடிப்பதற்கு உதவியமையாலும் நீதிபதி அவர்களை மன்னித்துவிடுவார் என்றும், ஆனால் போதைப் பொருள் வைத்திருந்த குற்றத்திற்காகவும், அதைப் பயிரிட்ட குற்றத்திற்காகவும், போதைக் கும்பலோடு தொடர்பு வைத்திருந்த குற்றத்திற்காகவும் காடன், மாடன் இருவருக்கும் சட்டம் மிகக் கடுமையான தண்டனை கொடுத்துவிடும் என்றும், அது மரண தண்டனையாகக் கூட இருக்கலாம் என்றும் ஊரில் உள்ள யாவரும் பேசிக்கொண்டார்கள்.

சேவல்



சேவல் நல்ல சேவலாம்
சின்னக் கொண்டைச் சேவலாம்
கூவ நன்கு தெரியுமாம்
கொக்க ரக்கோ என்குமாம்!


காலை நம்மை எழுப்புமாம்
கண் விழிக்கச் செய்யுமாம்
வேலை ஒன்றும் இல்லையாம்
வெளியில் எங்கும் சுற்றுமாம்!

எதிரி வந்தால் சாடுமாம்
எதிர்த்துச் சண்டை போடுமாம்
விதி முடிந்தால் சாகுமாம்
வெற்றி என்றால் ஆடுமாம்!

வீடு சுற்றித் திரியுமாம்
வீதி யெங்கும் அலையுமாம்
கூடு தன்னில் அடையுமாம்
கூரை மீதும் தூங்குமாம்!



எல்.எம். பகதூர்


கற்பின் செல்வி
கண்ணகி
கதை: ச...
படம்: பாலு
7
மாதவிக்கு மகள் பிறந்திருக்கிறளா? மிக்க மகிழ்ச்சி ஐயா.
கண்ணகி, நான் போய் ஒரு சிலம்பை விற்று வருகிறேன்
கொல்லர் வீதியில் கோவலன் அரண்மனை பொற்கொல்லரைக் காண்கிறன்
இந்த சிலம்பை நல்லவிலைக்கு நீர் விற்றுத் தருவீரா?
பாண்டியன் நெடுஞ்-செழியன் மனைவி கோப்பெருந்தேவி-யின் சிலம்புகளில் ஒன்றை நான் ஏற்கனவே திருடி விட்டேனே! அந்தச் சிலம்பு இதுதான் என்றும்
...அதைத்திருடியவன் இவன்தான் என்றும் மன்னரிடம் கூறி, நான் திருட்டுக் குற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும்
ஐயா, நீங்கள் இங்கேயே இருங்கள். நான் மன்னரிடம் சென்று சிலம்பை விலை பேசி வருகிறேன்
அரண்மனையில்
மன்னவா, முன்பு அரண்மனையில் ஒரு சிலம்பு காணமல் போய்விட்டதே அதை ஒரு கள்வனிடம் கண்டேன். அவன் என்வீட்டில் தான் இப்பொழுது சிலம்புடன் இருக்கிறான்
விதியின் வலிமையால் பொற்கொல்லனின் சூழ்ச்சியை உணராத மன்னன், காவலரிடம்....
காவலர்களே, சிலம்பு திருடிய அக்கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வாருங்கள்
தொடரும்...

தந்தியைக் கண்டு எல்லோரும் இடிந்து உட்கார்ந்து போனோம். அதில் கண்டிருந்த விஷயம் எங்களுக்கு அர்த்தமே ஆகவில்லைபோல் இருந்தது.

"சிவராமையர் — டேஞ்ஜரஸ்" என்ற இரண்டு வார்த்தைகளே இருந்தன. தந்தி சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து வந்திருந்தது.

என் தமக்கை இரண்டு மாதங்களுக்கு முன்புதான் சென்னையில் இருந்து வந்தாள். அப்பொழுது எங்கள் அத்திம்பேர் நன்றாகக் குணம் அடைந்துவிட்டார். க்ஷயத்தின் சின்னம் கொஞ்சங்கூட இல்லையென்று பிரபல வைத்தியர்கள் நிச்சயமாகச் சொல்லிவிட்டார்கள்.

ஓங்கித் தலையில் அடித்தது போலக்குஞ்சம்மாள் பிரமைதட்டிப் போய் உட்கார்ந்திருந்தாள்.

விடியுமா?

கு.ப.ரா.



எங்கள் எல்லோருடைய மனத்திலும் ஒரு பெருத்த போர் நடந்துகொண்டிருந்தது. "இருக்காது!", "ஏன் இருக்கக்கூடாது? இருக்கும்!" என்று இரண்டு விதமாக மனத்தில் எண்ணங்கள் உதித்துக்கொண்டிருந்தன. "இருக்கும்" என்ற கட்சி, தந்தியின் பலத்தில் வேரூன்றி வலுக்க வலுக்க, "இருக்காது" என்ற கட்சி மூலைமுடுக்குகளிலெல்லாம், ஓடிப் பாய்ந்து தனக்குப்பலம் தேட ஆரம்பித்தது.

தந்தியில் கண்டிருந்ததைத் திரும்பத் திரும்பப் படித்தோம். அதில் ஒன்றும் பிசகு இருக்கவே முடியாது. சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்துதான் வந்திருந்தது; சந்தேகமில்லை. காலையில் அடித்திருக்கிறார்கள். குஞ்சம்மாள் பேருக்குத்தான்! தவறு எப்படி இருக்க முடியும்?

ஆனால், இவ்வளவு சீக்கிரத்தில் என்ன நேர்ந்திருக்க முடியும்? மூன்று நாட்களுக்கு முன்புதானே கடிதம் வந்தது? ஏதாவது உடம்பு சௌகரியமில்லாமல் இருந்தால் அதில் எழுதாமல் இருப்பாரோ?

என் தமக்கையும் நானும் சாயந்தரம் ரெயிலில் சென்னைக்குப் புறப்பட்டோம். அதுதான் அன்று கும்பகோணத்திலிருந்து சென்னைக்குப் போகும் முதல் வண்டி.

புறப்படுவதற்கு முன் நல்லவேளை பார்த்துப் "பரஸ்தானம்" இருந்தோம். சாஸ்திரிகள், "ஒன்றும் இருக்காது. கிரகம் கொஞ்சம் பிடிக்கும், அவ்வளவுதான்!" என்றார். அம்மா, தெய்வங்களுக்கெல்லாம், ஞாபகமாக ஒன்றைக்கூட விடாமல், பிரார்த்தனை செய்துகொண்டு, மஞ்சள் துணியில் காணிக்கை முடிந்து வைத்தாள்-குஞ்சம்மாளுக்கு மஞ்சள் கிழங்கு, குங்குமம், புஷ்பம், வெற்றிலை பாக்கு, க்ஷேமதண்டுலம் எல்லாம் மறந்துபோகாமல் மடி நிறையக் கட்டிக்கொடுத்தாள். பசியுடன் போகக்கூடாது என்று, புறப்படும்பொழுது கட்டாயப்படுத்தி இருவரையும் சாப்பிடச் செய்தாள்.

குஞ்சம்மாள், இயந்திரம் போலச் சொன்னதையெல்லாம் செய்தாள்; "சுவாமிக்கு நமஸ்காரம் பண்ணு" என்றதும் போய் நமஸ்காரம் செய்தாள்.

அவள் கதிகலங்கிப் போயிருந்தாள் என்பது அவள் பேச்சற்றுப் போயிருந்ததிலிருந்தே நன்றாகத் தெரிந்தது. அவளுடைய கலகலப்பு முதல் தடவையாக அன்று எங்கோ அடங்கிவிட்டது.

அம்மா வாசலில் போய்ச் சகுனம் பார்த்தாள். திவ்யமான சகுனம். காவேரியிலிருந்து அடுத்த வீட்டுச் சுந்தரி ஜலம் எடுத்துக்கொண்டு எதிரே வந்தாள்.

"ஒண்ணும் இருக்காது. நமக்கேன் அப்படியெல்லாம் வரது? நாம் ஒருத்தருக்கும் ஒன்றும் கெடுதல் எண்ணலியே" என்றெல்லாம், அம்மா அடிக்கடி தன்னையும் பிறரையும் சமாதானம் செய்துகொண்டிருந்தாள்.

ரயில் ஏறுகிறபொழுது மணி சுமார்எட்டுஇருக்கும். இரவுபூராவும் போயாகவேண்டுமே என்று துடித்தோம். போய் இறங்குவதற்குமுன் செய்வதற்கு ஒன்றுமில்லை என்றதால், கொஞ்சமாகத் துடிப்பும், கலக்கமும்கூட மட்டுப்பட்டன. இரண்டு ஜன்னல்களின் அருகில் நேர் எதிராக இரண்டு பெஞ்சுகளில் உட்கார்ந்தோம்.

"நீ புறப்படுகிறபொழுது ஒன்றுமே இல்லையே, அக்கா?" என்றேன், ஏதாவது பேச்சுக்கொடுக்க வேண்டும் என்று.

"ஒண்ணுமில்லையே! இருந்தால் புறப்பட்டு வருவேனா?" என்று அவள் ஏக்கம் நிறைந்த குரலில் பதில் சொன்னாள்.

"அதற்குள் திடீரென்று ஒன்றும் ஏற்படுவதற்குக் காரணமே இல்லையே."

எது எப்படியானாலும், மனசைச் சில மணி நேரங்களாவது ஏமாற்றித் தத்தளிப்பைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாம் என்று நினைத்ததுபோலப் பேச்சு வெளிவந்தது.

"நான் இந்த நோன்பிற்காக இங்கே தாமதம் செய்யாமல் போயிருக்காமல் போனேன்."

"ஒருவேளை, அக்கா, நோன்பிற்காக நீ இங்கே இருந்துவிட்டதுதான் அத்திம்பேருக்குக் கோபமோ? அவர் உடனே வரும்படியாக எழுதியிருந்தார். நாம் ஒரு வாரத்தில் வருவதாகப் பதில் எழுதினோம். அதற்காகத்தான் இப்படித் தந்தி அடித்துவிட்டாரோ?"

"ஆஸ்பத்திரியிலிருந்து வந்திருக்கே?"

"ஆஸ்பத்திரி பேரை வைத்து அத்திம்பேரே அடிக்கக்கூடாதா?"

"அப்படி அடிக்க முடியுமோ?" குஞ்சம்மாள் குரலில் ஆவல் இருந்தது.

"ஏன் முடியாது? தந்தியாபீஸில்-"

"ஒருவேளை அப்படி இருக்குமோ?" என்று கேட்டபொழுது குஞ்சம்மாள் முகம் கொஞ்சம் மலர்ந்துவிட்டது.

"அப்படித்தான் இருக்கவேண்டும். இப்படித் திடீரென்று ஒன்றும் ஏற்படக் காரணமே இல்லை! மூந்தாநாள் தானே கடுதாசி வந்தது?"

"ஆமாம் அதில் ஒடம்பைப்பத்தி ஒன்னுமே இல்லையே?"

"தந்தி அடித்தால் நாம் உடனே புறப்பட்டு வருவோம் என்றுதான் அடித்திருக்கிறார். வீட்டிலிருந்து அடித்தால்கூட அவ்வளவு தாக்காது என்று ஆஸ்பத்திரி பேரை வைத்து அடித்திருக்கிறார்."

"அப்படி அடிக்க முடியுமாடா, அம்பி? அப்படியிருக்குமா?" என்று மறுபடியும் குஞ்சம்மாள் சந்தேகத்துடன் கேட்டாள்.

அவள் அப்படிக் கேட்டபொழுது, முடியாது என்று எனக்குத் தெரிந்திருந்தால்கூடச் சொல்ல மனம் வந்திருக்குமோ என்னமோ?

"நீ வேண்டுமானால் பாரேன், எழும்பூர் ஸ்டேஷனில் வந்து இருக்கப்போகிறார்" என்றேன்.

மனத்தில், ஆழத்தில் பீதி அது பாட்டிற்குப் புழுப்போலத் துளைத்துக்கொண்டே இருந்தது. மேலே மட்டும் சமாதானம். கொஞ்சநேரத்திற்கு ஒரு தரம் அந்தத் திகில் மேல்மட்டத்திற்கு வந்து தலையெடுக்கும்; உடம்பு பதறும்; நெஞ்சு உலரும்; அடிவயிறு கலங்கும்; முகம் விகாரமடையும். மறுபடியும் மெதுவாகச் சமாதானத்தின் பலம் அதிகமாகும்; பயத்தைக் கீழே அமுக்கிவிடும்.

சுகமோ துக்கமோ எந்த நிலைமையிலும் நீடிக்க முடியாது என்பதற்கு மனித சுபாவத்தில் இதுவும் ஓர் அத்தாட்சியோ?

ரெயில் வண்டி வெறிபிடித்து தலைதெறிக்க ஓடிக்கொண்டு இருந்



தது; எங்கேயோ, சென்னையில் விடியப்போகும் ஒரு காலையை நோக்கிக் கனவேகமாகப் போய்க் கொண்டிருந்ததுபோல் இருந்தது.

தூக்கத்தில் தலையெடுக்கும் தைரியம்போலத் தொலை இருளில் அந்த ஒளித்தொடர் விரைந்து சென்று கொண்டிருந்தது.

சென்னை போய்ச் சேரும் பொழுது, எங்கள் கவலையும் அந்த இருளைப்போலப் பின்தங்கிவிடாதா? நிம்மதி, காலையைப்போல அங்கே எங்களை வந்தடையாதா? இருள், நிச்சயம் கூட வராது! சென்னையில் காலைதான்! இவ்வாறெல்லாம் பேதைமனம் தன்னைத் தேற்றிக் கொண்டே இருந்தது.

குஞ்சம்மாள் மூட்டையிலிருந்து வெற்றிலை பாக்கை [எடுத்து எனக்குக் கொடுத்துத் தானும் போட்டுக் கொண்டாள்.

எங்களவர்களுக்குள்ளேயே குஞ்சம்மாள் அதிக அழகு என்று பெயர். நல்ல சிவப்பு; ஒற்றைநாடித் தேகம்; அவளுக்குத் தெருவிலேயே ஒரு செல்வாக்கு உண்டு.

அன்று என்னவோ, இன்னும் அதிகமாக, அவள் ஒளிர்ந்துகொண்டிருந்தாள். அவள் முகத்தில் என்றுமே இல்லாத ஓர் ஏக்கம் அன்று முதல்முதலாகத் தென்பட்டதாலோ என்னவோ, அவள் மிளிர்ந்து தோன்றினாள்.

குஞ்சம்மாளுக்குப் புஷ்பம் என்றால் பிராணன். யார் கேலி செய்தாலும் லட்சியம் செய்யமாட்டாள். தலையை மிஞ்சிப் பூ வைத்துக் கொள்ளுவாள். ஆனால், அன்று அவள் தலையில் வைத்துக்கொண்டிருந்த பூவைப்போல, அது என்றும் சோபித்ததில்லை என்று என் கண்களுக்குப் பட்டது. வெற்றிலைக்காவி அவளுடைய உதடுகளில் அன்றுதான் அவ்வளவு சிவப்பாகப் பிடித்திருந்ததுபோல் இருந்தது.

சோர்வில்தான் 'சௌந்தரியம் பரிமளிக்குமோ? அல்லது–? கடைசியாக, அணைவதற்கு முன்னால், விளக்கு? இல்லை! இல்லை!

குஞ்சம்மாள் அன்றுஎன்னமோ அப்படி இருந்தாள். வெற்றிலையைப் பாதி மென்றுகொண்டே, "அம்பி, ஓங்க அத்திம்பேருக்கு வாக்கப்பட்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன்?" என்றாள் குஞ்சம்மாள். அவளுடைய கண்களில் ஜலம் மளமளவென்று பெருகிற்று.

"என்னிக்கும் பிடிவாதம், என்னிக்கும் சண்டை, நான் அழத நாள் உண்டா? என் வாழ்வோ அழுகையாக" என்று உணர்ச்சி வேகத்தில் ஆரம்பித்தவள் சட்டென்று நிறுத்திக்கொண்டாள்.

"எதிலாவது நான் சொன்ன பேச்சைக் கேட்டது உண்டா? எப்படியோ ஆயுசுடன் இருந்தால் போதுமென்று தோன்றிவிட்டது, போனதடவை உடம்புக்கு வந்த போது!"

இருவரும் வெகுநேரம் மௌனமாக இருந்தோம். ஆனால் மனசு மட்டும் மௌனமாக இருக்கவில்லை.

நல்ல நிசி வேளை. வண்டியில் ஜனங்கள் உட்கார்ந்து கொண்டும் படுத்துக் கொண்டும் அநேக நிஜசாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். வண்டி ஒரு சின்ன ஸ்டேஷனில் நின்றதும், சிலர் இறங்கிப் போவார்கள், மௌனமாகப் பிசாசுகள் போல. அப்பொழுதுதான் தூங்கி எழுந்த சிலர், "இதென்ன ஸ்டேஷன்?" என்று தலையை வெளியே நீட்டிக் கேட்பார்கள். போர்ட்டர் ஒருவன் ஏதாவது ஒரு ஸ்டேஷன் பெயரை அரைகுறையாகத் தூங்கி வழிந்து கொண்டே சொல்லுவான். மறுபடியும் வண்டி பூரான் மாதிரி ஓட ஆரம்பிக்கும்.

சுமார் ஒரு மணிக்கு வண்டி விழுப்புரம் ஸ்டேஷனுக்குள் ஆர்ப்பாட்டத்துடன் போய் நின்றது. அதுவரையிலும் வண்டியில் அமைதியும் நிசப்தமும் இருந்தன. அந்த ஸ்டேஷனில் கூட்டமும் கூக்குரலும் அதிகமாயின. அதுவரையில் காலியாகவே வந்த பலகையில் சாமான்கள் நிறைந்தன. நகரத்தார் இனத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருத்தி பெண் குழந்தையும் புட்டியுமாக என் தமக்கையின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

அவள் அணிந்திருந்த முதல் தரமான வைரங்களுடன் அவள் முகமும் ஜொலித்துக்கொண்டு இருந்தது. ஏதோ ஓர் உள்ளப் பூரிப்பில் அவள் தன்னையே மறந்து தன் குழந்தையுடன் கொஞ்சினாள்.

வண்டி புறப்பட்ட சற்று நேரத்திற்கெல்லாம் என் தமக்கையின் பக்கம் தன் புன்னகை பூத்த முகத்தைத் திருப்பி "எங்கிட்டுப் போறீக அம்மா?" என்று கேட்டாள்.

என் தமக்கை சுருக்கமாக "பட்டணம்" என்றாள். "நானும் அங்கேதாம்மா வாரேன்" என்று ஆரம்பித்து, அந்தப் பெண் வரிசையாகக் கேள்விகள் கேட்டுக் கொண்டே இருந்தாள். பிறகு தன் பக்கத்திலிருந்த ஓலைப் பெட்டியிலிருந்து கொஞ்சம் மல்லிகைப்பூ எடுத்துக் குஞ்சம்மாளுக்குக் கொடுத்தாள்.

என் தமக்கை மெய்சிலிர்த்துப் போனாள். வெகு ஆவலுடன் அந்தப் பூவை வாங்கி வெகு ஜாக்கிரதை

யுடன் தலையில் வைத்துக்கொண்டாள். அம்பாளே அந்த உருவத்தில் வந்து தனக்குப் பூவைக் கொடுத்து, "கவலைப்படாதே உன் பூவிற்கு ஒருநாளும் குறைவில்லை" என்று சொல்வதுபோல எண்ணினாள்.

அதுவரையில் அவளுக்கு ஒவ்வொரு வார்த்தை பதில் சொல்லிக் கொண்டு வந்தவள், உடனே இளகி அவளிடம் சங்கதி பூராவும் சொன்னாள்.

"மகாலட்சுமி போல இருக்கிங்கம்மா! ஒங்களுக்கு ஒன்னும் கொறவு வராது!" என்று அவள் சொன்னதைத் தெய்வ வாக்காக எடுத்துக்கொண்டு விட்டாள் குஞ்சம்மாள். அந்த ஆறுதலில் கொஞ்ச நேரம் அவளுடன் கவலை மறந்து பேசிக்கொண்டிருந்தாள்.

திடீரென்று ஞாபகம் வந்துவிட்டது. ஏதோ பெருத்த குற்றம் செய்தவள்போலத் திகிலடைந்தாள். "ஐயையோ, பைத்தியம் போல் இப்படிச் சிரிச்சுண்டு பேசிக்கொண்டு இருக்கேனே" என்று எண்ணினவள் போல அவள் கலவரமடைந்தது நன்றாகத் தெரிந்தது. வண்டி போன வேகத்தில் விர்ரென்று அடித்த காற்றிலும் அவளுடைய முகத்தில் வியர்வை தென்பட்டது.

ஆனால் எவ்வளவு நேரந்தான் கவலைப்பட முடியும்? கவலையால் ஏற்பட்ட அசதியிலேயே எங்களை அறியாமல் கண்ணயர்ந்தோம்!

துக்கத்தில், நித்திரையும் நினைவு மறதியும்சேர்ந்துதான்வாழ்க்கைக்கு ஒரு சிறு போதையாகித் தாபத்தைத் தணிக்கின்றனவோ?

வண்டி செங்கற்பட்டை நெருங்குகிற சமயம். வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தோம். கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது. வண்டி ஏதோ ஒரு குக்கிராமத்தைக் கடந்து போய்க்கொண்டிருந்த பொழுது கோழி கூவியது கூடக் காதில் வந்து பட்டது.

"அப்பா! விடியுமா?" என்கிற நினைப்பு ஒரு பக்கம். "ஐயோ! விடிகிறதே! இன்னிக்கு என்ன வச்சிருக்கோ?" என்ற நினைப்பு மற்றொரு பக்கம்.

இரவின் இருட்டு அளித்திருந்த ஆறுதலைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தலைகாட்டிய வெளிச்சம் பறிக்க வருவதுபோல் இருந்தது.

எங்கேயோ கண்காணாத தூரத்தில் உருவடைந்த ஒரு காட்சியில் ஈடுபட்டவளாய் நிலைகுத்திய பார்வையுடன் குஞ்சம்மாள் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

"செங்கற்பட்டில் பல் தேய்த்துக்கொண்டு காப்பி சாப்பிடுவோமா?" என்று கேட்டேன்.

"எல்லாம் பட்டணத்தில்தான்" என்று சொல்லிவிட்டாள் குஞ்சம்மாள். பக்கத்தில் நகரத்தார் பெண் கவலையற்றுத் தூங்கிக்கொண்டிருந்தாள்.

"இதோ ஆயிற்று, இதோ

தது. ஆனால் எங்களுக்கு என்னவோ பட்டணம் நெருங்க நெருங்க வண்டி வேண்டுமென்றே ஊர்வதுபோல இருந்தது.

எழும்பூர் வந்தது கடைசியாக.

ஸ்டேஷனில் யாருமில்லை; அதாவது எங்கள் அத்திம்பேர் இல்லை—எல்லோரும் இருந்தார்கள். "ஆனால் அவர் ஸ்டேஷனுக்கு எதற்காக வரவேண்டும், அங்கே எதிர்பார்ப்பது சரியில்லைதான்" என்று அப்பொழுது தோன்றிற்று.

வீட்டுக்குப் போனோம். வீடு பூட்டியிருந்தது.

உடம்பு சௌகரியமில்லைதான்! சந்தேகமில்லை இப்பொழுது!

ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போனோம். அரைமணி நேரம் துடித்த பிறகு குமாஸ்தா வந்தார்.

"நீங்கள் கும்பகோணமா?" என்றார்.

"ஆமாம்" என்றேன்.

"நோயாளி-நேற்றிரவு- இறந்து போய்விட்டார்" என்று குமாஸ்தா சாவதானமாகச் சொன்னார்.

"இறந்து?- அது எப்படி? அதற்குள்ளா?" அப்பொழுதும் சந்தேகமும் அவநம்பிக்கையும் விடவில்லை.

"ஆமாம் ஸார்"

"ஒரு வேளை..."

"சற்று இருங்கள். பிரேதத்தைப் பெற்றுக்கொள்ளலாம்" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டுக் குமாஸ்தா தன் ஜோலியைக் கவனிக்கப் போனார்.

கொஞ்சநேரம் கழித்துப் பிரேதத்தைப் பெற்றுக்கொண்டோம். அப்பொழுது அதைப் பார்த்தவுடன் நிச்சயமாயிற்று.

ஒரு வழியாக மனத்திலிருந்த பயம் தீர்ந்தது; திகில் தீர்ந்தது.

பிறகு?

விடிந்துவிட்டது.

(கு. ப. ராஜகோபாலனின் இந்தக் கதை சிறந்த சிறுகதைக்கு ஓர் எடுத்துக்காட்டு என்று அண்மையில் தமிழகத்திலிருந்து இங்கு வந்திருந்த பேராசிரியர் தமிழ்க்குடிமகனார், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சிறுகதைக் கருத்தரங்கில் குறிப்பிட்டார்.

கு. ப. ரா. தமிழக எழுத்தாளர்; 1944 வரை வாழ்ந்தவர். அவரைத் தமிழ் இலக்கிய உலகில் என்றும்

மானஸ்ராகம்

கண்ணதாசன்



வீணையின் தந்தி அறுந்து கிடந்தது. தூசு படிந்து கிடந்த வீணை துன்பத்தை அறிவித்துக் கொண்டிருந்தது.

பக்கத்திலிருந்த மத்தளம் அதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

மத்தளம் சொன்னது: "வீணையே! கை கொஞ்சம் பலமாக விழுந்தாலே நீ அறுந்து போகிறாய். என்னதான் உன்னிடம் அருமையான ஓசை இருந்தென்ன? என்னைப் பார், நான் எத்தனை அடிகளையும் தாங்கிக்கொண்டு கம்பீரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்!"

வீணை அமைதியாகப் பதில் சொன்னது: "மானஸ்தர்களுக்கு ஒரு வார்த்தை போதும்!"



7. அவள் ஒரு நவரச நாடகம்

லல்லிக்கு அவனை அப்படியே கொன்று போட்டுவிடலாமா என்று கூடத் தோன்றியது!

ஆனால் கோபத்தைக் கண்டு அசந்து விடுபவனாக இல்லை அவன். 'கொலை செய்து விடுவேன்' என்று குதித்துக் கொண்டு ஓடிவரும் ஐந்து வயதுக் குழந்தையின் ஆவேசத்தைப் பார்த்துச் சிரித்து ரசிப்பதைப் போலவே அவனும் அலட்சியமாகச் சிரித்தான்.

"இப்போ என்ன நடந்துவிட்டது என்று இப்படிக் குதிக்கிறாய்?"

"இன்னும் என்ன நடக்கவேண்டும் என்று நினைக்கிறாய்?"

"நான் அங்கே வந்து சும்மா நின்றதற்கா இப்படி ஆர்ப்பாட்டம் செய்கிறாய்...? நான் ஒன்றுமே செய்யவில்லையே லல்லி..."

"உன்னை யார் அங்கே வரச் சொன்னது? கொஞ்சங்கூட மேனர்ஸ் இல்லாமல் சுத்தப் பட்டிக்காடு மாதிரி..."

"உன்னைப் பார்த்துவிட்டுத்தான் வந்தேன்! இல்லாவிட்டால் நான் ஏன் அங்கே வரப்போகிறேன்...?"

"அதைத்தான் கேக்கிறேன்? உன்னை யார் வரச்சொன்னது..."

"வந்தால் என்ன...? ஹ்ூம், அப்படி வந்ததால்தானே உன் அழகான சிநேகிதியைப் பார்க்க முடிந்தது; ரசிக்க முடிந்தது..." அவன் தன் போக்கிலேயே அலட்சியமாகப் பேசிக்கொண்டே இருந்தான்.

அவன் கடைசியாகச் சொன்ன அந்த வார்த்தைகள்...?

அவளது இரத்த நாளங்கள் தெறித்து விடுவதுபோல "விண்" என்று வலி எடுத்தது.

"ஸ்டுப்பிட், வாயை மூடு! ஒரு பெண் இருக்கும் அறையின் வாசல் வரை வந்து நிற்க உனக்கு வெட்கமா இல்லை? கதவைத் தட்டவேண்டும் என்று கூடவா தெரியாமல் போய்விட்டது...?"

"ஹ்ூம்! திறந்திருக்கும் கதவைக் கூடவா தட்டவேண்டும்? நல்ல வேடிக்கை இது...!"

அவன் பெரிய நகைச்சுவையை ரசித்தது போல், இடிஇடியென்று சிரித்தான்.

"சீ... சிரிக்காதே! எனக்குப் பற்றிக்கொண்டு வருகிறது!"

அவனது முகம் சட்டென்று மாறியது.

"ஏன்! அந்த இடியட் கோபிநாத் சிரித்தால்தான் உனக்குப் பிடிக்குமோ? தியேட்டர் வாசலில் வைத்துக்கொண்டு அவனிடம் ஒரேயடியாய்க் கொஞ்சிக் கொஞ்சிப் பேசும்போது அந்த அயோக்கியன் அத்தனைப் பல்லையும் காட்டிச் சிரித்தானே! அந்தச் சிரிப்புத்தான் உனக்கு மிகவும் பிடிக்குமோ?"

லல்லிக்குச் "சுரீர்" என்றது. அப்படியானால் இவன் நேற்றும் பின் தொடர்ந்து வந்திருக்கிறான்! எதற்காக இப்படியெல்லாம் நடந்து கொள்கிறான். இவன் ஏதோ நினைத்துக்கொண்டு இப்படி வட்டம் போடுகிறான். இதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிடவேண்டும் என்ற துடிப்பு அவளையும் மீறி எழுந்தது.

"நவீன்! மரியாதையாகச் சொல்கிறேன்! வாயை மூடிக்கொண்டு பேசாமல் போய்விடு! காலையிலேயே இப்படி வம்புக்கு வந்து நிற்காதே! பாதையில் போகிறவர்கள் எல்லாரும் நம்மைப் பார்த்துச் சிரிக்கப் போகிறார்கள்."

"ஏன்? தியேட்டர் வாசலில் அவ்வளவு பெரிய கூட்டத்தில் கோபிநாத்திடம் சிரித்துச் சிரித்துப் பேசினாயே, அப்போது யாரும் பார்க்கவில்லையா? ரெஸ்டாரெண்டுக்குள் நுழைந்து கும்பலாகக் கொட்டமடித்தபோது யாரும் பார்த்துச் சிரிக்கவில்லையா? அவன் அந்த அயோக்கியன் உனக்கு அவ்வளவு வேண்டியவனாகிவிட்டானா?"

குரோதம் கொப்பளிக்க அவன் இதைக் கூறியபோது லல்லியின் ஆத்திரமும் அளவுகடந்தது.

"வாயை மூடு! கோபிநாத்தைப் பற்றிப் பேச உனக்கு என்ன யோக்கியதை உண்டு? இரு...இரு உன்னை நான் விடப்போவதில்லை! மாமாவிடம் சொல்லி சரியான பாடம் கற்பிக்கிறேன்...! உனக்கு எவ்வளவு துணிச்சல் இருந்தால் இப்படி நான் போகுமிடமெல்லாம் பின்னாலேயே வந்து வேவு பார்த்திருப்பாய்? உனக்கு இதே வேலைதானா? வேறு வேலையே கிடையாதா?"

"ஓகோ! அப்பாவிடம் சொன்னால் என் தலையே போய்விடுமோ? நீ இப்படி கோபிநாத்தின் பின்னாலேயே சுற்றுவதையும் அவன் உன்னிடம் பல்லைக்காட்டுவதையும் பற்றி நானும் அப்பாவிடம் கூறினால் உன் கதி என்னவாகும்? ஹ்ூம்! என்னையா மிரட்டிப் பார்க்கிறாய்...?"

"சொல்லேன்! எனக்கென்ன வந்தது? அந்தக் கோபிநாத் ஒன்றும் உன்னைப்போல ஊர் சுற்றும் உதவாக்கரையல்ல! கண்ணியமானவர்! நாகரிகம் தெரிந்த நல்ல மனிதர்! நானே மாமாவிடம் கூட்டிக்கொண்டு வந்து அறிமுகம் செய்துவைக்கிறேன் பார்! உன்னால் அப்போது என்ன செய்யமுடியும் பார்க்கலாம்!"

"பெரிய நாகரிகப் புலி அவன்! அந்தப் பட்டிக்காட்டானைப் பற்றி என்னிடமே அளக்கிறாயா? அவன் யார்? எங்கிருந்து வந்தவன் என்பதாவது தெரியுமா? தெரிந்திருந்தால்... ஹ்ூம்...!"

"போதும்! உன் துப்பறியும் திறமையை உன்னோடேயே வைத்துக்கொள்! அனாவசியமாகக் கோபிநாத்திடம் போய் வம்புக்கு மாட்டிக்கொள்ளாதே! எலும்பை எண்ணி வைத்துவிட்டுப் போய் விடுவார்...!"

"அவனா? பெண்களின் பின்னால் சுற்றித்திரியும் அவனது வீரத்தைப் பற்றி என்னிடமே சொல்கிறாயா...?

"பெண்களைச் சுற்றித்திரிவது யாரென்பது எனக்குத் தெரியும்!

மாங்கனி

உன்னைப் போல் பண்பு கெட்டவரல்ல! உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் இப்படி வனிதாவின் வீட்டுக்குள்ளேயே வந்திருப்பாய்...? இதைப்பற்றி நான் மாமாவிடம் சொல்லாமல் விடப்போவதில்லை! சே...! வனிதா என்ன நினைத்திருப்பாள்...?"

"ஓ...! அவள் பெயர் வனிதாவா... வனிதா! பியூட்டிபுல் நேம்! லவ்லி கேர்ள்! அவளுக்கு அந்தப் பெயர் ரொம்பப் பொருத்தம்! ஸ்வீட் டீன் ஏஜ் கேர்ள்...!"

கோபிநாத்தின் மேல் ஏற்பட்ட ஆத்திரத்தால் இவ்வளவு நேரம் மாறிக்கிடந்த அவன் முகம் பளிச்சென்று மலர்ச்சி பெற்றது.

லல்லி உதட்டைக் கடித்துக் கொண்டாள்!

தெரியாமல் இந்த அயோக்கியனிடம் பெயரைச் சொல்லி விட்டோமே என்று வருந்தினாள்.

அவளது முகமாற்றத்தைக் கண்ட நவீனுக்கு என்ன தோன்றியதோ? "கோபிக்காதே லல்லி! நீயும் அழகாகத்தான் இருக்கிறாய்! அதுதான் அந்தக் கோபிநாத் பயல் உன்னையே விரட்டிக்கொண்டு திரிகிறான்..."

"நவீன்! ஸ்டுப்பிட்......வாயை மூடு...!"

லல்லி கத்தினாள்.

"கோபிநாத்தின் இருப்பிடமாக இருக்கும் என்றுதான் திடுதிப்பென்று வந்து நுழைந்துவிட்டேன்! ஆனால் அங்கே அசோக வனத்துச் சீதை இருப்பாள் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை...! ஆஹா...! உன் வனிதா ஒரு சிறந்த அழகிதான்! அழகியென்றால் பேரழகி...! வனிதா என்று பெயர் வைத்தவர்கள் எவ்வளவு பொருத்தமாகத் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறார்கள்...!"

"நவீன்...!"

லல்லி போட்ட கூச்சலில் நவீன் கூட ஒருவினாடி திடுக்கிட்டுப் பேச்சை நிறுத்தினான்.

"வனிதாவை இவன் பார்வையில் படவிட்டது எவ்வளவு பெரிய தவறு" என்பதை உணர்ந்த லல்லியின் மனம் பதறியது!

வனிதாவை நினைத்தபோது அவள் நெஞ்சம் நடுங்கியது!

8. பருவமங்கையோ தென்னங்கீற்று

"ஹாய்! லல்லி...!" முதுகில் தட்டியவள் சுஜாதா என்பதை உணர்ந்தபோது லல்லிக்கு ஆறுதலாக இருந்தது.

"ஹூம்" என்று பெருமூச்சு விட்ட லல்லி எதுவுமே பேசாமல் நின்றது சுஜாதாவுக்கு வியப்பாக இருந்தது.

"இங்கே என்ன செய்கிறாய்...?" மீண்டும் சுஜாதா வினவினாள். லல்லி அவள் பக்கம் திரும்பினாள். அந்தக் காலை நேரத்திற்கு ஏற்ற அலங்காரத்தோடு ஜவுளிக்கடை பொம்மை மாதிரி நிற்கும் அவளைப் பார்த்தபோது வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் போலிருந்தது.

ஆனால் அவள் சிரிக்கவில்லை! என்றாலும் அவளது வருகையால் ஏற்பட்ட மாற்றத்தால் சற்று நிம்மதி ஏற்பட்டது. நவீனன்மீது ஏற்பட்ட ஆத்திரமும் எரிச்சலும் சேர்ந்து அவளது வழக்கமான உற்சாகத்தைப் போக்கடித்துவிட்டது.

அவளது மௌனம்! எதிரே நிற்கும் இளைஞனின் குறுகுறு பார்வை! இவற்றையெல்லாம் இணைத்து முடிச்சுப்போட்டு விஷயத்தைப் புரிந்துகொள்ள முடியுமா என்று சில வினாடிகள் யோசித்தாள் சுஜாதா. அது மிகவும் சிரமமானது என்பது தெரிந்தது. பட்டென்று தெளிவாக லல்லியிடமே அதைப் பற்றிக் கேட்டால் என்ன என்று தோன்றியது!

"என்னடி! பேசாமல் நிற்கிறாய்? நான் வந்தது இடைஞ்சலாகி விட்டதா...?"

குறும்புத்தனமாகக் கண்களைச் சிமிட்டிவிட்டு எதிரே நிற்கும் இளைஞனை ஏறிட்டு நோக்கினாள்.

கன்னத்தில் நீண்டு வழிந்து முகத்தின் பெரும்பகுதியை மறைத்துக் கொண்டிருந்தது கிருதா! தாடையில் கருமை பூசினாற்போல் வளர்ந்திருந்த தாடி கால் பகுதியை மறைத்துக் கொண்டிருந்தது! மிச்சத்திற்கு மீசை!

கண்களால் அவனை அளந்து கொண்டிருந்த சுஜாதாவுக்கு ஏற்கனவே ஒருமுறை அவனைப் பார்த்திருப்பதாகத் தோன்றியது. மிகவும் உரிமையோடு அவளிடம் பேசியதும் இலேசாக நினைவுக்கு வந்தது!

இவன் யாராக இருக்கும்...? லல்லி யாரையும் பார்த்தவுடனே பக்கத்தில் நிற்பவர்களுக்கு அறிமுகம் செய்துவிடும் சுபாவம் உள்ளவள்!

இன்று ஏனோ பேசாமல் இருக்கிறாள்! இவர்களுக்குள் ஏதாவது பிணக்கு ஏற்பட்டிருக்குமோ...?

இப்போதுதான் சுஜாதாவுக்கு இன்னொரு விஷயம் நினைவுக்கு வந்தது.

லல்லி அன்றும் கூட அவனை அறிமுகம் செய்துவைக்கவில்லை! அவளே வலிய விசாரித்தபோதுகூட ஏதோ மழுப்பிவிட்டு நகர்ந்துவிட்டாள்!



அப்படியானால்...? இவன் லல்லியின் இதயத்திற்குள் இடம்பிடித்துக் கொண்டவனாக இருக்குமோ...?

அதனால்தான் மழுப்பி விடுகிறாளோ...? சுஜாதா தனது மூளைக்கு ஏற்றபடி ஏதோ முடிவுக்கு வந்தாள்!

"ஏய்...லல்லி! என்ன பேச்சையே காணோம்? உன் நண்பரை எனக்கு அறிமுகம்செய்து வைக்கவில்லையே!"

கேலியாகக் கேட்டு விட்டுச் சிரித்தாள் சுஜாதா. லல்லிக்கு இதைக் கேட்டபிறகு ஆத்திரம், ஆவேசம் யாவும் இருந்த இடம் தெரியாமல் பறந்தோடியது. அர்த்தமுள்ள புன்னகையொன்றை அவன் மீது அலட்சியமாக வீசினாள். பின் சுஜாதாவைப் பார்த்தாள்.

"ஏய் சுஜா! என் அருமை நண்பனை நேற்றே உனக்கு அறிமுகம் செய்து வைத்துவிட்டேனே! அதற்குள் மறந்துவிட்டாயா...?

"என்னது? நேற்றா? என்னடி சொல்றே...? இவரை இப்போது தானே பார்க்கிறேன்...?"

"என்னுடைய் நண்பரைத்தானே நீ கேட்டாய்...?

"ஆமாம்...!"

"அவர்தான் தியேட்டர் வாசலில் நின்று மரியாதையாக "ஹலோ" சொல்லிவிட்டுப் போனாரே! நினைவில்லையா...?"

லல்லி ஓரக்கண்ணால் நவீனைப் பார்த்தாள்! அவன் முகம் கறுத்துச் சுருங்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும் லல்லியின் உற்சாகம் மீண்டும் வந்து உடம்போடு ஒட்டிக்கொண்டது.

சுஜாதாவுக்கு ஒரே குழப்பமாக இருந்தது! இவள் என்ன சொல்கிறாள்.

"என்னடி சுஜா! கோபிநாத்தை யாரும் அவ்வளவு எளிதாக மறந்து விட மாட்டார்களே! சில ஆண்கள் கூட அவரைப்பற்றி ஆவலோடு விசாரித்தும் துப்பறிந்தும் கண்டு பிடிக்கிறார்கள்..."

"லல்லி! நான் இவரையல்லவா சொன்னேன்...! நீ என்னவென்றால்...?" லல்லி கலகலவென சிரித்தாள். அவளது இயல்பான சுபாவம் தலைநீட்டியது.

"இந்த மாதிரி உருவங்களையெல்லாம் எனது நண்பன் என்று அவமானப் படுத்தாதடீ..."

சுஜாதாவுக்கு லல்லியின் பேச்சு என்னவோ போலிருந்தது! ஏதோ விபரீதம் நேர்ந்துவிட்டது! அல்லது நடக்கப்போகிறது என்று துணுக்குற்றாள்.

எதிரே நிற்பவனின் முகம் பயங்கரமாக மாறிவருவதுபோல அவளுக்குத் தோன்றியது! எனவே விபரீதம் நிகழ்வதற்குள் அங்கிருந்து லல்லியை அழைத்துக் கொண்டு போய்விட வேண்டும் என்று விரும்பினாள்.

"லல்லி! நான் அவசரமாக ஓரிடத்திற்குப் போகவேண்டும்! உன்னையும் அழைத்துப் போகலாமென்றுதான் வந்தேன்...பிளீஸ் லல்லி...!"

"ஓகே...! நான் ரெடி! வா போகலாம்!

லல்லி சட்டென்று ஒப்புக் கொண்டுவிடுவாள் என்பதை எதிர்பாராத சுஜாதாவுக்கு அது வியப்பை அளித்தது. எப்படியாவது அந்த இடத்தை விட்டுப் போனால் போதும் என்று வேகமாக நடந்தாள்.

"நவீன்! கவனமாக வீட்டுக்குப் போய்விடு! நான் வீட்டிற்கு வந்து மாமாவைப் பார்ப்பதாகச் சொல்லு...!"

நடந்துகொண்டே கைகளை ஆட்டி மிகவும் சகஜமாகப் பேசிய விதம் சுஜாதாவுக்கு மேலும் மேலும் வியப்பையே அளித்தது.

என்ன பெண் இவள்? சற்று முன் அவனை அவமானப்படுத்தினாள்! இதோ மிகவும் சகஜமாகப் பேசி வழியனுப்புகிறாள்... இவளை எப்படிப் புரிந்து கொள்வது...?

சுஜாதா இதைப்பற்றி ஏதாவது கேட்கலாமா வேண்டாமா என்பது போலத் தயக்கத்தோடு லல்லியை ஏறிட்டுப் பார்த்தாள்.

லல்லி புன்சிரிப்போடு அவளை நோக்கினாள்.

"பயந்து விட்டாயா சுஜா! அவன் என் மாமாவின் மகன்தான்! அவர் பெயரைக் கொடுப்பதற்காகவென்றே ஊரைச் சுற்றிக்கொண்டு திரியும் முரடன்!

"உன் மாமாவின் மகனா...? உரிமையுள்ளவன் அல்லவா...! அதனால்தான்! என்ன இருந்தாலும் நீ இப்படி அவமானப்படுத்தக் கூடாது லல்லி!"

"அப்படிப் பேசாவிட்டால் லேசில் நகரமாட்டான் தெரியுமா..."

"அதற்காக இப்படியா...? இருந்தாலும் நீ ரொம்ப ஓவரா பேசுறே..."

"அவன் சுபாவம் எனக்குத்தான் தெரியும்! சரி! அதை விடு...!"

"நீ எங்கே போகவேண்டும்...?"

"நீ எங்கே கூப்பிடுகிறாயோ அங்கே..."

லல்லி அவள் கையை வெடுக்கெனப் பிடித்து இழுத்து நிறுத்தினாள்.

"ஏய்! என்ன சொன்னே இப்போ...?"

"போடி லல்லி! உன் கோபத்தையும் அவன் முறைப்பையும் பார்த்து நான் பயந்துவிட்டேன்...! முரடன் என்கிறாய்! அவனிடம் தனியாக நின்று கொண்டு... சேச்சே! இவ்வளவு துணிச்சல் கூடாது உனக்கு!"

லல்லி வாய்விட்டுச்சிரித்தாள். தூரத்தில் நவீன் தனது மோட்டார் சைக்கிளை ஆத்திரத்தோடு உதைத்து உதைத்து "ஸ்டார்ட்" பண்ணிக் கொண்டிருப்பது தெரிந்தது.

"இவர்கள் இருவரும் வாழ்க்கையில் இணைந்தால் எப்படி இருக்கும்" என்று கற்பனை செய்து பார்த்தாள் சுஜாதா!

[வளரும்]

அக்காவைப்போல் தங்கை



"தாயைப் போலப் பிள்ளை" என்பார்கள். குமாரிகள் சரோஜா-கமலா இருவரையும் பொறுத்த வரையில் "அக்காவைப் போலத் தங்கை" என்றுதான் கூறவேண்டும்!

சில ஆண்டுகளுக்கு முன்பு குமாரி எம். சரோஜா லண்டனுக்குத் தாதிமைப் பயிற்சிபெறச் சென்றார். அவரைப் பின்தொடர்ந்து கடந்த ஏப்ரல் திங்களில் தங்கை குமாரி கமலாவும் லண்டனிலுள்ள நியூ ஹம் தாதிமைப் பயிற்சிப் பள்ளிக்குப் பறந்து சென்றுள்ளார்.

இவர்கள் இருவரும் ஜோகூர் ரெங்கத்திலுள்ள ரப்பர் தோட்டம் ஒன்றில் வேலைபார்க்கும் மண்டோர் திரு. மாணிக்கத்தின் "மணி"யான புதல்விகளாவர்.

"தாதியாக வேண்டுமென்ற ஆசை சிறு பிராயத்திலிருந்தே எனக்கு இருந்துவந்தது. என் அக்கா லண்டனுக்குச் சென்றது முதல், அந்த ஆசை மேலும் சுடர்விட ஆரம்பித்துவிட்டது. நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் தாதிமைச் சேவையாற்றுவதில் தனியோர் இன்பம் கிடைப்பதாகவே நான் நினைக்கிறேன்" என்றார் குமாரி கமலா.

இச்சகோதரிகளின் தாதிமைப் பயிற்சிக்கு உதவிபுரிந்த தொழிலாளர் ஆள்பல அமைச்சின் துணை அமைச்சர் மாண்புமிகு கு. பத்மநாபன் அவர்களையும், முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன் அவர்களையும் நன்றியுணர்வோடு நினைவுகூர்ந்தனர் மாணிக்கம்—சின்னக்கண்ணு தம்பதிகள்.

—ராமதாஸ் மனோகரன்

நாள்பலன்

ஜூன் 26 முதல் ஜூலை 10 வரை

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

முதலாளியாக இருந்தாலும், தொழிலாளியாக இருந்தாலும் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். எழுத்துத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வருமானம் பெருகும். பெரியோர்கள் ஆதரவு கிட்டும். மேலதிகாரிகளால் நன்மை உண்டு. பொறுமையை அதிகம் கடைப்பிடித்தால் இன்னும் பல வழிகளில் நல்லன வந்து சேரும்.

நல்ல நாட்கள்: *26, 6*
எச்சரிக்கை நாட்கள்: *27, 2*

மீனம் (பிப். 19 - மார்ச் 20)

சின்னச் சின்ன விவகாரங்களில் கூட உறவினர்களுடன் வம்புதும்பு வரலாம். வாகனங்களில் பயணம் செய்யும் போதும், இயந்திரங்களில் வேலை செய்யும்போதும் கவனம் தேவை. நண்பர்கள் மற்றும் அக்கம் பக்கத்துக்காரர்களின் பண விஷயங்களில் தலையிட வேண்டாம். புதிய நண்பர்கள் அறிமுகமாவர். வியாபாரிகளுக்கு அத்துணைச் சாதகமான காலமல்ல.

நல்ல நாட்கள்: *29, 30*
எச்சரிக்கை நாட்கள்: *27, 3*

மேஷம் (மார்ச் 21 - ஏப். 20)

கூட்டாகச் சேர்ந்து எதையும் செய்ய வாய்ப்பிருந்தால் தாராளமாகச் செய்யலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். "ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்ட வேண்டும்" என்பதுபோல செலவு செய்யும்போது அளந்து செய்யுங்கள். உறவினர்கள் தொடர்பு அதிகமாக ஏற்படும். என்றாலும் அவர்களால் உங்களுக்கு லாபமே தவிர நட்டமில்லை.

நல்ல நாட்கள்: *28, 30*
எச்சரிக்கை நாட்கள்: *1, 6*

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

வருமானம் சிறிதளவு அதிகரிக்க வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி அவ்வளவாக இராது. கூட்டுத்தொழில் முயற்சிகள் நன்மை தராது. உடலாரோக்கியத்தில் அக்கறை செலுத்துங்கள். பெரியோர்கள் ஆலோசனைகள் உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உதவக் கூடும்.

நல்ல நாட்கள்: *29, 6*
எச்சரிக்கை நாள்: *1, 5*

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

நோய் நொடி என்று உங்களுக்காகவோ உங்கள் நண்பர்களுக்காகவோ நீங்கள் மருத்துவமனைக்குச் செல்ல நேரலாம். பகைவர்கள் நண்பர்களாவார்கள். எதிலும் அவசரம் எதற்கு; ஆற அமரச் சிந்தித்துச் செயல்படுங்கள். பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் சாத்தியம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

நல்ல நாட்கள்: *29, 4, 6*
எச்சரிக்கை நாட்கள்: *26, 3, 9*

கடகம் (ஜூன் 21 - ஜூலை 20)

நண்பர்களாலும் உறவினர்களாலும் வீண் செலவுகள் ஏற்படும். இதனால் அநேகமாக நட்பும் உறவும் முறியும் வாய்ப்பிருக்கிறது. எச்சரிக்கையாக இருங்கள். பெரியோர்களின் உதவி கிடைக்கும். எதிலும் கையெழுத்திடுவதில் கவனம் தேவை. கழுத்தைக் கொடுத்தாலும் பரவாயில்லை; கையெழுத்தைக் கொடுக்கக் கூடாது என்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்களே?

நல்ல நாட்கள்: *29, 3*
எச்சரிக்கை நாட்கள்: *5, 8*

சிம்மம் (ஜூலை 21 - ஆக. 21)

உங்களின் நுண்ணறிவு சுறுசுறுப்பாக இயங்கக்கூடிய நேரம். எழுத்தாளர்களாக இருப்போருக்கு நல்ல "மூடு" வரும். மேலதிகாரிகள் எரிந்து விழக் கூடும்; நண்பர்களும் ஒத்துழைக்காது போகலாம். முடிந்தும் முடியாமலும், தொட்டும் தொடாமலும் விட்ட செயல்களை முடிக்க வாய்ப்பு உண்டு. வியாபாரிகளுக்கு யோககாலம். பிறரிடமிருந்து தவறான தகவல்கள் கிடைக்கும். நம்பி ஏமாந்து விடாதீர்கள்.

நல்ல நாட்கள்: *28, 6*
எச்சரிக்கை நாட்கள்: *27, 3*

கன்னி (ஆக. 22 - செப். 22)

பந்தயங்களில் ஈடுபடுவதன் மூலம் அல்ல; வியாபாரம் செய்வதன் மூலம் அதிர்ஷ்டக் காற்று உங்கள் பக்கம் வீசுகிறது. எங்கும் வாகனங்களில் செல்வதைத் தவிர்த்து விடுங்கள். அளவுக்கு மீறி உழைப்பதைக் கட்டுப்படுத்தாவிட்டால் உங்களின் உடல் நலம் பாதிக்கலாம். கடன் தொல்லையைக் குறைக்க வழி பிறக்கும்.

நல்ல நாட்கள்: *25, 30*
எச்சரிக்கை நாட்கள்: *3, 5*

துலாம் (செப். 23 - அக். 22)

கடிதத்தின் மூலம் நல்ல சேதி வரும். நண்பர்கள்-உறவினர்களின் உதவி முன்பைவிட இப்போது அதிகம் கிடைக்கும். செலவைக் கட்டுப் படுத்துங்கள். பொருளாதார நிலை பிரகாசமாக இருக்கிறது. வெளியூர்ப் பயணங்களால் நன்மை உண்டு. உடல்நிலை நல்லபடி இருக்கும்.

நல்ல நாட்கள்: *25, 30*
எச்சரிக்கை நாட்கள்: *27, 3*

விருச்சிகம் (அக். 23 - நவ. 22)

செலவுக்குத் தக்க வரவுண்டு. ஏனெனில் வீணுகச் செலவு செய்ய மாட்டீர்கள். நெருங்கிய உறவினர்களின் உருப்படியான யோசனையில் ஓரிரு பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள். சிந்திய பாலைச் சேகரிக்க முடியாது. அதுபோல தங்கள் வேலையில் ஏற்படும் தவற்றைத் திருத்த முடியாது என்பதால் கவனமாகச் செய்யுங்கள். வருமுன் காப்பது நல்லதல்லவா?

நல்ல நாட்கள்: *28, 2*
எச்சரிக்கை நாட்கள்: *3, 5*

தனுசு (நவ. 23 - டிச. 20)

பொருளாதார அபிவிருத்திக்காகக் கூட்டு முயற்சிகளில் ஈடுபடுவது பலன் தரும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படலாம். தங்கள் வேலைத் திறமையைக்கண்டு அதிகாரிகள் பாராட்டுவர். இயந்திரம் சம்பந்தப்பட்டவற்றில் பணி புரிவோர் எச்சரிக்கையாக வேலை செய்ய வேண்டும்.

நல்ல நாட்கள்: *30, 2, 6*
எச்சரிக்கை நாட்கள்: *26, 1*

மகரம் (டிச. 21 - ஜன. 19)

கடினமாக உழைக்க வேண்டி இருக்கும். பொருளாதார நிலை சுமார்தான். குடும்பத்தில் வாக்குவாதம் நிகழலாம். இப்படித்தான் நடக்கும் என்றும் முடிவில் எதையும் செய்யாதீர்கள். உங்களைப் பொறுத்தவரையில் அது எப்படியும் நடக்கலாம். ஆபத்து நேரத்தில் உதவுவார்கள் என்று நண்பர்களை நீங்கள் எதிர்பார்க்க வேண்டாம்.

நல்ல நாட்கள்: *29, 1*
எச்சரிக்கை நாட்கள்: *26, 7*

—தஞ்சை நகுலன்

சாந்தம்

சாந்த குணம் உள்ளவர்கள் பூமியை சுதந்தரித்து மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாய் இருப்பார்கள். நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம். அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்கள்; அறுப்புண்டு போவதே துன்மார்க்கரின் முடிவு.

—மத்தேயு 5:5

குழப்பியது போதும்!



அரசியல்வாதிகளின் போராட்டத்தை அதிகமாகப் போட்டு வாசகர்களைக் குழப்பிவிடவேண்டாம். அவர்கள் சமுதாயத்தைக் குழப்பிக் கொண்டிருப்பது போதும்.
—ந. தியாகராஜன், சுங்கைவே

பயன் மிகுதி

சித்தாந்த வித்தகரின் கட்டுரைகள் பயன்மிக்கவை. தொடர்ந்து வெளியிடக்கூடாதா?
—சு. கணேசன், ஜோகூர்பாரு

நீதி மாமா

வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதுபோல், கதையில் அருமையான நீதிகளையும் கலந்து தருகிறார் பழனிமாமா.
—வே. இராமு, ஈப்போ

"நல்ல" பாம்பு

புதிய கோணத்தில் எழுதப்பட்ட "நாகம்" ஓர் அருமையான படைப்பு. மலேசியமொழிக் கதைகள் இன்னும் பலவற்றை வெளியிடுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.
—ஆ. துரைராஜு, அலோர்ஸ்டார்

வழி நிச்சயம்

வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு வள்ளுவர் நிச்சயம் வழிகாட்டுவார் என்னும் உறுதியை உங்களின் முன்னுரை ஆணித்தரமாக வழங்குகிறது.
—மா. சுப்பிரமணியம், மலாக்கா

பாராட்டுகிறேன்

அகிலனின் தொடர்கதை பாராட்டப்படவேண்டிய படைப்பு.
—எம். வி. குணாளன், மிட்லண்ட்ஸ் தோட்டம், கிள்ளான்

மாணவர்களுக்கும்

எல்லாக் கவிதைகளும் என்னைக் கவர்ந்தன. இலக்கிய அரங்கம் தொடரட்டும். பள்ளி மாணவர்களுக்கும் சிறந்த இதழ் "புதிய சமுதாயம்"
—வி. ஆனந்த், லாபு

இளம் எழுத்தாளர்கள்

"புதிய சமுதாயத்தின்" பால் பண்பட்ட பழம் எழுத்தாளர்களின் கவனம் திரும்பியுள்ளது பாராட்டுக்குரியது. அதே வேளையில் தரமான இளம் எழுத்தாளர்களையும் "புதிய சமுதாயம்" வளர்த்து விடுமென நம்புகிறேன்.
—எல். முத்து, செர்டாங

சுட்டிக் கதைகள்

"வெட்டிக் கதைகள்" நகைச்சுவையாகவும் சிந்தனைக்கு விருந்தாகவும் அமைந்தன.
—ஆர். பாலசுப்ரமணியம், லாபுவான் பாடாங் தோட்டம், பத்து தீகா

திருமுறைத் தொண்டர்,

அலுக்காமல் சலிக்காமல் அருட்பணி ஆற்றிவரும் பெரியவர் சண்முகனாருக்குத் "திருமுறைத் தொண்டர்" என்னும் பொருத்தமான பட்டத்தைச் சமுதாயம் வழங்கியது கண்டு பெரிதும் மகிழ்கிறேன்.
—மு. கோபாலன், ஈப்போ

சிதையாத கதை

நாதனின் சிதைந்துபோன இலட்சியத்தை எல். முத்து சிதையாமல் கதையாக்கியுள்ளார்.
—து. பாஸ்கரன், ஜொகூர்பாரு

எப்படியோ?

"புதிய சமுதாயம்" என்னும் தலைப்பை ஆசிரியர் எப்படித்தான் தேர்ந்தெடுத்தாரோ? அவருடைய முயற்சி ஒரு நல்ல சமுதாயத்தை நிச்சயம் உருவாக்கும் என்று தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. சினிமாப் பகுதியைச் சிறிது குறைத்தால் நல்லது.
—குமாரி த. கோமளா, ஈப்போ

வளரும் எழுத்தாளர்களுக்குத் தாங்கள் வழங்கவிருக்கும் பகுதி எப்படி இருக்கும் என்று கனவு கண்டுகொண்டு இருக்கிறேன். கனவு நனவாகும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்றும் நம்புகிறேன்.
—வேலு. இராமரெட்டி, சபாய் தோட்டம், காராக்

தவறாத அற்புதம்

ஒவ்வோர் இதழையும் தவறாமல் படித்துக்கொண்டு வருகிறேன். தொடர்கதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் அனைத்துமே அற்புதமாக இருக்கின்றன.
—பெ. இராஜகுமாரன், கெரிலா தோட்டம், கிளந்தான்

இனிமை

சிறப்பம்சங்கள் அனைத்தும் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமையைத் தருகின்றன.
—இரா. வேலாயுதம், சிகாமட்

கவர்ந்தன பேட்டிகள்

"புதிய சமுதாயத்தில்" வரும் பேட்டிகள் என்னை மிகவும் கவர்ந்துவிட்டன.
—சு.அ. நாராயணன், தெமர்லோ

குறையைத் தீர்க்கலாமே!

"புதிய சமுதாயத்தில்" மாதர் பகுதி இல்லாத குறையைத் தீர்த்து வைப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.
—திருமதி பத்மாவதி மருதை, புக்கிட் ரோத்தான்

இலக்கியப் போட்டி

சற்றுச் சுலபமாக செய்யக் கூடியதாகத் தமிழறிவுப்போட்டியை வெளியிட்டால் நன்று. இலக்கியத்தோடு ஒட்டிப் போனால்தான் விடை காண முடியும்போல் இருக்கிறது. எல்லாரும் இலக்கியம் பயின்றிருப்பார்கள் என்று எண்ணுவது கடினம்.
—என். சக்கரவர்த்தி, கங்கார் பூலாய், ஜோகூர்

சுவையான கனவு

மாங்கனியின் "கனவுகள் பலகோடி" படிப்பதற்குச் சுவையாக இருக்கிறது.
—பனைக்குளம் ஹாமீம் முஹம்மது, சபாக் பேர்ணம்

நிறுத்துக!

சினிமாப் பகுதியை நிறுத்தி, நாட்டுக்குப் பயன் தரக்கூடிய செய்திகளை வெளியிடுவது நல்லது.
—கே. குணசேகரன், போர்ட்டிக்சன்

நல்ல வளர்ச்சி

ஒவ்வோர் இதழிலும் வளர்ச்சி நன்கு தெரிகிறது.
—தாரா எழிலழகன், சுங்கைவே

மலேசியமொழித்தேர்வில் வெற்றி பெற... (5)

அடிப்படை

வெ. ஆறுமுகம்

மலேசியமொழியில் வெற்றி பெறத் தவறியதனாலேயே கடந்த பல ஆண்டுகளில் நம் மாணவர்களுள் பெரும்பாலோர் எஸ். பி. எம்./எம். சி. இ. தேர்வில் தோற்றுப்போயினர். கட்டாயப்பாடமான மலேசியமொழியில் தேர்வுறாததனால் பெறற்கரிய வாழ்நாளில் அவர்கள் ஓராண்டை இழந்தனர்.

காய்ந்துபோன இலைகள், வீசும் காற்றிலே "பொலபொல" வென உதிர்வதைப்போல் மலேசியமொழித் தேர்வில் நம் மாணவர்கள் சரிவதற்குக் காரணம் என்ன என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்; புரிந்துகொண்டு ஆவன செய்ய வேண்டும். பலர், பல காரணங்களைக் கூறுவார்கள்; ஆனால் அவையெல்லாம் காரணங்களே அல்ல! உங்களுடைய கவனக்குறைவுதான் காரணம்; இந்த அடிப்படைக் காரணத்திலிருந்துதான் உங்களைப் பாதிக்கும் பிற காரணங்கள் பிறக்கின்றன.

மாணவர்களாகிய நீங்கள் எல்லாவற்றிலும் கவனக்குறைவாக இருக்கிறீர்கள் என்று சொல்வது தவறுதான்; ஏனெனில் உங்களுள் பெரும்பாலோர் எல்லா விஷயங்களிலும் கவனமாகத்தான் இருக்கிறீர்கள்-கல்வியைத் தவிர. உங்களைச் சொல்லி என்ன செய்ய? இன்றைய மாணவ, மாணவியர்க்குள்ள பிரச்சினைகள் ஒன்று இரண்டா? திரைப்பட நடிக, நடிகையரைப் பற்றிப் பேச வேண்டும், திரைப்பட அரங்குகளைச் சுற்றி அங்கு ஒட்டப்பட்டுள்ள படங்களைப் பார்க்க வேண்டும், பெற்றவர்கள் வியர்வையில் தோய்த்துத்தரும் பணத்தைக்கொண்டு அவர்களுக்குத் தெரியாமல் படங்களை முதல் நாளன்றே பார்த்துவிட வேண்டும், வயதுக்கு மீறிய விகார எண்ணங்களை மனத்தில் வளர்த்துக் கொண்டு அவைபற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கவேண்டும் – இப்படி இன்னும் பல முக்கியமான வேலைகள் இருக்கும்போது கல்விக்கும் நேரம் ஒதுக்குவது சிரமம்தான்!

வேடிக்கையாகச் சொல்லுவதாக எண்ணுகிறீர்கள்! உங்களை நம்பியிருக்கும் சமுதாயத்தின் வேதனையைத்தான் இப்படிச் சொல்லவேண்டி இருக்கிறது! இதை வேடிக்கையாக எடுத்துக்கொண்டீர்கள் என்றால் உங்கள் எதிர்காலமே ஒரு வேடிக்கையாகிவிடும். உங்களைப்பற்றி உங்கள் பெற்றோர்கள் கவலைப்படுகிறார்கள்; ஆசிரியர்கள் கவலைப்படுகிறார்கள்; தலைவர்கள் கவலைப்படுகிறார்கள்; ஆனால் நீங்கள் மட்டும் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. உங்களுடைய கவலையின்மையால் ஓர் இனமே இங்கு மெல்ல மெல்லச் செத்துக்கொண்டிருக்கிறதே, இதை நீங்கள் உணர மாட்டீர்களா?

நீங்கள் அனைவருமே நம் நாடு விடுதலை அடைந்தபின் பிறந்தவர்கள். நீங்கள் பிறப்பதற்கு முன்னமே மலேசிய மொழி தேசியமொழி ஆகிவிட்டது. முதலாம் வகுப்பிலிருந்தே மலேசிய மொழியைக் கற்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள் நீங்கள். பதினோராண்டுகள், பன்னிரண்டாண்டுகள் இம்மொழியைக் கற்றபின்னும் எஸ். பி. எம். / எம். சி. இ. தேர்வில் உங்களால் வெற்றிபெற முடியவில்லை என்றால் குறை உங்களிடம் தானே தவிர வேறு யாரிடமும் இல்லை. "இப்படியும் கெடுவேன், இன்னமும் கெடுவேன்" என்பதுபோல் இருப்பீர்களாயின் உங்களுக்கு உதவ யாராலும் முடியாது.

தேர்வுக்கு இன்னும் ஏறத்தாழ 130 நாட்கள் உள்ளன. தேர்வில் வெற்றி பெற்றே தீரவேண்டும் என்னும் உறுதியோடு, இடைவிடாது பயிலுங்கள். மலேசிய மொழியோடு பிற பாடங்களையும் போதுமான ஆர்வத்தோடு பயிலுங்கள். இன்றுவரை நம் மாணவர்கள் பெற்ற வெற்றியைவிட நீங்கள் பலமடங்கு அதிகமாகப் பெறவேண்டும். தேர்ச்சி பெறுபவர்கள் எண்ணிக்கை இந்த ஆண்டு மிக உயர வேண்டும். எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்னும் நோக்கத்தில் உழைத்துப் படிப்பீர்களாயின் நீங்கள் உயர்வீர்கள்! உண்மையாக உழைப்பவர்களை இறைவன் உயர்த்துவான்!

மலேசியமொழி வினாத்தாளின் இரண்டாவது தாளிலுள்ள மூன்றாவது கேள்வி மிகப்பரவலான விஷயங்களை உள்ளடக்கியது. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்குரிய வினாத்தாட்களைக் கொண்டு இக்கேள்வியின் உட்பொருளை ஏறத்தாழக் கீழ்வருமாறு பகுக்கலாம்:

அ) Imbuhan தொடர்புள்ள வினாக்கள்.

ஆ) பழமொழிகள், மரபுத் தொடர்கள்.

இ) நேர்கூற்று, அயற்கூற்று.

ஈ) வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்துதல்.

உ) வாக்கியங்களை இணைத்தல்.

ஊ) ஒரே மாதிரி ஒலியுடைய இரு சொற்களை வாக்கியங்களில் அமைத்தல்.

எ) பல பொருள் கொண்ட சொற்களை வாக்கியங்களில் அமைத்தல்.

ஏ) சொற்றொடருக்குப் பதிலாகச் சொல்லை எழுதுதல்.

ஐ) ஏறத்தாழ ஒரே மாதிரி இருக்கும் சொற்றொடர்களின் பொருள் வேறுபாட்டை விளக்குதல்.

ஒ) சொற்றொடர்களை வாக்கியங்களில் அமைத்தல்.

ஓ) இரட்டிக்கும் சொற்கள்.

ஔ) பேச்சுமொழியை எழுத்து நடையில் எழுதுதல்.

இந்தப் பன்னிரண்டு விஷயங்களும், இலக்கணத்தையும் மொழிப் பயிற்சியையும் அடிப்படையாகக் கொண்டவை. இங்குக் குறிப்பிடப் படாத வேறு முறையிலான கேள்விகளும் வரலாம்.

இவையனைத்தையும் விளங்கிக் கொண்டால்தான் மூன்றாவது கேள்வியை நீங்கள் நன்கு செய்ய இயலும். மூன்றாவது கேள்விக்கு மட்டுல்ல, கட்டுரைக்கும், சுருக்கி எழுதுவதற்கும், பிற கேள்விகளுக்கும் இவை மிக முக்கியம். ஏனெனில் இவைதாம் மலேசியமொழியின் அடிப்படைப் பயிற்சிகள். இவற்றைப் பற்றிய விளக்கங்கள், சற்று விரிவாகவே அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்.

வெல்க!

பற்றறுக்கும் பற்று

அந்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ!

அரசவண்டே! "அந்தத் தேவரே தேவர், அவர் ஒருவரே தேவர்" என்றெல்லாம் பொய்த்தேவர்கள் பலரையும் பற்றிக் கூறிப் புலம்புகின்ற நிலவுலகத்தின் கண்ணே, பற்றுச் சிறிதேனுமின்றி, எனது உலகப்பற்று நீங்கும்படியாக நான் பற்றிநின்ற உண்மையான தேவதேவனுடைய திருவடி மலர்கட்கே சென்று, நீயும் ஊதுவாயாக!

—திருவாசகம் 10:5



நடிகைகள்: ஸ்ரீவித்யா – படாபட் ஜெயலட்சுமி.
திரை: அவர் எனக்கே சொந்தம்

கமல் பாடுவார் ஆடுவார்



இயக்குநர் சிகரம் கே. பாலசந்தர் தலைமையில் சிங்கை — மலேசிய ரசிகர்களுக்குக் கலை விருந்து படைக்கத் தமிழ்த்திரையுலக இளம் கதாநாயகன் கமலஹாசன், ஜெய் கணேஷ், ஸ்ரீதேவி, ஜெயசித்ரா, சுமித்ரா போன்ற கலைஞர்களும் வருகிறார்கள்.

இவர்களின் முதல் கலைநிகழ்ச்சி கோலாலம்பூர் ஸ்டேடியம் நெகாராவில் ஜூன் 24, 25, 26-ஆம் தேதிகளில் தொடங்கி நாட்டின் பல நகரங்களிலும் நடைபெறவுள்ளன.

சத்யா எண்டர் பிரைஸின் மாபெரும் கலைப்படைப்பான இந்நிகழ்ச்சியில் கே. பாலசந்தர் எழுதி இயக்கும் மூன்று நாடகங்களும், ஏ. சகுந்தலாவின் கவர்ச்சி நடனங்களும், கோபு-பாபு குழுவினரின் இன்னிசையும் இனிக்கும் அம்சங்களாக இடம்பெறும். இந்நிகழ்ச்சியில் கமலஹாசன், நாடகங்களில் நடிப்பதோடு நடனமும் ஆடுவார்; பாடலும் பாடுவார்.

அவன் ஒரு சரித்திரம்



சிவாஜி கணேசன் - மஞ்சுளா
படம்: "அவன் ஒரு சரித்திரம்

நாடு பொன்விளையும் பூமியாக வேண்டும்; போலி அரசியல்வாதிகள் ஒழியவேண்டும் என்னும் இலட்சியக் குரலோடு அரசாங்கப் பதவியைத் துறந்துவிடும் சங்கர்.

சங்கரின் நிழலாக நின்று வாழ்வு பெறத் துடிக்கும் கோமதி. நரகத்தில் ராணியாக இருப்பதைவிட சொர்க்கத்தில் வேலைக்காரியாக இருக்க விரும்பும் கல்பனா. எதையும் வன்முறையால் சாதிக்க நினைக்கும் முத்து.

உயிரைவிட தமது நிலமே பெரிது என்று நினைக்கும் நமச்சிவாயம். தன் கணவனுக்கு இறுதிக் கடன் செய்ய வராத மகனிடம் பேசாத அன்னை லட்சுமி. பகையுணர்ச்சியோடு பழியுணர்ச்சியும் கொண்டிருக்கும் வேதாசலம். சங்கரின் லட்சியத்தைப் பாராட்டும் பரமானந்தம்.

இவர்கள் அனைவரும் "அவன் ஒரு சரித்திரம்" படத்தில் முக்கிய பங்கேற்றிருக்கிறார்கள்.

சிவாஜி கணேசன், மஞ்சுளா, காஞ்சனா, கே. ஏ. தங்கவேலு, மனோரமா, ஸ்ரீகாந்த் முதலியோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கும் இப்படத்திற்கான பாடல்களைக் கவியரசு கண்ணதாசனும் நெல்லை அருள்மணி, செல்வபாரதி ஆகியோரும் எழுதியுள்ளனர்.

தமிழ்ப்படவுலகில் ஒரு சரித்திரத்தை "ஏற்படுத்திக்கொண்டிருக்கும் "அவன் ஒரு சரித்திரம்" கோலாலம்பூர் கொலிசியத்தில் 25-6-77-ல் நள்ளிரவுக்காட்சியாகத் திரையேறுகிறது. மலேசியாவில் இந்தப் படத்தின் வெளியீட்டாளர்கள் வி. டி. ராஜன் அண் கம்பெனியார்.

மாஜூ ஜெயா

ந.கோவிந்தன்

மலேசிய இளைஞர் இயக்க வரலாற்றிலேயே கடந்த சில ஆண்டுகள் ஒரு புதிய எழுச்சி மிக்க சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளன. இளைஞர் மன்றங்கள் பொருளாதாரத் துறையிலும் சமூக மேம்பாட்டுத் துறையிலும் தங்களுடைய ஆற்றலை முடுக்கிவிட்டிருக்கின்றன. இந்த நோக்கத்தில்தான் பல இளைஞர் மன்றங்கள் கூட்டுறவுக் கழகங்களைத் தொடக்கியுள்ளனர். இவை பெரும்பாலும் மாநில அல்லது மாவட்ட அளவிலேயே இயங்கி வருகின்றன. மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றங்களின் மாஜூ ஜெயா இளைஞர் கூட்டுறவுக் கழகம், தேசிய அளவில் இயங்கும்- இயங்குகின்ற சில இளைஞர் கூட்டுறவுக் கழகங்களில் ஒன்றாகும்.

போதிய பண வசதியிருந்தால் ஒழிய தனி நபர் ஒருவர் பொருளாதாரத் துறையில் ஈடுபடுவது என்பது இயலாததாகும். நம் சமூகத்தினரில் பெரும்பான்மையோர் குறைந்த வருமானம் பெறுவோர். ஆதலால் இந்திய இளைஞர்களும் அதற்கு விதிவிலக்கு அல்லவே. இளைஞர்களிடையே இருக்கின்ற சிறு சேமிப்புக்களைத் திரட்டி ஒன்றுசேர்த்துக் கூட்டுறவுக் கழகத்தின் வழி பல்வேறு பொருளாதார சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபடுவதே மாஜூ ஜெயா இளைஞர் கூட்டுறவுக் கழகத்தின் முக்கிய நோக்கமும், பணியுமாகும். ஏதாவதொரு வகையில் உறுப்பினர்கள் தங்கள் சிறுசேமிப்புக்களைப் பலன்தரும் வகையில் முதலீடு செய்யவேண்டும். அதற்கு மாஜூ ஜெயா இளைஞர் கூட்டுறவுக் கழகத்தின் வழி உறுப்பினர்கள் வலிந்து தங்கள் சேமிக்கும் பழக்கத்தைத் தீவிரப்படுத்தச் செய்வதே நோக்கமாகும். நாம் ஈடுபடும் திட்டங்களின் வழி இந்திய இளைஞர்களை சொந்த முயற்சியோடு, பிறரை நம்பியிராமல் ஒரு சில மேம்பாட்டுத் துறைகளில் ஈடுபடுத்த வேண்டும் என்பதே நமது கொள்கையாகும்.

திட்டங்கள்

பல திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்றும் ஆர்வம் இருக்கின்றது. எனினும் சூழ்நிலைக்கேற்ப- திரட்டப்படும் பங்குப் பணத்திற்கேற்ப – செயல்படுத்த விழையும் சில திட்டங்கள் பற்றி மட்டுமே இன்று நான் விளக்குகின்றேன்.

(அ) தொழில், பொறியியல் பயிற்சிக் கூடங்கள்

முதல் திட்டமாக நமது மணிமன்றங்கள் இயங்கி வருகின்ற எல்லா மாநிலங்களிலும் தொழில் – பொறியியல் பயிற்சிக் கூடங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். இப்பயிற்சிக் கூடங்களில் எல்லாவித பொறியியல் பயிற்சிகளும், அடங்கும். மோட்டார் மெக்கானிக், மரவேலை, தச்சுவேலை, மின்சார சாதனங்கள் பழுது பார்க்கும் பயிற்சிகள், உலோகத் தொழில்கள் போன்ற சில துறைகளில் நமது இளைஞர்கள் பயிற்சி பெற்றவர்களாகத் தேர்ச்சி பெற்றவர்களாகத் திகழ்வார்கள். இப்பயிற்சிக் கூடங்கள் இருவழிகளில் நமது உறுப்பினர்களுக்கு நன்மை பயக்கும்.

1. பயிற்சிக்கூடங்கள் ஒரு தொழிற்கூடமாகவும் அமையும். பயிற்சி பெற்ற ஒருசிலரைக் கொண்டு ஒரு வியாபார நோக்கத்தோடு இதனை அமைத்தல். அதேவேளையில் நமது இளைஞர்கள் பயிற்சி பெறவும் தாங்கள் தேர்ச்சிபெற்ற துறையில் சொந்தமாகத் தொழில் புரியவும் வாய்ப்புக்கள் வழங்கப்படும். பயிற்சிபெற்று தேர்ச்சிபெற்ற இளைஞர்கள் மேலும் சில இந்து இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களைத் தேர்ச்சிபெற்றவர்களாக ஒரு துறையில் திறன்பெற்றவர்களாகத் திகழச் செய்வது.

(ஆ) சிறு தொழில் கடன் உதவி

இந்திய இளைஞர்களைச் சிறு தொழில்களில் ஈடுபடுத்துவதற்கு உறுப்பினர்களுக்கு வேண்டிய சிறு தொழில் கடனுதவியும் பிற உதவிகளையும் வழங்குவது மாஜூ ஜெயா கூட்டுறவுக் கழகத்தின் மற்றொரு திட்டமாகும். இந்திய இளைஞர்களிடையே சிறு தொழிலில் ஈடுபட வேண்டும் என்னும் ஆர்வம் மிகவும் குறைவு. குறிப்பாக அங்காடி வியாபாரம் செய்பவர்கள் அதனினும் குறைவு. அங்காடி வியாபாரம் செய்வதற்கு கூச்சப்படுகின்றார்கள். பிறருக்குக் கீழ், குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்வதை பெருமையாகக் கருதுகின்றார்களா? அல்லது தொழில் துறைகளில் ஈடுபடுவதற்கு அச்சமா? அல்லது போதுமான பண வசதியின்மையா? எக்காரணமாக இருப்பினும் இந்திய இளைஞர்களிடமிருந்து அங்காடி வியாபாரம் செய்வதற்குக் கிடைக்கும் மனுப்பாரங்கள் மிகக் குறைவு என அரசாங்கச் சார்பு நிறுவனங்களில் பணி புரியும் சில நண்பர்களின்மூலம் அறிகின்றேன். இந்த மனப் போக்கினை மாற்றிட மாஜூ ஜெயா இளைஞர் கூட்டுறவுக் கழகம் முன்னோடியாகத் திகழும். சிறு தொழில் புரிகின்ற ஒரு சிலரும் பல்லாண்டு காலமாக ஒரே அளவில்தான் தொழில் புரிந்து வருகின்றனர். தொழிலை விரிவாக்குவதற்கான முயற்சிகளில் தோல்வி அடைந்துவிட்டார்களோ என்னவோ? கூட்டுறவுக் கழக உறுப்பினர்கள் சிறு தொழில்களில் ஈடுபடுவதற்கு அடிப்படைப் பயிற்சிகள் அளித்து அணுகு முறைகளைப் பற்றிய செய்திகளையும், அவர்களுக்கு எடுத்தியம்பி அதற்குமேலான தேவையான கடன் உதவிகளையும் செய்து இந்திய இளைஞர்களைச் இச்சிறு தொழில் துறையில் ஈடுபடுத்துவதே கழகத்தின் குறிக்கோளாகும். வேலையில்லாப் பிரச்சினைக்கும் குறைந்த வருமானப் பிரச்சினைக்கும் ஓரளவு இத்திட்டத்தால் தீர்வுகாண இயலும்.

(இ) மலிவு வீடமைப்புத் திட்டங்களில் கூட்டு முயற்சி

மாஜூ ஜெயா இளைஞர் கூட்டுறவுக் கழகத்தின் மற்றுமோர் திட்டம் மலிவு வீடமைப்புத் திட்டம்.



கோலாலம்பூர் மணிமன்றத் தலைவர் திரு. வி. ஏம். முத்து வரவேற்புரையாற்றுகிறார். அமர்ந்திருப்போர் இடமிருந்து வலம் திரு. செ. சொக்கலிங்கம், திரு. ந. கோவிந்தன் (கட்டுரையாளர்).

இந்தியர்களில் பெரும்பான்மையோர் குறைந்த வருமானமுடையவர்கள். இப்பொழுது விற்கப்படும் வீடுகளின் விலைகளோ அவர்களுடைய நிலைக்கு அப்பாற்பட்டவையாக உள்ளன. இச்சூழ்நிலையால் இந்தியர்கள் வீடுகள் வாங்குவதற்கு வீட்டுடைமையாளர்களாவதற்கு வாய்ப்புக்கள் இல்லாமல் போய்விடுகின்றன. மாஜூ ஜெயா இளைஞர் கூட்டுறவுக் கழகம் பிற இளைஞர் கூட்டுறவுக் கழகங்களுடன் அரசாங்கச் சார்பு நிறுவனங்களுடன் இணைந்து மலிவு வீடமைப்புத் திட்டங்களில் ஈடுபடும் கூட்டுறவுக் கழக உறுப்பினர்கள் தங்களுடைய வருமான நிலைக்கேற்ப விலையுள்ள வீடுகளைப்பெற எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். மூன்றுவது மலேசியத் திட்டத்தின்கீழ் அரசினர் மலிவு வீடமைப்புத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். குறைந்த வருமானம் பெறுவோரும் வீட்டுடைமையாளர்களாக வேண்டும் என்ற அரசினரின் கொள்கைக்கேற்ப அவர்கள் வழங்கும் வாய்ப்புக்களை பயன்படுத்திக் கழகம் இத்திட்டத்தினைச் செயல்படுத்தும். அரசினரின் இச்சீரிய கொள்கை வெற்றிபெற மாஜூ ஜெயா இளைஞர் கூட்டுறவுக் கழகம் முழு ஒத்துழைப்பினை நல்கும்.

நம்மிடையே ஒரு சிலர் நிலம் வைத்திருக்கின்றனர். நிலத்தை மேம்படுத்த வீடுகளைக் கட்ட போதுமான பண வசதி இல்லாமலிருக்கின்றனர். மாஜூ ஜெயா கூட்டுறவுக் கழகம் இவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கின்ற திட்டத்தினையும் மேற்கொள்ளவிருக்கின்றது.

(ஈ) தொழில் நிறுவனங்களில் முதலீடு

மாஜூ ஜெயா இளைஞர் கூட்டுறவுக் கழகம், இயங்கி வருகின்ற சில தொழில் நிறுவனங்களிலும் புதிதாக அமைக்கப்படவிருக்கும் தொழில் நிறுவனங்களிலும், முதலீடு செய்வது கழகத்தின் நீண்டகால திட்டமாகும். நமது கூட்டுறவுக் கழகம் திரட்டக் கூடிய திரட்ட முடிகின்ற பங்குகளைப்பொறுத்திருக்கின்றது-இத்திட்டத்தின் வெற்றி.

இத்திட்டம் கழகத்திற்கு இலாபம் தரக்கூடிய ஒன்றாக இருப்பினும் அதற்கு மேலான இந்திய இளைஞர்களில் ஒரு சிலர் இத்தொழில் நிறுவனங்களில் பணியாற்றுவதற்கு வழி வகுக்கும். பெரிய தொழில் நிறுவனங்களில் இந்திய இளைஞர்கள் பெறுகின்ற பயிற்சியும் அனுபவமும் கழகம் எதிர்காலத்தில் சொந்தமாகச் செயல்படுத்தும் திட்டங்களுக்கு மிகவும் உறுதுணையாக அமையும்.

(உ) விவசாயத் துறையில் ஈடுபடுதல்

விவசாயத் துறையில் இந்திய இளைஞர்கள் ஈடுபடுவதற்கு வழி வகுப்பதற்கு எல்லா வாய்ப்புக்களையும் வழங்குவது மாஜூ ஜெயா இளைஞர் கூட்டுறவுக் கழகத்தின் மற்றும் ஒரு திட்டமாகும். கூட்டுறவுக் கழகத்தின் வழி அரசாங்க நிலங்களைப் பெற்று நமது உறுப்பினர்கள் விவசாயத் துறையில் ஈடுபடுவத்ற்கு வேண்டிய உதவிகளைச் செய்யும்.

கோழிப்பண்ணை, ஆட்டுப் பண்ணை, மாட்டுப்பண்ணை, காய்கறி பயிரிடுதல் போன்ற பல்வேறு விவசாயத் துறைகளிலும் நமது இளைஞர்கள் ஈடுபடச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இன்னும் பல திட்டங்கள் இருப்பினும் தொடக்கத்தில் கழகம் மேற்கொள்ள முயற்சிசெய்ய இருக்கின்ற திட்டங்கள் சிலவற்றைப்பற்றி மட்டுமே நான் குறிப்பிட்டுள்ளேன்.

கூட்டுறவுக் கழகங்கள் வெற்றி பெற வேண்டுமானால், முதலாவதாக அதிகமான உறுப்பினர்கள் இருக்க வேண்டும். அடுத்துக் குறிப்பிடத்தக்க பங்குகளையும் பணத்தையும் திரட்டவேண்டும். மூன்றுவதாக, திரட்டுகின்ற பணத்தைப் பயன்மிக்க செயல் திட்டங்களில் செயல்படுத்துவதற்குத் தகுதிவாய்ந்த இயக்குநர் குழு இருக்கவேண்டும். இயக்குநர் குழு செயல்படுவதற்கு அதிகமான உறுப்பினர்களும் பணமும் சேர்க்க வேண்டும்.

நமது சமுதாயப் பொருளாதார மேம்பாட்டினையே நோக்கமாகக் கொண்டு தொடக்கப்பட்டுள்ள இக்கூட்டுறவுக் கழகத்தின் வழி நமது பிரச்சினைகள் பலவற்றை ஓரளவாவது குறைக்கமுடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. பிற இனங்கள் விரைவாகப் பல துறைகளிலும் முன்னேறுகின்ற இவ்வேளையில், நாம் இனியும் காலம் தாழ்த்தினால் நம்மிடையே விழிப்புணர்ச்சியும் மறுமலர்ச்சியும் எழாவிட்டால் நமது சமுதாயத்தின் நிலை மிகவும் சீர்கெட்டுவிடும்.

(அண்மையில் கோலாலம்பூர் தமிழ் இளைஞர் மணி மன்றம் நடத்திய கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை)

சிந்தனை மேடை

'கதிர்'

உண்மை ஒழிந்து பொய்மைக்கு உருக் கொடுக்கிற நிலைமை தற்போது உருவாகி வருவதை நினைக்கும்போது நெஞ்சு பதைக்கிறது. அநேகமாக எல்லா நிலைகளிலும் போலித்தனமும், சம்பிரதாய நாடகங்களும், செயற்கை நடவடிக்கைகளும், கவர்ச்சி விளையாட்டுக்களுமே செல்வாக்குப் பெற்று வருவதை நினைக்கும்போது எதிர்காலம் தெளிவாகத் தெரியமாட்டேன் என்கிறது.

நிகழ்ச்சிகளில் தகுதியல்லாதார்க்கெல்லாம் மாலை மரியாதை செய்வது, பூ தூவுவது, பொன்னாடை போர்த்துவது, விளம்பரத் தாகத்தால் துடியாய்த் துடிப்பது, எல்லா இடங்களிலும் "தாமே எல்லாம்" என்று ஆடிக்காட்ட விரும்புவது, இன்னொருவன் சாதனையைத் தனதென்று வெட்கமின்றி கொண்டாடுவது, பணம் வாங்கி நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைப்பது, தாம் விரும்பாதவர்களைப் பொது நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க விடாமல் சுவராக எழும்பி நிற்பது, தனக்கு இருக்கும் தற்காலிக ஆதரவை நம்பி "கேங்" திரட்டிப் பதவி பிடிக்க, விளம்பரம் தேடப் பாய்வது, அணியென்னும் பிணிகொண்டு பிய்ந்து போவது போன்ற காரியங்களைப் பார்க்கும்போது நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம் என்பதே தெரியாமலிருக்கிறது.

ஒரு கூட்டத்திற்கு ஒன்பது தலைவர்களை அழைத்து, அவர்களைப் பேச வைத்து மக்களைத் தூங்க வைப்பது ஒரு பொதுச்சேவை. பேசுகிற அவர்களும், எவரையாவது நக்கல் பண்ணுவதுதான் பேச்சு என்று பொழிந்து தள்ளுவது ஒரு நாகரிகம்; கல்யாணமோ, கருமாதியோ, கோயில் திருவிழாவோ எதுவானாலும் அவை நாகரிகமின்றி அங்கெல்லாம் தங்கள் சொந்தப் பிரச்னைகளைப் பேசுவதும் வாக்குச் சேகரிப்பதும் திட்டவேண்டியவர்களைத் திட்டித் தீர்ப்பதும் ஒரு மரபாகவே ஆகிவருகின்றது.

நான் பணம் கொடுத்தேன். நானே யாவையும் அநுபவிக்க வேண்டும். என் கோஷ்டி நாயகர்களே விழாவில் வந்து ஆடவேண்டும் என்று சிந்திப்பது - செயல்படுவது ஒரு போக்கு.

தெய்வம், தர்மம், பொது உணர்வு, நீதி, நேர்மை எல்லாம் பேசுவது, எழுதுவது, வெளியிடுவது, பிறகு இத்தனை பெர்சென்டேஜ் தான் இவருக்கு விளக்கம், இந்த அளவுதான் இவருக்கு விளம்பரம் என்று பெர்ஸென்டேஜ் வியாபாரம் ஒரு போக்கு!

இப்படிப் பொதுச்சேவை அமைப்புக்கும் சமூகநல உதவிக்கும் இலக்கிய-கலைத்துறை ஒழுங்குக்கும் அப்பாற்பட்ட பாணிகள் பொது வாழ்க்கையில் நடமாடுமானால் எவ்வாறு தான் பொது வாழ்க்கை புனிதமானதாக ஆக முடியும்?

இந்தப் போக்கும் நோக்கும் என்று திருந்துகிறதோ அன்றுதான் பொதுவாழ்க்கை புனிதப்படும். இல்லாவிட்டால் பொது வாழ்க்கை ஒரு சாய்க்கடையாகவே மாறிவிடும்!



தொலைக்காட்சி

3-7-77 ஞாயிறு மாலை 4.00மணிக்கு இந்திப்படம்: பஹார்.

10-7.77 ஞாயிறு மாலை 4.00 மணிக்குத் தமிழ்ப்படம். கே. எஸ். கோபாலகிருஷ்ணன் கதை-வசனம் எழுதி இயக்கிய வந்தாளே மகராசி. இதில் மக்கள் கலைஞர் ஜெய்சங்கருடன் ஜெயலலிதா இரட்டை வேடங்களில் நடிக்கிறார். மற்றும் சோ, வி. எஸ். ராகவன், ·எம். என். ராஜம் ஆகியோர் நடித்துள்ளனர். இசை: சங்கர்-கணேஷ்.

14-7-77 வியாழன் மாலை 5.30க்குத் தமிழ்ப்படம். கலைஞர் மு. கருணாநிதி கதை - வசனம் எழுதிய பராசக்தி. இதில் சிவாஜி கணேசன், ஸ்ரீரஞ்சனி, எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம், ·பண்டரிபாய் ஆகியோர் நடித்துள்ளனர்.

வானொலி

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

2-7-77 மலரும் முள்ளும் சுங்கை ஜாவி ஈஸ்வரி ராஜ் எழுதியது.

9-7-77 நீ இல்லையேல் நான் இல்லையே. எழுத்து: கோலக்கெட்டில் டி. லெட்சுமணன்.

தொடர் நாடகம்

[திங்கட்கிழமை தோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகிறது]

அலைகள் ஓய்ந்தபோது.. ஒலியேறும். எழுதுபவர்: பத்தாங் பெர்ஜூந்தை சுப்பிரமணியம் சக்கரவர்த்தி

சிரிப்புச் சித்திரம்

[சனிக்கிழமை தோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகிறது]

2-7-77 கண்ணே உனக்காக தலைநகர் பதவியன் எழுதியது.

9-7-77 திருவேங்கடத்திற்குப் புத்தி வந்தது. பத்தாங் பெர்ஜூந்தை சுப்பிரமணியம் சக்கரவர்த்தி எழுதியது.

மனச்சுழல்

[ஞாயிறு தோறும் காலை மணி 10.30க்கு ஒலிபரப்பாகிறது]

3-7-77 எஸ். வைரக்கண்ணு எழுதிய நான்கு சுவர்கள்

10-7-77 தலைநகர் பதவியன் எழுதிய இணைந்த உள்ளம்

ஒலிச்சித்திரம்

(சனிக்கிழமை தோறும் மாலை மணி 6–31க்கு ஒலிபரப்பாகிறது)

2-7-67— 9-7-77 ஆகிய நாட்களில் சிவகுமார், சந்திரகலா நடித்த உறவாடும் நெஞ்சம் இரு பகுதிகளாக ஒலியேறும். கதை -வசனம்: ஷண்முகப்பிரியன். இசை: இளையராஜா. வானொலி வடிவம்: எல். ராமன்.

அறிவிப்பாளர் விருப்பம்

(ஞாயிறுதோறும் மாலை 6.31 -க்கு ஒலிபரப்பாகும்)

3-7-77 இப்படியும் பாடுவார் என்னும் தலைப்பில் எல். ஆர். ஈஸ்வரியைக் கொண்டு அரைமணி நேர நிகழ்ச்சியினை ராகவன் படைக்கிறார்.


10-7-77 தமக்குப் பிடித்த நிகழ்ச்சியினைப் படைப்பவர் திருமதி சரஸ்வதி சிபாமக்கிருஷ்ணன்.

கண்ணோட்டம்

பல்லாயிரக்கணக்கான நேயர்களைத் தன் வசம் ஈர்த்துக் கொண்டிருக்கும்நிகழ்ச்சி"மனச்சுழல்" நாடகத்தொடர். இதில் கடந்த 29-5-77இல் "நெருப்பு வலை" என்ற மர்ம நாடகம் ஒலியேறியபோது இடையில் திடீரென்று ஒன்றுமே புரியாத வகையில் சில ஒலிகள் தொடர்ந்து வந்துகொண்டிருந்தன. நாடகம் தவறான வேகத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டதால் ஏற்பட்ட கோளாறாக இருக்கலாம் என்பதைப் பின்னர் தான் உணரமுடிந்தது.

நேயர்களின் அபிமான நிகழ்ச்சி ஒன்றில் இப்படிப் பட்ட தவறுகள் நிகழலாமா?

எஸ். ஜெயமேரி, தெலுக்கான்சன்



சுங்கைவே-சுபாங் தமிழ இளைஞர் மணிமன்றம் வெளியிட்டுள்ள "மணிக்குயில்" பாடல் தொகுப்பில் மொத்தம் 22 பாடல்கள் உள்ளன.

சா. ஆ. அன்பானந்தன் பத்துப் பாடல்களும், பாதாசன் பத்துப் பாடல்களும், சோ. பரஞ்சோதி இரண்டு பாடல்களும் இயற்றியுள்ளனர்.

மணிமன்றங்கள் அடிக்கடி கூட்டங்களை நடத்துகின்றன. இந்தக் கூட்டங்களில் பாடப்படுகின்ற பாடல்கள் முறைப்படுத்தப்பட வேண்டுமென்ற நன்நோக்கில் இது வெளியிடப்பட்டுள்ளது.

மணிமன்றத் தந்தை தமிழவேள் கோ. சாரங்கபாணியைப் பற்றிய ஒரு பாடல்; அதைப் படித்தால் அவர் தோற்றம் நம் கண் முன்னே தோற்றமளிக்கும். இதையும் அன்பானந்தன் இயற்றி உள்ளார்.

சிங்கத்தை நிகர்த்தஉடல்
செம்மாந்த பெருந்தோற்றம்
வங்கக் கடல் முழக்கம்
வையத்தில் ஒரு வீரன்-கோ.சா.
வையத்தில் ஒரு வீரன்

தாலாட்டுப் பாடலொன்றில் சா. ஆ. அன்பானந்தன்

நாடு நமது நாடடா
நாடு நமது தாயடா
தாயைக் காப்பதாரடா
தானைத் தலைவன் நீயடா

என்று பாடியுள்ளது நமது நாட்டுப் பற்றையும் நமது செல்வங்களுக்கு அது பாலுடன் சேர்த்து ஊட்டப் படுகின்றது என்பதையும் தெளிவாக்குகிறது.

பாதாசன் இயற்றியுள்ள ஒரு பாடல் தமிழ் இளைஞர் மணி மன்றத்தின் நோக்கையும் போக்கையும் தெளிவாகக் காட்டுகின்றது.

என்னனை போதிலும்
கொள்கையை விட்டு-மன்றம்
எந்நாளும் போகாது
மானமும் கெட்டு
தாறுகை வேண்டிய நீ
இந்நாட்டுக்கு-கெட்டுத்
துரும்பாவதா? கெட்டி
இரும்பாவதா?

இப்படி ஒவ்வொரு பாடலும் ஒருமுறை படித்தாலே மனதில் பசுமரத்தாணிபோலப் பதிந்துவிடும் முறையில் உள்ளது.

ஐம்பது காசு விலையுள்ள இந்த நூல் சுங்கைவே-சுபாங் தமிழ் இளைஞர் மணிமன்றம், 111, ஜாலான் 14/58, பெட்டாலிங் ஜெயா, கோலாலம்பூர் என்னும் முகவரியில் கிடைக்கும்.


—'சாது'

தலைநகரின் தலைசிறந்த பயண ஏற்பாட்டாளர்கள்

ஐ. சி. சி. டிராவல்

(SELVAM HOLDINGS (MALAYSIA) SENDIRIAN BERHAD)

இடையூறுகள் இல்லாத சுற்றுலா
உல்லாசம் நிறைந்தது



பள்ளி ஆசிரியர்களின் வேண்டு
கோளுக்கிணங்க எதிர்வரும்
நவம்பர், டிசம்பர் விடுமுறையில்
மிக குறைந்த கட்டணத்தில்
தமிழ் நாட்டு சுற்றுப்பயண
ஏற்பாட்டு வாரியத்தின் கீழ், சிறப்பு
தென்னிந்திய சுற்றுலா ஏற்பாடு
செய்துள்ளோம்



இந்த ஆண்டின்
வட இந்தியச் சுற்றுலா
தேதிகள்

20-8-77
1-10-77
12-11-77
7-12-77

உலகெங்கும் டிக்கெட்டுகள் பெற எங்களை உடனே அணுகுங்கள்!

மேல் விவரங்களுக்கு:-

40, முதல் மாடி, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், கோலாலம்பூர். போன்: 85032, 85026.

19, லோரோங் திங்காட் [ரெம்பாவ் ஸ்திரீட் அருகில்] கிள்ளான். போன்: 383022.

111, ஜாலான் சேம்பர்லின், ஈப்போ. போன்: 512270. சிங்கப்பூர்-02-70798, 70751